
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 அக். '92

ரூ.2.50

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு




## ஆட்சிக் கவிழ்ப்பு பீதியில் 'ஜெ'யின் பாசிச அடக்குமுறை

படிப்பகம்

www.padippakam.com



## கருணாநிதி மீது விசாரணைக் கமிஷன் :

# ஊழலை மறைக்க ஜெயாவின் நாடகம்

பத்து சதவீத கமிஷனுக்கு வகை இல்லாத பைல்களின் பக்கம் பார்வையைச் செலுத்தாத அரசு என்று புகழ் பெற்றுள்ள ஊழல் நாயகி பாசிச ஜெயா அரசு, தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது ஊழல் விசாரணைக் கமிஷனை நியமித்துள்ளது. கருணாநிதி முதல்வராக இருந்தபோது செய்த அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம், ஊழல், நெருக்கமானவர்களுக்கு சலுகை ஆகிய குற்றச்சாட்டுக்களைப் பரிசீலித்த ஜெயாவின் அமைச்சரவை பொதுமுக்கியத்துவம் கருதி இந்த விசாரணைக் கமிஷனை அமைத்துள்ளதாகவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் இந்த விசாரணைக் கமிஷனின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் ஆறு மாதங்களுக்குள் விசாரணை நடத்தி இந்தச் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் ஜெயா அரசு கடந்த ஆகஸ்ட் 13-ந்தேதியன்று அறிவித்துள்ளது. இதுதவிர கருணாநிதி மற்றும் அவரது மனைவிகள், மகன்கள், மருமகன்கள், தி.மு.க. மாணவரணி செயலாளர் துரைமுருகன் ஆகிய 8 பேர் மீது தனியே கிரிமினல் வழக்கு தொடருமாறு போலீசுக்கு உத்திரவிட்டுள்ளது.

முன்பு சந்திரசேகர் பிரதமராக இருந்தபோது, அவரிடம் தமிழக காங்கிரசுத் தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையிலேயே இப்போது விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகியும் இப்புகார்களின் மீது அக்கறை காட்டாமல் இருந்துவிட்டு, இப்போது சில புதிய புகார்களையும் சேர்த்து ஜெயா அரசு அவசரமாக விசாரணைக் கமிஷன் அமைக்க காரணம் இல்லாமல் இல்லை.

★ பாசிச ஜெயா ஆட்சியில் ஏறியதும் அவரது ஊழலும் கொள்ளையும் சொத்துக்களும் ஏறத்தொடங்கிவிட்டன. ஐதராபாத்தில் சொகுசு பங்களா, ஊட்டியில் எஸ்டேட், சிங்கப்பூரில் சொத்து என ஜெயாவின் கொள்ளை சந்தி சிரிக்கிறது. சென்னையிலுள்ள அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை தனியாருக்கு விற்றதன் மூலம் 4 கோடி ரூபாய் கமிஷன், "ஸ்பிக்" உர ஆலையை தனியாருக்கு தாரை வார்த்ததன் மூலம் பல கோடி, ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை சாராய உடையாருக்குக் கையளித்ததன் மூலம் பல கோடி, விதிமுறைகளை மீறி டான்சி நிலச்சுருட்டல், ஆலய பாதுகாப்பு நிதி என்ற பெயரில் கோடிக்கணக்கில் வசூல் என ஜெயாவும் அவரதுவளர்ப்புப் பிராணிகளும், அந்தப்புர தோழி சசிகலாவின் குடும்பமும் ஊழலில் மூழ்கிப் போயுள்ளது. ஜெயா கும்பலை ஆதரிக்கும் பார்ப்பன பத்திரிகைகளே கூட அவரது ஊழலை அம்பலப்படுத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளதோடு, மக்களிடமிருந்து வெறுப்பையும் ஆத்திரத்தையும் சம்பாதித்துக் கொண்டு ஜெயா கும்பல் தனிமைப்பட்டுப் போயுள்ளது. போதாக் குறைக்கு, ஊழல் குற்றங்களுக்காக ஜெயா மீது கிரிமினல் வழக்கு தொடர அனுமதி கோரி தி.மு.க.-வினர் கவர்னரிடம் மனு கொடுத்துள்ளனர்.

★ மறுபுறம், கூட இருந்தே குழிபறிக் முயலும் குடும்ப நண்பர் நடராஜனுடன் ஏற்பட்டுள்ள தகராறு, அவர் தன்பின்னே கணிசமான எம்.எல்.ஏ.-க்களைத் திரட்டிக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவாரோ என்ற பீதி, அதன் காரணமாக கவர்னரைச் சந்தித்து ராஜினமா கடிதம் கொடுக்கும் அளவுக்கு விரக்தி. தமிழக காங்கிரசில் மூப்பனார் கோஷ்டி ஜெயாவுக்கு எதிராக கலகக் கொடி தூக்கியுள்ளதால் கூட்டணி உடைந்து ஆட்சி கவிழ்க்கப்படுமோ என்ற அச்சம், ஆட்சிக் கவிழ்ப்பு புரோக்கர் சுப்பிரமணிய சாமியின் சதிகள், பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து கெஞ்சியது, நாடாளுமன்ற அ.தி.மு.க. எம்.பி.-க்கள் காங்கிரசுக்குத் தாவிவிடுவார்களோ என்ற பயத்தினால் அவர்களிடம் விசுவாசப் பிரமாணக் கடிதம் வாங்கியது என்று கடந்த ஆகஸ்ட் மாதத்தில் குழப்பத்தில் சிக்கித் தவித்தார் பாசிச ஜெயா.

### அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே!**

கடந்த இரு இதழ்களையும் வெளியிட இயலவில்லை. இந்த இதழுடன் 3 இதழ்கள் சேர்த்து வெளியிடுகிறோம். அமைப்பு பணிகள் மற்றும் நிதி நெருக்கடியே தாமதத்திற்கு காரணம். முகவர்களும் வாசகர்களும் நிலுவையை, சந்தாவை முறையாக அனுப்பி ஒத்துழைக்க கோருகிறோம். இனி இதழை கிரமமாக கொண்டு வர பெரிதும் முயற்சிக்கிறோம். - ஆசிரியர் குழு.

இவை பத்திரிகைகளில் மெதுவாகக் கசியத் தொடங்கியதும் அரண்டுபோன ஜெயா, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும், தனது ஊழல் கொள்ளையை மூடிமறைக்கவும் அவசரமாகச் செய்துள்ள ஏற்பாடுதான் கருணாநிதி மீதான விசாரணைக் கமிஷன். 'நான் மட்டுமா ஊழல் செய்தேன், இதோ, கருணாநிதியின் ஊழல்களைப் பார்!' என்று புழுதிவாரித் தூற்றவும், அதன் பின்னே தனது ஊழல் பூத உருவத்தை மறைத்துக் கொள்ளவுமே பாசிச ஜெயா இந்தக் கமிஷனை நியமித்துள்ளார். கவர்னரிடம் ஜெயா மீதான ஊழல் புகார்களைக் கூறி தி.மு.க.-வினர் கிரிமில் வழக்கு தொடுப்பதற்கு முன்பாக கருணாநிதி மீது விசாரணைக் கமிஷன் அமைத்து, தி.மு.க.-வினருக்கு தார்மீக அடிப்படை இல்லை என்று காட்டுவதே ஜெயாவின் நோக்கமாக உள்ளது.

மற்றபடி, கருணாநிதியின் ஊழல்களைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதல்ல ஜெயா கும்பலின் நோக்கம். ஊழல் புதை சேற்றில் சிக்கியுள்ள அக்கும்பலுக்கு அதற்கான யோக்கியதை எதுவும் கிடையாது. ஏனெனில் தனது ஊழலுக்கு ஒத்துழைக்க மறுத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது குண்டர்களை ஏவி திராவகம் வீசிய கிரிமினல் கும்பலின் தலைவிதான் பாசிச ஜெயா.

மேலும், இந்த விசாரணைக்கு நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி சிவசுப்பிரமணியம், ஜெயா அரசுக்கு உச்ச நீதிமன்றத்தில் ஆஜரான வக்கீல் ஆவார். அவரது உறவினரான மீனாட்சி சுந்தரேஸ்வரன், உயர்நீதி மன்றத்தில் தமிழக அரசின் வக்கீலாக உள்ளார். இவர்கள், அரசு நிலத்தைக் கைப்பற்றி ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்ட முயலும் பழனி பெரியசாமி எனும் தரகுப் பெருமுதலாளியின் பங்காளிகள். பழனி பெரியசாமி, எம்.ஜி.ஆருக்கும் ஜெயாவுக்கும் நெருக்கமானவர். இந்தப் பின்னணியில் சிவசுப்ரமணியம் கமிஷன், நியாயமாகச் செயல்படும் என்று எந்த முட்டாளும் நம்பமாட்டான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திரா காந்தி மீது போடப்பட்ட "ஷா" கமிஷனும், எம்.ஜி.ஆர். மீது போடப்பட்ட "ரே" கமிஷனும், கருணாநிதி மீது அவசரநிலைக் காலத்தில் போடப்பட்ட சர்க்காரியா கமிஷனும் இன்னும் பல ஓட்டுக் கட்சித் தலைவர்கள் மீது போடப்பட்ட விசாரணைக் கமிஷன்களும் எந்தவிதமான ஊழலையும் தோண்டி எடுத்துக் கொண்டு வந்ததில்லை. விசாரணைக் கமிஷன் தரும் அறிக்கையின் அடிப்படையில் எந்தவொரு ஊழல் பெருச்சாளியும் தண்டிக்கப்பட்டதாக வரலாறில்லை. மாறாக, எதிர்த்தரப்பினர் மீது சேற்றை வாரி இறைக்கவும், வஞ்சம் தீர்க்கவும்தான் அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் லட்சக்கணக்கில் நமது வரிப்பணம் பாழானதுதான் மிச்சம்! எதிர்த்தரப்பினரை பழிதூற்றுவதன் மூலம் தனது ஊழல் கொள்ளையை மறைக்க முயலும் ஜெயாவின் எத்தணிப்புகளை, அரசியல் எத்து வேலைகளை அம்பலப்படுத்தி, விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும்.

● *மணி*

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

20 - 22

1 செப். - 15 அக்.'92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ஜார்கண்ட்: தீர்வு காணவில்லை; ஆதாயம் தேடுகிறது காங்கிரசு.

ஐம்பது ஆண்டுகளாக நீடித்து நிலவி வரும் ஜார்க்கண்ட் பிரச்சினையில் ஒரு முக்கியத் திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால், பிரச்சினை தீருவதாக இல்லை; ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளின் , குறிப்பாக ஆளும் காங்கிரசு கட்சியின் சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் அணுகுமுறையின் காரணமாக ஜார்க்கண்ட் பிரச்சினை மேலும் சிக்கலாகி உள்ளது. மொழி, இன, மதச் சிறுபான்மை மக்களது நியாயமான பிரச்சினைகளுக்கு நேர்மையான, சரியான, ஜனநாயகபூர்வமான தீர்வு காண்பதற்குப் பதில் குறுக்கு வழியில் சென்று அவற்றைத் தமது சொந்த அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது; ஆங்கிலேய எஜமானர்களிடம் கற்றுக்கொண்ட பிரித்தாளும் சூழ்ச்சியைப் பின்பற்றி ஒரு பிரிவுக்கு எதிராக மற்றொன்றை மோதவிட்டு இரத்தம் குடிப்பது; அரசியல் எதிரிகளைப் பழி வாங்கவும் வீழ்த்தவும் அவற்றைப் பயன்படுத்துவது - இவைதான் காங்கிரசுக்காரர்களின் வழக்கமாக இருப்பதைப் பார்க்கிறோம். கோர்க்காலாந்து, போடோலாந்து பிரச்சினைகளில் இப்படித்தான் செய்தது; பஞ்சாபில் இதே உத்தி காங்கிரசுக்காரர்களுக்கே எதிராகவும் ''எமனாகவும்'' திரும்பிய விபரீதத்தைப் பார்த்தோம். இருந்தாலும் ஜார்க்கண்ட் விவகாரத்திலேயும் இவ்வாறுதான் ''தீர்வு காண'' முயலுகிறார்கள்.

பீகார், மே.வங்கம், ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களில் உள்ள 13 மாவட்டங்களை உள்ளடக்கியவை சோட்டா நாகபுரி, சந்தால் பர்கானாக்கள் எனப்படும் ஆதிவாசிப் பகுதிகள். இரும்பு, நிலக்கரி, பாக்சைடு, அடர்ந்த காடுகள் என்று நாட்டிலேயே மிக அதிக இயற்கை வளம் மிக்க பிராந்தியம். ஐந்து இரும்பு - எஃகுத் தொழிற்சாலைகள், ஏராளமான நிலக்கரிச் சுரங்கங்கள், மின்மயமாக்கப்பட்ட ரயில்பாதைகள் போன்றவை இந்தப்பகுதியின் தொழில் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. ஆனால் இதற்கு நேரெதிராக இந்தப் பகுதியின் பூர்வகுடிகளான பல பத்து ஆதிவாசிப் பிரிவு மக்கள் மிகமிகப் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட நிலையில் வாழுகின்றனர். 70 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் ஆதிவாசிகளே பெரும்பான்மையினர். இன்றோ இப்பிராந்திய இயற்கை வளத்தையும் சுரங்கத் தொழிலில் ஆதிவாசிகளின் உழைப்பையும் சூறையாடுவதற்காக ''வெளியார்''கள் பெருமளவில் ஊடுருவியதால் ஆதிவாசிகள் மூன்றில் ஒருபகுதிச் சிறுபான்மையினராக ஆயினர்.

ஆகவே, ஒடுக்குமுறை, சுரண்டலில் இருந்து விடுபடும் ஒரு முயற்சியாக சோட்டா நாகபுரி, சந்தால், பர்கானா பகுதிகளை உள்ளடக்கி ஜார்க்கண்ட் என்கிற தனிமாநிலம் அல்லது யூனியன் பிராந்தியம் அமைக்கக் கோரி ஐம்பது ஆண்டுகளாக ஆதிவாசிகள் போராடி வருகின்றனர். ஆளும் கட்சிகளுடன் சந்தர்ப்பவாத கூட்டுச் சேர்ந்து ஆதாயம் தேடும் பிளவுவாதத் தலைமையும், அதுவும் பிளவுபட்டும் உள்ளதால் அவர்களது கோரிக்கை நிறைவேறாமல் நீடித்து வருகிறது. ஓரளவு கல்வியறிவு பெற்ற புதிய - இளைய தலைமுறையினர் களத்தில் இறங்கியதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் கோரிக்கை வலுப்பெற்று, சமீப காலங்களில் பல போர்க்குணமிக்க போராட்டங்களைக் கண்டது. அவற்றில் முக்கியமானது கடந்த ஆண்டு நடந்த ஜார்க்கண்ட் பிராந்தியப் பொருளாதாரத் தடை - முற்றுகைப் போராட்டம் ஆளும் வர்க்கங்களைக் கதிகலங்கச் செய்தது. அவர்களது தொழில் இயக்கத்தின் இதயத்தையே பிடித்து நிறுத்தி விடுவதாக அப்போராட்டம் அமைந்தது.

ஜனதா தளம் - தேசிய முன்னணி ஜார்க்கண்ட் பிரச்சினையைப் பயன்படுத்தி அதைத் தலைமையேற்று நடத்தும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவுடன் கூட்டுச் சேர்ந்து ஆதாயம் அடைந்தது; தேசிய முன்னணியிலும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா பங்கேற்றது. ஆனால் சந்திரசேகர் தலைமையிலான கிரிமினல் - மஃபியா கும்பல் ஆட்சிக்கு வந்தபோது அதைப் பிளந்தது. இப்போது சகுனி நரசிம்மராவ் அரசு, பீகாரில் உள்ள ஜனதா தள ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக ஜார்க்கண்ட் இயக்கத்தைப் பகடைக்காயாகப் பயன்படுத்த முயலுகிறது. பீகார் மாநிலத்தின் தென் பகுதியில் உள்ள ஜார்க்கண்ட் மாவட்டங்களுக்கும் சேர்த்து ''ஜார்க்கண்ட் பிராந்திய வளர்ச்சிக் கவுன்சில்'' என்கிற தனி ''சுயாட்சிப் பிரதேசம்'' அமைப்பதற்கான சட்டத் தீர்மானம் நிறைவேற்றி அரசுத் தலைவர் ஒப்புதலுக்காக ஓராண்டுக்கு முன்பே பீகார் ஜனதா தள அரசு அனுப்பிவிட்டது. ஆனால் அதற்கு ஒப்புதல் அளிக்காது கிடப்பில் போட்டுள்ளது மத்தியக் காங்கிரசு அரசு. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவைப் பிளந்து சிபு சோரன் தலைமையிலான ஒரு கும்பலை தமக்கு ஆதரவாக இழுத்துக் கொண்டு ஜனதா தள பீகார் அரசைக் கவிழ்க்க முயன்றது. இன்னொரு பிரிவான சைமன் மராண்டி குழு இன்னமும் ஜனதாதள அரசை ஆதரிக்கிறது. இப்போது ஜார்க்கண்ட் மாநிலப் போராட்டம் வலுப்பதைக் காரணங்காட்டி ''தனி மாநிலம் அல்லது யூனியன் பிராந்தியம் அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை'' என்று மத்திய உள்துறை மந்திரி அறிவித்தார். இதனால் பீகார் ஜனதாதள அரசை நெருக்கடியில் தள்ள முயன்றார். ஒன்று, மராண்டி பிரிவும் ஜனதாதள அரசுக்கு ஆதரவு தருவதை விலக்கிக் கொள்ள நேர்ந்து பீகார் அரசு கவிழும் அல்லது பீகாரின் ஒரு பகுதியை பிரித்தால் ஜனதா தளத்தின் எம்.எல்.ஏ. எண்ணிக்கை குறைந்து ஆட்சி கவிழும் என்பது காங்கிரசின் கணக்கு. ஆனால் இது-பீகார் காங்கிரசுக்குள்ளாகவே எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது.

பீகார் மாநிலத்தைப் பிரிப்பதைக் கடுமையாக எதிர்க்கும் ஜனதாதள் அரசு,

படிப்பகம்

www.padippakam.com



ஜார்க்கண்ட் பகுதியில் பெரும்பான்மை யினராகக் குடியேறி இருக்கும் பிற்பட்ட சாதியினரை ஆதிவாசிகளுக்கு எதிராகத் தூண்டி விடுகிறது. ஒரிசா, மே.வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை ஆளும் எதிர்க்கட்சிகளோ இது பீகாரின் பிரச்சினைதான் என்று கை கழுவிவிட்டு ஒதுங்குகின்றன. ஆனால் அம் மாநிலங்க ளின் சில மாவட்டங்களை உள்ளடக்கியு துதான் ஜார்க்கண்ட் பகுதி. ''நிர்வாக வச திக்காக நாங்கள் சிறு மாநிலங்கள் அமைப்பதை ஆதரிக்கிறோம். இது தேசி யப் பிரச்சினை; எனவே தேசிய அளவி லான மாநில மறுசீரமைப்புக் கமிசன் நிய மிக்க வேண்டும்'' என்று பாரதீய ஜனதா, ஜனதா தளம் போன்ற கட்சிகள் கூறிவரு கின்றன. இது ஜார்க்கண்ட் பிரச்சினை யைத் தள்ளிப் போடுவதற்குப் பின்பற்றும் சதி; உடனடியாகவே தீர்வு வேண்டும் என்று எல்லாப் பிரிவு ஜார்க்கண்ட் இயக் கத்தினரும் கோருகின்றனர்.

நாட்டிலுள்ள பல்வேறு தேசிய இன, சிறுபான்மையான மக்களது உரிமைக ளையும், உணர்வுகளையும் மதியாது அவை மத்திய அரசினால் அடக்கி, ஒடுக்



கப்படும் அமைப்புமுறைதான் இப்போது நிலவுகிறது. இந்தியக் கூட்டமைப்பு என் கிற பெயரில் எதேச்சதிகார ஒருமை முறைதான் நடக்கிறது. இதிலே மாநிலங்க ளாக அமைந்துள்ள தேசிய இனங்களே ஒடுக்கப்படும்போது அவற்றுக்குள்ளே சிக்குண்டுள்ள சிறுபான்மை இன மக்க ளுக்கு இழைக்கப்படும் நயவஞ்சகமும், கொடுமைகளும் சொல்லி மாளாது. ஆகவே விழிப்புறும் தேசிய இனங்க ளைப் போலவே, சிறுபான்மை இன மக்க ளும் போராடுகின்றனர். தனி மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் அமைந்து, முதல்வர் முதலிய மந்திரி பதவிகளைப் பெறுவதாலேயே இவர்கள் சுய உரிமை பெற்றுவிடவும் முன்னேறி விடவும் முடி யாது. ஒடுக்கப்படும் தேசிய இனங்க ளுக்கு சுயநிர்ணய உரிமையும், சிறு பான்மை மக்களுக்கு பிரதேச சுயாட்சி யும் உள்ள உண்மையான மக்கள்-ஜனநா யகக் கூட்டமைப்பே அவற்றைப் பெற் றுத் தரமுடியும். இந்த விரிந்த கோரிக்கை யைக் கையில் எடுக்கும்படி வலியுறுத்தும் அதே சமயம் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள், சிறுபான்மை இன மக்களின் நியாயமான இப்போராட்டங்களை ஆத ரிப்போம்.

# ஆட்சிக்கவிழ்ப்பு பீதியில் அடக்குமுறையை ஏவும் பாசிச ஜெயா கும்பல்

**பா**சிஸ்டுகள் தனது நிழ லைக்கூட நம்புவதில்லை. அது தன்னை அழிக் கத்தான் துரத்துகிறது என்று அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள். பாசிச ஜெயாவும் இதற்கு விதிவி லக்கு அல்ல. தனது அந்தப்புர தோழியான சசிகலாவின் கணவர் நடராஜனுடன் ஏற்பட்ட தகராறு,அவர் கணிசமான எம்.எல்.ஏ. க்க ளைத் தன் பின்னே திரட்டிக்கொண்டு ஆட்சி யைக் கவிழ்த்துவிடுவாரோ என்ற பயம். ஆட் சிக் கவிழ்ப்பு கில்லாடி என்று புகழ்பெற்றுள்ள சகுனி சுப்பிரமணியசாமி, இன்னும் 90 நாட்க ளில் ஜெயா ஆட்சியை கவிழ்க்கப் போவதாக விடுத்துள்ள சவால், அவருடன் நடராஜனும் அ.தி.மு.க. அதிருப்தியாளர்களும் கூடிக்குலா வுவது, கூட்டணிக்கட்சியான காங்கிரசில் மூப் பனார் கோஷ்டியினர் 'மானத்தோடு வாழ் வோம்' என்று ஜெயாவுக்கு எதிராக கலகக் கொடி தூக்கியிருப்பது, உளவுத்துறையினர் மூலமாக ஜெயா கும்பலின் ஊழல்களை மத் திய அரசு ரகசிய விசாரணை செய்து வருவது ஆகியவற்றால் பீதியில் உறைந்து போயுள்ளார் ஜெயா.

பாசிஸ்டுகள் அடிப்படையிலேயே கடைந்தெடுத்த கோழைகள், மிகச்சாதாரண எதிர்ப்புகளையும் தோல்விகளையும் கூட அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.




ஜெயலலிதா, இப்போதைய நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் விரக்தியின் விளிம் புக்கே சென்றார். குடும்ப நண்பர் நடராஜனு டன் ஏற்பட்ட தகராறையடுத்து, அவரது மனைவி சசிகலாவும் போயஸ் தோட்டத்திலி ருந்து வெளியேறியதும் மனமுடைந்துபோன அவர், கடந்த ஆகஸ்ட் முதல்வாரத்தில் கவர் னரை அவசரமாகச் சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த கவர்னர், ஜெயாவின் ராஜினாமா விவகாரத்தை மூடிமறைத்து, உணர்ச்சிவசப்பட்டு இத்தகைய விபரீத முடி வுக்குச் செல்ல வேண்டாம் என்று ஆறுதல் கூறி யதோடு, முன்னாள் குடியரசுத் தலைவர் வெங் கட்ராமன் மூலமாக சமாதானப்படுத்தியுள் ளார். ஜெயாவை அச்சுறுத்தும் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயத்தின் பின்னணிதான் என்ன?

### கூட இருந்தே குழிபறிக்கும் நடராஜன்

ஜெயாவின் அந்தப்புர தோழியான சசிக லாவின் கணவர் நடராஜன், 1989 முதலாக அவரது உதவியாளராகச் செயல்பட்டு அவரது தேர்தல் வெற்றிக்காகச் செயல்பட்டவர். கடந்த தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்ததி லிருந்து மந்திரிகளையும், அதிகாரிகளையும் நியமிக்கும் அளவுக்கு ஜெயாவின் கண்ணும் காதும் முகமும் மூளையுமாக சசிகலா - நடரா ஜன் குடும்பம் உள்ளது. ஜெயாவின் சார்பாக அதிகாரிகளுக்கு உத்திரவு போடுவதும், பெரு முதலாளிகளிடம் பேரம் நடத்துவதும், கோடி கோடியாய் கொள்ளையடிப்பதும், எஸ்டேட், பங்களா என வாங்கிக்குவிப்பதோடு, வெளி நாட்டு ரகசிய வங்கிகளில் கொள்ளையடித்த பணத்தைக் குவிப்பதுமாக ஜெயாவின் பெய ரால் அதிகார வரம்பிற்கு கொஞ்சமும் சம்பந்த மில்லாத இந்த கும்பலே ஆட்சியை நடத்தி வருகிறது.

சசிகலா - நடராஜன் குடும்பத்தின் நிழல் ஆட் சியை ஜெயா அங்கீகரித்த போதிலும், தமிழக அரசியலில் நேரடியாக இறங்கி அதிகாரத்தைச் சுவைக்க நடராஜன் முயற்சிப்பதை அவர் விரும்பவில்லை. அப்படிச் செய்தால் தனது பெயரைச் சொல்லி வளர்ந்து, தன்னையே அவர் விழுங்கிவிடுவார் என்று அஞ்சினார். எனவேதான், நடராஜன் தனக்கு எம்.பி. பத வியோ, மந்திரி பதவியோ தருமாறு பலமுறை கோரியும் ஜெயா அதை ஏற்க மறுத்தார். இத னால் பிணக்கு கொண்ட நடராஜன் தனது பலத் தையும் செல்வாக்கையும் காட்டி ஜெயாவை மிரட்டிப் பணிய வைக்கும் நோக்கத்துடன் ''தமிழ் அரசி'' என்ற பத்திரிகையைத் துவக்கி னார். ஆறு மாதம்கூட நிரம்பாத அப்பத்திரி



படிப்பகம்

www.padippakam.com

கைக்கு வாசகர் வட்ட விழாக்களை கோலாகல மாக நடத்தியதோடு, வாசகர் வட்டப் பேரவை என்ற பெயரில் ''வருங்கால முதல்வரே வருக!'' என்று பளபளப்பான சுவரொட்டிகளைத் தெருவெங்கும் ஒட்டியும், தனது ஆதரவு எம். எல். ஏ.க்களோடு அ.தி.மு.க. அதிருப்தியாளர் களையும் சேர்த்துக் கொண்டு 100 கார்களில் பவனி வருவதுமாக இருந்தார். சோ, மூப்ப னார், சுப்பிரமணிய சாமி ஆகியோருடனும் ரகசியமாகக் கூடிக்குலாவி வந்தார்.

ஜெயா ஆட்சிக்கு எதிராக அ.தி.மு.க. அல்லாத மூன்றாவது அணியைக் கட்டிவருவ தாகக் கூறும் சுப்பிரமணிய சாமியுடன் நடரா ஜன் தொடர்பு வைத்துள்ளதைக் கண்டு அவர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்குவதாக ஜெயா பீதியடைந்தார். கும்பகோணத்தில் நடத்த இருந்த வாசகர் வட்டப் பேரவைக் கூட் டத்தை தடுத்து நிறுத்துமாறு போலீசுக்கு ஜெயா உத்தரவிட்டதன் பேரில், குண்டுப் புரளி கிளப்பி கூட்டத்தை போலீசார் ரத்து செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த நடராஜன், ஜெயாவு டன் தங்கியிருந்த தனது மனைவி சசிகலாவை தன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விட் டார். தனது உயிர்த்தோழி தன்னைவிட்டுச் சென்றதால் ஏற்பட்ட பிரிவுத் துயர் காரணமாக வும், நடராஜன் தனது ஊழல் ரகசியங்களை அம்பலப்படுத்தி விடுவாரோ என்ற பீதியின் காரணமாகவும் விரக்தியடைந்த ஜெயா, கவர் னரிடம் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்துள் ளார்.

இச்சம்பவத்துக்குப் பிறகு ஊடல் முடிந்து சசிகலா ஜெயாவிடம் திரும்பிய போதிலும், நடராஜனைப் பற்றிய அச்சம் இன்னும் ஜெயா விடமிருந்து அகலவில்லை. ''நடராஜன் தமி ழக முதல்வராக ஆசைப்படுகிறார்; சுப்பிரம ணிய சாமி இந்தியப் பிரதமராக ஆசைப்படுகி றார்'' என்று ஆத்திரத்துடன் பத்திரிகையாளர்க ளிடம் புலம்பித் தீர்த்தார். நடராஜனுக்கு ஆதர வாகச் செயல்படுவதாகக் கருதும் சில உயரதி காரிகளை பதவி மாற்றம், இடமாற்றம் செய் தும், நடராஜனுடன் யாரும் தொடர்பு கொள் ளக் கூடாது என்று எம்.எல்.ஏ.க்களை மிரட்டி யும், முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரும் அதி ருப்தியாளருமான வி.வி.சாமிநாதனை கட்சி யிலிருந்து நீக்கியும் சில அதிரடி நடவடிக்கை களை எடுத்து, தனது தலைமையை நிலை நாட்ட முயற்சிக்கிறார். இந்நடவடிக்கைகள் மூலம் அதிருப்தியாளர்கள் அணி சேர்வதைத் தடுக்க முயற்சித்தாலும், மந்திரிகளோ, மக் களோ தொடர்பு கொள்ள முடியாமல் கருப்புப் பூனைகளின் பாதுகாப்பில் வாழும் ஜெயாவி னால் கட்சியை கட்டுப்பாடாக வழிநடத்திச் செல்ல ஒருக்காலும் முடியாது. நடராஜன் மற் றும் அதிருப்தியாளர்கள் தற்காலிகமாக பின் வாங்கியுள்ளார்களே தவிர, நாளை மீண்டும் கலகம் செய்வார்கள் என்பது நிச்சயமாகிவிட் டது.

**சுப்பிரமணிய சாமியின்**
**சகுனித்தனம்**

சகுனி சுப்பிரமணிய சாமி, அண்மைக் காலமாக தமிழகத்தில் முகாமிட்டுக் கொண்டு, அ.தி.மு.க. அதிருப்தியாளர்களை ரகசியமாக சந்தித்து வருவதோடு ஜெயா அரசை வீழ்த்திக் காட்டுவேன் என்று சவால் விட்டு வருகிறார்.



சுப்பிரமணிய சாமிக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கூறும் நடராஜன்: மூன்றாவது அணி அமைக்கும் முயற்சி.

ஜெயா ஆட்சியில் ஊழல் பெருகிவிட்டது என் றும், கொலைப் பட்டியலிலிருந்து தன்னை தற் காத்துக் கொள்ள தனது பிரதிநிதிகள் மூலம் புலிகளுடன் பாரீசில் ரகசிய பேரம் நடத்தியுள் ளார் என்றும் குற்றம் சாட்டுகிறார். அண்மைக் காலமாக தமிழக கடற்கரைப் பகுதிகளில் புலிக ளின் நடமாட்டமும், கடத்தலும் அதிகரித்து விட்டது;தமிழகத்தில் மீண்டும் பிரிவினை வாத சக்திகள் தலைதூக்கி வருகின்றன என்றும் ஜெயா அரசு இவற்றைத் தடுக்கத் தவறிவிட் டது என்றும் சாடுகிறார். கருணாநிதி மற்றும் ஜெயா ஆட்சிகள் மோசமானவை; இரண்டை யும் தவிர்த்து மூன்றாவது அணியைக் கட்டிய மைக்கப் போவதாகவும் அதன்மூலம் தமிழகத் தில் நல்லாட்சியை நிறுவப் போவதாகவும் எச் சரித்துள்ளார். இதுதவிர ஜெயாவின் உத்திர வுப்படியே ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரியான சந்திரலேகா மீது திராவகம் வீசப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்கள் சிக்கிவிட்டன என்றும் ஜெயா மீது கிரிமினல் வழக்கு தொடரப் போவ தாகவும் அச்சுறுத்தி வருகிறார்.

**மூப்பனார் கோஷ்டியின்**
**கலகம்**

மறுபுறம், தமிழக காங்கிரசில் மூப்பனார் தலைமையிலான கோஷ்டியினர். அ.தி.மு.க. - காங்கிரசு கூட்டணிக்கு மங்களம் பாடக் கோரி கலகம் செய்கின்றனர். ஜெயாவுக்குத் துதிபா டும் தமிழக காங்கிரசுத் தலைவர் வாழப்பாடி

> **ஆட்சியைத் தக்கவைத் துக் கொள்வதற்காக ஈழ ஆதரவு இயக்கங்கள் மற் றும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் மீது ஜெயா கும்பல் அடக்குமுறை யைத் தீவிரப்படுத்தும். பிரிவினைவாதிகள் - பயங்கரவாதிகள் என்று முத்திரைகுத்தி அடுத்த சுற்று பாசிச அடக்குமு றையைக் கட்டவிழ்த்துவி டும்.**

ராமமூர்த்தி கோஷ்டியினர் கட்சியை அ.தி. மு.க.வுக்கு அடமானம் வைத்துவிட்டதாகக் குற்றம் சாட்டும் மூப்பனார் கோஷ்டி, ''மானத் தோடு வாழ்வோம்!'' என்ற முழக்கத்துடன் கூட்டணிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வரு கிறது. மதுரை மாநாட்டில் அ.தி.மு.க.வின் தேர்தல் வெற்றிக்கு ராஜீவ் சாவினால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமல்ல என்று ஜெயல லிதா திமிராகப் பேசியதையும், பழனி இடைத் தேர்தலில் மூப்பனார் ஆதரவு வேட்பாளர் நிறுத்தப்பட்டால் அவரை வீழ்த்துவோம் என்று அமைச்சர் அரங்கநாயகம் ஆணவமா கப் பேசியதையும் குறிப்பிட்டு, இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது; கூட்டணி என் றால் நாங்கள் அடிமைகளல்ல என்று ஜெயாவை ஆவேசமாக எதிர்க்கிறது மூப்ப னார் கோஷ்டி.

சு.சாமி கூறுவது போல தமிழகத்தில் புலி களின் கடத்தல் அதிகரித்துவிட்டதாகவும், பிரி வினை சக்திகள் தலைதூக்கி வருவதாகவும் குற் றம் சாட்டும் மூப்பனார் கோஷ்டி, தமிழகத்தில் தோல்வியடைந்துவெள்ளிவிழா கண்டுவிட்ட காங்கிரசுக்குப் புத்துயிர் அளிக்க தேசிய பேரவை என்ற அமைப்பைத் தொடங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. ஏற்கனவே மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிகளுக்கிடை யிலான நாய்ச்சண்டை முற்றியுள்ள நிலையில், இப்போது அது பகிரங்க தெருச் சண்டையாக முன்னேறியிருக்கிறது. வரப்போகும் சட்ட மன் றக் கூட்டத்தொடரிலும் இது எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நரசிம்மராவின்**
**நரித்தனம்**

காங்கிரசில் கோஷ்டி சண்டைகள் புழுத்து நாறிய போதிலும், ஜெயா அரசுக்கு நெருக்கடி கொடுக்க ஒருபுறம் சு.சாமியையும் மறுபுறம் மூப்பனாரையும் பிரதமர் ராவ் கும்பல் ஏவி விட்டுள்ளதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அது வேறொரு தொலை நோக்குத் திட்டத் தோடு காய்களை நகர்த்துகிறது. முதலாவதாக, மத்தியில் சிறுபான்மை ராவ் அரசு ஆட்சிக்கு வந்தபோது தனக்கு உயிர்ப்பிச்சை அளிக்க அ.தி.மு.க.வின் தயவைக் கெஞ்சிக் கொண்டி ருந்தது. இதற்காக ஜெயா அகங்காரத்தோடு நடந்துகொண்டு அவமானப்படுத்திய போதி லும் அவற்றை சகித்துக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது நிலைமை முன்போல் இல்லை. அ.தி.மு.க.வின் தயவின்றியே கட்சி

படிப்பகம்

# யார் இந்த சுப்பிரமணிய சாமி?

சுப்பிரமணிய சாமியின் பெயரைக் கேட்டாலே ஜெயா கும்பல் அலறி நடுங்குகிறது. முன்பு கருணாநிதியின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் முன்நின்ற சாமி, அதே போல் தமது ஆட்சியையும் கவிழ்த்துவிடுமோ என்ற பீதியில் அ.தி.மு.க.வினர் உறைந்து போயுள்ளனர். அண்மையில் ஜனதாதளக் கட்சியின் 12 எம்.பி.க்களிடம் பேரம் நடத்தி கட்சியை உடைப்பதில் அவர் வெற்றி பெற்ற பிறகு கட்சி உடைப்பு - ஆட்சிக் கவிழ்ப்பு மன்னர் என்று அவர் பெருமையாக அழைக்கப்படுகிறார். தற்போது பீகார் ஜனதா தள ஆட்சியைக் கவிழ்ப்பதில் கவனம் செலுத்தி வருவதாகவும், தனது அடுத்த குறி தமிழ்நாடுதான் என்றும் கூறிவருகிறார் சு.சாமி.

தமிழகத்தின் சோழவந்தானைச் சேர்ந்த பார்ப்பனராகிய இந்த சாமி, இத்தகைய சகுனித்தனங்கள் - தரகுவேலைகள் மூலம் பிரபலமாகி சமாஜ்வாடி ஜனதா கட்சியில் சேர்ந்து சந்திரசேகரின் ஆட்சியில் மத்திய மந்திரியாகச் செயல்பட்டவர். தற்போது அக்கட்சியின் எம்.பி.யாக உள்ள சாமி, சர்வதேச கிரிமினல் - மாஃபியா கும்பலின் நெருங்கிய கூட்டாளி. அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ; இஸ்ரேலிய மொசாத் கும்பலுடன் ரகசிய உறவு வைத்துள்ள சுப்பிரமணிய சாமி, ரகசிய உலகப் பேர்வழிகளின் கூட்டாளிகளான போலிச்சாமியார் சந்திராசாமி, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் முதலானோர் அடங்கிய இந்தக் கும்பலுக்கு சித்தாந்தமோ, கொள்கையோ, அறநெறியோ எதுவும் கிடையாது. ராஜீவின் போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையை மூடி மறைக்க ரகசிய உலகப் பேர்வழிகளுடன் சேர்ந்து போலி ஆவணங்கள் தயாரித்தும், வி.பி.சிங் மகனுக்கு செயின்ட்கிட்டீஸ் தீவிலுள்ள வங்கிகளில் ரகசிய கணக்கு உள்ளதாக போர்ஜரி செய்தும் பாசிச ராஜீவுக்கு இந்தக்கும்பல் விசுவாசமாக வேலை செய்தது. இப்போது காங்கிரசுக்கு வெளியே இருந்து கொண்டு ராவ் அரசின் நம்பகமான கைக்கூலியாக செயல்பட்டு வருகிறது.




ஓட்டுக் கட்சி அரசியல், பிழைப்புவாதத்திலும் கிரிமினல் மயமாவதிலும் மூழ்கிவிட்ட நிலையில், சுப்பிரமணிய சாமி போன்ற விஷக் கிருமிகள் வளர்ந்து ஆதிக்கம் செலுத்துவதை ஒருக்காலும் தடுத்துவிட முடியாது. இது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அழிவு மட்டுமல்ல; அதன் அந்திமக்கால இறுதிநிலையின் வெளிப்பாடு!

மாறிகளின் ஆதரவைக் கொண்டு மயிரிழைப் பெரும் பான்மையில் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, அ.தி.மு.க. என்பது கொள்கை - லட்சியம் ஏதுமற்ற பிழைப்புவாதிகளைக் கொண்ட கூடாரம். எனவே அதில் கணிசமான மந்திரிகள், எம்.எல்.ஏ.- எம்.பி.க்களை விலைபேசிவிட முடியும். ஓரங்கட்டப்பட்ட முன்னாள் மந்திரிகள் குறிப்பாக, ஜானகி அணியினரையும் அதிகாரச்சுவை காணத்துடிக்கும் நடராஜன் கும்பலையும் கொண்டு அ.தி.மு.க.வை பிளப்பது - இப்புதிய கட்சியோடு காங்கிரசு கூட்டணி சேர்ந்து ஆட்சியைத் தொடருவது என்று அது கணக்கு போடுகிறது.

மூன்றாவதாக, பதவியில் இல்லாவிட்டால் ஜெயா அரசியலில் நீடிக்க மாட்டார்; எதிர்க்கட்சியாக அரசியல் நடத்துமளவுக்கு அவரிடம் உறுதிகிடையாது. முன்பு கருணாநிதி ஆட்சியின் போது மூட்டுவலி, முழங்கால் வலி என்று சாக்கு போக்கு கூறி ஐதராபாத்துக்குச் சென்று படுத்துக் கொண்டதைப் போல, நெருக்கடி வந்தால் அரசியலை விட்டே ஓடிப் போய் விடுவார் என்று அது கருதுகிறது.

நான்காவதாக, அ.தி.மு.க.வைப் பிளந்து அதனுடன் கூட்டணி சேர்ந்து சிறிது காலம் ஆட்சி நடத்திய பிறகு - சாதமான நிலைமையை உருவாக்கிக் கொண்டு, கூட்டணியை முறித்துக் கொள்வது; முன்பு சந்திரசேகர் அரசை ராஜீவ் கவிழ்த்ததைப் போல, ஊழலும் பிரிவினைவாத சக்திகளும் பெருகிவிட்டதாக குற்றம் சாட்டி ஆட்சியைக் கலைத்து தேர்தலை அறிவிப்பது; இந்தப் பிழைப்புவாத அ.தி.மு.க. கூடாரத்துக்கு மக்களைச் சந்தித்து தேர்தல் பிரச்சாரம் செய்யுமளவுக்கு அரசியல் பலமோ, கவர்ச்சிகரமான தலைமையோ இல்லாமல் சிதைந்து போய்விடும். அதே நேரத்தில், திராவிட இயக்க கட்சிகளாலோ, பிராந்தியக் கட்சிகளாலோ பிரிவினை சக்திகளை ஒடுக்கி நிலையான ஆட்சியைத் தரமுடியாது; தேச ஒற்றுமையைக் காத்து நிலையான ஆட்சியைத் தரவல்லது காங்கிரசுதான் என்ற மாயையைத் தோற்றுவித்து, காங்கிரசு ஆட்சியைத் தமிழகத்தில் நிறுவுவது என்ற தொலைநோக்குத் திட்டத்துடன் ராவ் கும்பல் முயற்சிக்கிறது.

இந்த ஆட்சிக் கலைப்பு நடவடிக்கைகளால் காங்கிரசுக்கு அவப்பெயர் ஏற்படாதிருக்கவே, சுப்பிரமணிய சாமி ஏவி விடப்பட்டுள்ளார். நேற்றுவரை ஜெயாவின் அரசியல் குருவாக இருந்த துக்ளக் "சோ" கூட, அவரது ஊழலை அம்பலப்படுத்துவதோடு, திராவிடக் கட்சிகளிடமிருந்து தமிழகத்தை மீட்க வேண்டிய கடமையும் பொறுப்பும் காங்கிரசிடம்தான் உள்ளது என்று உசுப்பிவிட்டு வருகிறார்.

### பிரிவினைவாத பீதியூட்டி மீண்டும் அடக்குமுறை

ஆட்சிக் கவிழ்ப்பு நெருக்கடியில் சிக்கியுள்ள ஜெயாவுக்கு, இந்த அபாயத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அறவே கிடையாது. டெல்லிக்கு காவடி தூக்கியும், அதிருப்தியாளருக்கு கட்சியிலும் பதவிகளைக் கொடுத்து சாந்தப்படுத்தியும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே அவர் குறியாக இருக்கிறார். மூப்பனார், சு.சாமியின் குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்று நிரூபிப்பதற்காக, ஈழ ஆதரவு இயக்கங்கள் மற்றும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் மீது ஜெயா கும்பல் அடக்குமுறையைத் தீவிரப்படுத்தும். புலிகளின் கடத்தலைத் தடுப்பது என்ற பெயரில், பிரிவினைவாதிகள் - பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அடுத்த சுற்று பாசிச அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும். அதன் மூலம் காங்கிரசின் பாசிச நோக்கங்களை நிறைவேற்றும். தமிழகப் பங்காளி என்பதை நிரூபிக்கும்.



கூட்டணிக்கு மங்களம் பாடும் மூப்பனார்.

அதன் முதற்படியாக, தமிழர் வாழ்வுரிமை மாநாடு நடத்தி, புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பா.ம.க. தலைவர் ராமதாசு, பண்ருட்டி ராமச்சந்திரன், த.தே.கட்சியின் நெடுமாறன் உட்பட 7 பேரை தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி பாசிச ஜெயா அரசு கைது செய்துள்ளது.

ஜெயா கும்பலின் மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ள தமிழக மக்கள், திரைமறைவில் நடந்து வரும் சிம்மாசன வேட்டையையும், அரண்மனைச் சதிகளையும் கண்டு வேறொரு ஆட்சி வந்தால் பரவாயில்லை என்று அதன் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அது நாயிடமிருந்து தப்பிக்க பேயிடம் சிக்கிக் கொள்வதாகிவிடும். புரட்சியாளர்கள் தலைமையில் உழைக்கும் மக்கள் அணிதிரள்வதன் மூலமே பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டி காலூன்ற முயலும் பாசிச காங்கிரசின் எத்தணிப்புகளையும், பெருகிவரும் ஜெயா கும்பலின் அடக்குமுறையும் முன்கை எடுத்து முறியடிக்க முடியும்.

பச்சையப்பன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# கடற்படையினரின் கொலைவெறியாட்டம்

**1992,** ஆகஸ்டு 15 அன்று (போலி) சுதந்திரத் தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் சர்மா பேசுகையில் ''வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை களைய நாட்டுமக்கள் 'தேசிய' அளவில் முயற்சி எடுக்க வேண்டும்'' என்று பேசினார். அன்று இரவு தமிழகத்தில் - புதுக்கோட்டை மாவட்டத்தில் மீமிசல் அருகேயுள்ள பாலக்குடியில் கடற்படையினர் அதிகார போதையில் வெறிபிடித்து துப்பாக்கி சூடு நடத்தி அப்பாவி பெண்ணைக் கொன்ற கொடுமை நிகழ்ந்தது. ராணுவ வெறியர்களின் இச்செயல் பயங்கரவாதமில்லையா? பயங்கரவாதத்திலும் கொடிய அரசு பயங்கரவாதம்! வன்முறையிலும் கொடிய மிருகத்தனமான வன்முறை!

மீமிசலிலிருந்து ஜெகதாப்பட்டினம் வரை உள்ள கிராமங்களுக்கு தண்ணீர், குழாய் மூலம் கிடைக்க 10 வருடங்களுக்கு முன்பு அரசு ஏற்பாடு செய்து கொடுத்தது. இதற்கிடையில் விடுதலைப்புலிகளை ஒடுக்கவும், கடத்தல்களை தடுக்கவும் எனக்கூறி கடற்படை முகாம் ஒன்று ஜெகதாப்பட்டினத்தில் அமைக்கப்பட்டது. இந்த முகாமுக்கும் பொதுக்குழாயில் இணைப்புக் கொடுத்து தண்ணீர் வழங்கியது அரசு. வறட்சியின் காரணமாக பொதுவாகவே குழாயில் நீர்வரத்து குறைந்துபோனது. மேலும் வழியில் கிராம மக்கள் தண்ணீர் பிடிப்பதாலும் இறுதியாக உள்ள முகாமுக்கு நீர் குறைந்தது. இதற்கு மாற்று ஏற்பாடு செய்ய அரசை நிர்பந்திப்பதற்கு பதில் கடற்படையினர் அதிகார மமதையில் மக்கள்மீது பாய்ந்தார்கள். கிராம மக்கள் பயன்படுத்தும் குழாய்களையெல்லாம் உடைத்தனர். தண்ணீர்பிடிக்க முடியாதபடி மரத்தையோ, துணியையோ வைத்து அடைத்து விடுவார்கள். இதனால் கிராமமக்கள் தண்ணீரின்றி தவிப்பதும் காசு கொடுத்து தண்ணீர் வாங்குவதுமாக அவதிபடுகின்றனர். பொறுமையிழந்த மக்கள் ஆங்காங்கே கடற்படையினரின் அத்துமீறலுக்கு எதிராகவும் பொங்கியெழுந்தனர். கடற்படையினர் அடைத்த குழாய்களை அடைப்பை நீக்கி பயன்படுத்தச் செய்தனர். இதனால் கடற்படையினருக்கும் மக்களுக்கும் இடையில் அடிக்கடி வாய்வழிச் சண்டைகள், மோதல்கள் நடத்துள்ளன. பெரும்பாலும் கடற்படையினர் தமது ஆயுதங்களைக் காட்டியே மக்களை மிரட்டி அடக்கி வைத்தனர்.

பாலக்குடியில் உள்ள மீன் பதப்படுத்தும் கம்பெனியில் வேலை செய்யும் பெண்கள் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தபோதும் கடற்படையினர் வந்து தகராறு செய்து குழாயை அடைத்ததோடு பாத்திரங்களையும் பிடுங்கிச் சென்றனர்.

15-ந்தேதி இரவு கம்பெனிக்கு அருகில் இருந்த ஒரு தண்ணீர் குழாயை உடைக்க முயற்சித்தார்கள் கடற்படையினர். குழாயை உடைக்க முடியாததால் உபகரணம் கேட்க கம்பெனிக்கு வந்தனர். அப்பொழுது 4,5 பெண்கள் சேர்ந்து பாத்திரத்தை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டுள்ளனர். கடற்படையினர் தரமுடியாது என மறுத்து பிறகு சுசிலா என்ற பெண்ணை பலவந்தமாக பிடித்து இழுத்துக் கொண்டு அவரிடம் கொடுத்தனுப்புவதாக கூறி கடத்திச்செல்ல முயன்றனர். உடனே கம்பெனியில் வேலைசெய்த 45 பெண்களும் ராணுவத்தினரின் வாகனத்தைச் சுற்றிவளைத்து சுசீலாவை மீட்டுள்ளனர்.



சுட்டுக் கொல்லப்பட்ட மதலைமேரி

இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத ராணுவத்தினர், தமது அதிகாரத்திமிறைக் காட்டுவதற்காக சிறிது நேரத்தில் மீண்டும் ராணுவ வாகனத்தில் வந்தனர். அந்த 5 மிருகங்கள் நவீனரக துப்பாக்கிகளுடன் (AK47) இறங்கி வந்து கம்பெனி முதலாளி பெரியசாமியைத் தேடி பலமாக தாக்கினர். சூப்பர்வைசரையும் தாக்கினர். பெண்களையும் தாக்க எத்தணித்தபோது பெரியசாமி அவர்களை தடுத்து. பெண்களை ''ஓடுங்கள்... ஓடுங்கள்....'' என்று கத்தினார். மேலும் வெறியேறிய அம்மிருகங்கள் கண்மூடித்தனமாகச் சுட்டனர். பெரியசாமியின் மீது குண்டு பாய்ந்தது. ஓடிய பெண்களில் மதலமேரியையும் துப்பாக்கி ரவைகள் துளைத்தன. உடல் சிதறிய நிலையில் அங்கேயே மாண்டு போனார் மதலமேரி. பிற பெண்களை விரட்டிச் சென்று துப்பாக்கியால் தாக்கினர். பலர் முள் கம்பி வேலிகளைத் தாண்டி தப்பித்தனர். இரண்டு பெண்களை கடல்பக்கமாக ராணுவத்தினர் விரட்டிச் சென்றார்கள். பெண்கள் அகப்படவில்லை. அகப்பட்டிருந்தால் முகாமுக்குத் தூக்கிச் சென்றிருப்பார்கள்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு மீனவர்களும் பகுதி மக்களும் திரண்டனர். ராணுவத்தினரின் கொலைவெறித் தாக்குதல் செய்தி பரவும் வெகுண்டெழுந்த மக்கள் மீமிசல் முதல் ஜெகதாப்பட்டினம் வரை சாலையில் திரண்டனர். பீதியடைந்த ராணுவத்தினர் ஆயுதங்களோடு நின்று முகாமை பாதுகாத்தனர். சுற்றுவட்டாரங்களிலிருந்து வந்த போலீசும் ராணுவத்தினருக்கு பாதுகாப்பு கொடுத்தது. ''கடற்படையினரை கைது செய்து தண்டனையளிக்க வேண்டும்'' என்ற குரல் மக்களிடையே பரவலாக எழுந்தது. பதட்ட நிலையைத் தவிர்க்கும் பொருட்டும், பிரச்சினையை பெரிதாக்காமல் முடக்கும் பொருட்டும் கைது உத்தரவை தமிழக அரசு பிறப்பித்தது. மக்கள் வேண்டுகோளின்படி மீமிசல் வழியாக ராணுவத்தினரைக் கைது செய்து அனுப்பி ராணுவத்திடம் ஒப்படைத்தனர்.

இது வெறும் தண்ணீர் பிரச்சினை யல்ல; ராணுவத்தினரால் அப்பகுதி மக்கள் படும் பல்வேறு இன்னல்களின் ஒரு பகுதி தான் இத்தண்ணீர் பிரச்சினை. முகாம் இப்பகுதிக்கு வந்தது முதல் ராணுவத்தினரின் அட்டகாசங்கள் பொறுக்க முடியாதவை. பெண்களை கிண்டல் செய்வது, வம்பிழுப்பது, ஆபாச சேஷ்டைகள் செய்வது என அட்டூழியம் புரிகின்றனர். மீனவர்களைத் தாக்குவது அவர்களது மீன்களை அபகரிப்பது, பகுதி மக்களிடமிருந்து பொருட்களை பலவந்தமாக பறிப்பது என ஆட்டம்போட்டு வருகிறார்கள். மீனவர்கள் அடையாள அட்டைகளைக் காட்டினாலும் இவர்களது தொல்லையிலிருந்து மீளமுடியவில்லை. இக்கும்பல் மீனவர்களையும், பகுதி மக்களையும் ''புலிகள்'', ''கடத்தல்காரர்கள்'' என அறிவித்து ''தேடுதல் வேட்டை'' என அவ்வப்போது பாய்ந்து குதறுகிறார்கள். இத்தகைய கொடுமைகளால் நெருப்பாக கனன்று கொண்டிருந்த பகுதி மக்கள், துப்பாக்கிச் சூட்டிற்குப்பின் வெகுண்டெழுந்த தீயாக எழுந்து சாலைகளில் திரண்டு ராணுவத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

ஏதாவது சாக்கு கிடைத்தால் போதும் ராணுவ மிருகங்கள் அப்பாவிகளை சுட்டுக் கொல்வது, கொடிய சித்திரவதைக்குள்ளாக்குவது, கற்பழிப்பது, சூறையாடுவது என பேயாட்டம் போடுவார்கள். ஏனெனில் அசாம், காஷ்மீர், பஞ்சாப் என எங்கெல்லாம் ராணுவமும் துணைராணுவப் படைகளும் சென்று முகாமிட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் இதுதான் நடந்தது; நடக்கிறது. எனவே கடற்கரை பகுதி வாழ்மக்களுக்கு அன்றாட பிரச்சனைகளுக்கான போராட்டங்களைக் காட்டிலும் ராணுவக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டமே முன் தேவையாகியுள்ளது. அதாவது தமிழகத்தில் உள்ள அனைத்து ராணுவம், ராணுவ துணைப் படைகளை திருப்பியழைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை வைத்து போராட வேண்டும்.

**தகவல்: பு.மா.இ.மு., காரைக்குடி.**

படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசின் கயவாளித்தனம்

*துரோகிகளை உருவாக்கி எதிர்க்கட்சிகளைப் பிளப்பது, ஆட்சியைக் கவிழ்ப்பது - கலைப்பது, கட்சிமாறிகளைக் கொண்டு பினாமி ஆட்சியை அமைப்பது என்கிற அயோக்கியத்தனங்களின் மூலம் தனது பலத்தைப் பெருக்கிக் கொள்ள சிறுபான்மை ராவ் அரசு நாயாய் அலைகிறது. கழிசடை காங்கிரசு செய்துவரும் தகிடுதத்தங்கள் அனைத்தும் நாடாளுமன்ற ஜனநாயகமே கேவலமான கேலிக் கூத்து என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.*

எல்லாவற்றுக்கும் ஒருவிலை உண்டு. பதவி, பணம், மது, விபச்சார சுகத்திற்காக சோரம்போகத் துணிந்துவிட்ட 'மாண்புமிகு' மக்கள் நிரதிநிதிகளான - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு விலை உண்டு. இன்றைய சந்தை நிலவரப்படி கட்சி மாறும் ஒரு எம்.பி.யின் விலை ரூ.50 லட்சம். கணிசமான எம்.பி.-க்களை தன் பின்னே திரட்டிக் கொண்டு கட்சி மாறும் முக்கிய தலைவருக்கு ரூ.10 கோடி; கூடவே மத்திய மந்திரி பதவியும் உண்டு! கடந்த ஆகஸ்ட் மாதத்தில் காங்கிரசுக்கு ஆதரவாக ஜனதாதளக் கட்சியில் ஏற்பட்ட பிளவும் பேரமும் இதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

துரோகிகளை உருவாக்கி எதிர்க் கட்சிகளைப் பிளப்பது, ஆட்சியைக் கவிழ்ப்பது - கலைப்பது, பினாமி ஆட்சிகளை அமைப்பது, கட்சி மாறிகளை வைத்து தானே ஆட்சியைப் பிடிப்பது என்பது காங்கிரசின் கழிசடை பாரம்பரியத்தில், ஊறிப்போன அரசியல் சாணக்கியம். இத்தகைய அயோக்கியத்தனங்களின் மூலம் தனது பலத்தைப் பெருக்கிக்கொள்ள மத்தியிலுள்ள சிறுபான்மை ராவ் அரசு நாயாய் அலைகிறது. சர்வதேச கிரிமினல் - மஃபியா கும்பலின் கூட்டாளிகளான சந்திரசேகர் - சந்திராசாமி - சுப்பிரமணியசாமி ஆகிய தரகர்களைக் கொண்டு மீண்டும் ஆள்பிடிக்கும் தகிடுதத்தங்களில் ராவ் அரசு இறங்கியுள்ளது.

ஏற்கனவே தெலுங்கு தேசக் கட்சியை எட்டப்படன் உபேந்திரா மூலம் பிளந்து எட்டு எம்.பி-க்களை காங்கிரசு தன்பக்கம் இழுத்துக் கொண்டது. அதன்பிறகு மராட்டியத்தில் இந்துவெறியூட்டி அரசியல் ஆதாயம் அடைவதில் சிவசேனாவுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இருந்த போட்டி - மோதலைப் பயன்படுத்திக் கொண்டு அவ்விரு கட்சிகளுக்கிடையிலான கூட்டணியை காங்கிரசு உடைத்தது. சிவசேனாவுக்குள்ளேயே தலைவர் பால்தாக்கரேவுக்கும் துணைத் தலைவர் பூஜ்பாலுக்குமிடையிலான அதிகார மோதலைப் பயன்படுத்தி, பூஜ்பாலுக்கு மந்திரி பதவி கொடுத்து சிவசேனாவைப் பிளந்தது. மத்தியிலும் இரண்டு சிவசேனா எம்.பி-க்களை தனக்கு ஆதரவாக வளைத்துப் போட்டுக்கொண்டது. பல்வேறு குழுக்களின் கூட்டமைப்பாக உள்ள ஜார்க்கந்த் முக்தி மோர்ச்சாவிலும் தனது கைவரிசையைக் காட்டி இரண்டு எம்.பி.-க்களை தன் பக்கம் இழுத்துக் கொண்டது. ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே அசாம் கணபரிஷத் கட்சியின் ஒரு எம்.பி.-யையும், நாகாலாந்து, மிஜோராம், மாநிலக் கட்சிகளின் இரு எம்.பி.-க்களையும் விலைபேசி காங்கிரசில் இணைத்துக் கொண்டது. குஜராத்தில் அரசியல் விபச்சார முதல்வர் சிமன்பாய் பட்டேல் தலைமையில் மந்திரி சபையையே காங்கிரசுக்குக் கட்சி மாறச் செய்தது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த சிறிது காலத்திற்குள்ளேயே ஜனதாதளக் கட்சியை உடைத்து அஜித்சிங் கும்பலை இழுக்க காங்கிரசு முயற்சித்தது. ஆனால் கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்திலிருந்து தப்பிவிடும் அளவுக்கு மூன்றிலொரு பங்கு எம்.பி.-க்களை இழுக்க அஜித்சிங் கும்பலால் முடியவில்லை. 4 பேரைக் கொண்ட அதிருப்தி கோஷ்டியாக செயல்பட்ட அஜித்சிங் கும்பலை கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் ஜனதாதளக் கட்சி அதிகாரபூர்வமாக வெளியேற்றியது.

அதன் பிறகு கடந்த மார்ச் மாதத்தில் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, அந்த பலப்பரீட்சையில் வெற்றி பெற ஜனதாதள எம்.பி.-களுக்கு ராவ் அரசு வலை வீசியது. அதிலே புதிதாக 4 எம்.பி-க்கள் கிடைத்தனர். கட்சி முடிவை மீறி நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த அந்த நால்வர் கும்பலை கடந்த ஜூலையில் ஜனதா தளக் கட்சி வெளியேற்றியது. ஏற்கனவே வெளியேற்றப்பட்ட அஜித்சிங் கோஷ்டியோடு இந்த நால்வர் கும்பலும் சேர்ந்து நாடாளுமன்றத்தில் தனி கோஷ்டியாக இயங்கியது.

தவணை முறையில் ஜனதா தளத்தை உடைப்பதில் வெற்றியடைந்த காங்கிரசு, மீண்டும் கணிசமான எம்.பி.-க்களை இழுக்கும் வேட்டையில் இறங்கியது. இதற்காக நரசிம்மராவின் மகன் ராஜேஸ்வரராவ், அவரது கூட்டாளி பாஸ்கரராவ், சுப்பிரமணியசாமி, ராவ் கும்பலின் ஆஸ்தான கிரிமினல் மதகுருவான சந்திரசாமி ஆகியோர் ஏவிவிடப்பட்டனர். பீகாரைச் சேர்ந்த ஜனதாதள அதிருப்தி எம்.பி.-யான ராம்லகான் சிங் யாதவை முன்னிறுத்தி இந்த கும்பல் பணப்பெட்டியுடன் அலைந்தது. 24 எம்.பி.-க்களைக் குறிவைத்து பதவி, பணம், மது, விபச்சார சுகத்தோடு இக்கும்பல் பேரம் நடத்தியது.

"டெல்லியிலுள்ள 'ஹாலிடே - இன்' எனும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்துடன் பேரம் நடந்தது. சுப்பிரமணிய சாமியும், பாஸ்கரராவும் என்னைச் சந்தித்தனர். ஜனதா தளத்திலிருந்து ஏற்கனவே 19 பேர் விலக முடிவு செய்துள்ளதாகவும், விலகல் கடிதத்தில் நான் கையெழுத்திட்டால் ரூ.30 லட்சம் தருவதாகவும் கூறினார்கள். இதற்குச் சம்மதித்தால், அடுத்த கட்டமாக சபாநாயகர் முன்பு விலகியவர்கள் நேரில் ஆஜராகும்போது மேலும் ரூ.20 லட்சம் தருவதாகவும் வாக்களித்தார்கள். பிரதமர் நரசிம்மராவ் ஏற்பாட்டின்படியே தான் வந்துள்ளதாகவும், இந்த பேரத்திற்கு உடன்பட்டால் மத்திய துணை மந்திரிப் பதவி வாங்கித் தருவ

**பீகார்: கட்சி மாறிய ஜனதாதள எம்.பி.க்களின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

தாகவும் சுப்பிரமணியசாமி என்னிடம் சத்தியம் செய்தார். நான் விரும்பும் இடத்தில் எனக்கென ஒரு பெட்ரோல் 'பங்க்'கும், சமையல் வாயு விநியோக உரிமையும் உடனடியாகப் பெற்றுத் தருவதாகக் கூறினார். ஆனால் நான் இந்த அயோக்கியத்தனத்துக்கு உடன்பட மறுத்துவிட்டேன்'' என்கிறார் உ.பி.யின் ஜனதாதள எம்.பி.யான ஹரி கேவல் பிரசாத்.

வேடிக்கை என்னவென்றால், இந்த எம்.பி.யும் ஊசலாட்டத்தோடு விலகல் கடிதத்தில் கையெழுத்திட்டு 'முதல் தவணைப் பணமாக ரூ.30 லட்சம் வாங்கிவிட்டார். அதன் பிறகு செய்தியறிந்த ஜனதாதள தலைவர்களில் ஒருவரான ஜார்ஜ் பெர்னாண்டஸ், இவரைச் சரிகட்டி தம்பக்கம் இழுத்துக் கொண்டு, இவர் மூலமாகவே இந்த பேரத்தை அம்பலப்படுத்தினார். ஹரி கேவல் பிரசாத் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், ''முதற்கட்டமாக ஜனதாதளத்திலிருந்து விலகுவது, பிறகு அஜித்சிங் தலைமையில் எல்லோரும் காங்கிரசில் இணைவது, அடுத்தகட்டமாக பீகார், ராஜஸ்தான் மாநிலங்களில் கணிசமான எம்.எல்.ஏக்களை விலைபேசி நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து ஆட்சியைக் கலைத்து காங்கிரசு ஆட்சியை நிறுவுவது என்பதே இந்த பேரத்தின் நோக்கமாக இருந்தது. இதைச் செயல்படுத்துவதற்காக அஜித்சிங்குக்கு மத்திய மந்திரி பதவி தருவதாகக் கூறியதோடு ரூ.10 கோடியையும் சுப்பிரமணிய சாமி மூலம் கொடுத்துள்ளனர்'' என்றார். பீகாரிலிருந்து 5 எம்.பி.-க்களை தன்னோடு இழுத்து வந்த ராம்லகான்சிங் யாதவ், தனக்கு மந்திரி பதவியும் ரூ.5 கோடியும் கேட்டு அஜித்சிங்குடன் நடத்தும் நாய்ச்சண்டையிலிருந்தே இவை அனைத்தும் உண்மைதான் என்று நிரூபணமாகிறது. பணம், பதவி ஆசைகாட்டி வலைவீசிய போதிலும் இப்போதைக்கு 12 ஜனதாதள எம்.பி.க்களே கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

கட்சித் தாவலை ஊக்குவித்த கயவாளி காங்கிரசு, இப்போது கட்சித் தாவல் தடைச் சட்டத்தையே கேலிக்கூத்தாக்கியுள்ளது. 1985-ல் பாசிச ராஜீவ் கொண்டுவந்த கட்சித் தாவல் தடுப்புச் சட்டப்படி, ஒரு கட்சியைச் சேர்ந்த எம்.பி.யை அந்தக் கட்சியே நீக்கினால் அவரது எம்.பி. பதவி பறிபோகாது. அதேபோல அக்கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்களில் மூன்றிலொரு பங்கினரோ, அதற்கும் மேற்பட்டவர்களோ மொத்தமாக விலகினாலும் அவர்களது பதவி பறிக்கப்படாது. இது கட்சித் தாவல் அல்ல; கட்சியில் ஏற்பட்ட பிளவு என்கிறது அச்சட்டம். அதே சமயம் மூன்றிலொரு பங்கிற்குக் குறைவானவர்கள் விலகினால் அது பிளவு அல்ல; கட்சித்தாவல். இதன் காரணமாக அவர்களது எம்.பி. பதவி பறிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் ஜனதாதளக் கட்சியின் பலம் 59 பேர். இதிலே 8 பேர் இரு தவணைகளில் ஏற்கனவே விலக்கப்பட்டுள்ளனர். இப்போது 12 பேர் கட்சித் தாவியுள்ளனர். இந்த 12 பேர் என்பது தாய்க்கட்சியின் பலத்தில் 1/3 பங்கிற்கும் குறைவானதாகும். எனவே கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த 12 பேரின் எம்.பி. பதவியை ரத்து செய்ய வேண்டும்.

ஆனால் காங்கிரசு சபாநாயகரான சிவராஜ் பட்டீல் அவ்வாறு செய்யவில்லை. ஏற்கனவே ஜனதா தளத்திலிருந்து இரு தவணைகளில் விலக்கப்பட்ட 8 பேராடு தற்போது கட்சியிலிருந்து விலகியுள்ள 12 பேரையும் சேர்த்து நாடாளுமன்றத்தில் ஒரே அணியாக இருக்கைகள் அளிக்குமாறு உத்திரவிட்டார். கட்சித் தாவல் சட்டப்படி விலக்கப்பட்டவர்களும் விலகியவர்களும் ஒரே அணியாகிவிட முடியாது. இது சட்டவிரோதமானது மட்டுமல்ல; இந்த 20 பேரையும் ஒரே குழுவாக ஏற்று தனி இடம் ஒதுக்கியதன் மூலம், ஜனதா தளத்தின் 59 உறுப்பினர்களில் 1/3 பங்கினரான 20 பேர் தனிக்குழுவாக இருப்பதாகக் காட்டி இது கட்சித் தாவல் அல்ல; கட்சியில் ஏற்பட்ட பிளவு என்று நிரூபிக்க கீழ்த்தரமாக முயற்சித்தார்,



கட்சி மாறிய ஜனதாதள எம்.பி.க்கள்: அரசியல் விபச்சாரிகள்.

சபாநாயகரின் இச்சதியை எதிர்த்து தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆவேசமாகக் கூச்சலிட்டன. அதைத் தொடர்ந்து, இது இடைக்கால உத்திரவுதான் என்றும் செப்டம்பர் இறுதிக்குள் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி இந்த 12 எம்.பி.க்கள் பதவி இழக்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி இறுதித் தீர்ப்பு வழங்குவதாகவும் சபாநாயகர் கூறியுள்ளார்.

ஆனால், இறுதித் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதற்கு முன்னோடிதான் இந்த இடைக்கால உத்திரவு என்று எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஜனதாதளக் கட்சி செல்லாக் காசாகிவிட்டதால் அதிலிருந்து பல எம்.பி.க்கள் விலகுவதாகவும், கட்சித் தாவல் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும் என்றும் காங்கிரசுக் கயவாளிகள் நியாயம் கற்பிக்கின்றனர். செப்டம்பர் இறுதிக்குள் மேலும் சில எம்.பி.க்களை இழுக்கவும், அவர்களைக் கொண்டு பீகார் ஜனதா தள எம்.எல்.ஏ.க்களை விலை பேசி ஆட்சியைக் கவிழ்க்கவும் காங்கிரசு தீவிரமாக முயற்சிக்கிறது. இதனால் ஆத்திரமடைந்த பீகார் ஜனதாதளக் கட்சியினர், கட்சித் தாவிய எம்.பி.க்களின் கொடும்பாவி எரிப்பு, பிண ஊர்வலங்களை நடத்தியதோடு, பாட்னாவுக்கு வந்த புரோக்கர் சுப்பிரமணிய சாமியை 'கெரோ' செய்து விரட்டியடித்தனர். இதேபோல, தமிழகத்திலும் சு.சாமியைக் கொண்டு அ.தி.மு.க. எம்.எல்.ஏ., எம்.பி.க்களை விலை பேசும் முயற்சியையும் காங்கிரசு மேற்கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்காக காங்கிரசு செய்துவரும் தகிடுதத்தங்கள் அனைத்தும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேவலமான கேலிக்கூத்து என்று மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. நாடும் மக்களும் எக்கேடு கெட்டாலும் ஐந்தாண்டுகளுக்கு 'நிலைத்திருப்பதே' காங்கிரசின் நோக்கமாக இருக்கிறது. ஆனால் எண்ணிக்கை அடிப்படையிலான இந்த அற்பப் பெரும்பான்மைகூட அரசியல் விபச்சாரிகளான கட்சிமாறிகளின் தயவில்தான் தொங்கிக் கொண்டிருக்கிறது. காங்கிரசுக்குள்ளேயே அர்ஜுன்சிங், சரத்பவார், திவாரி ஆகிய பதவி வெறியர்களுக்கிடையிலான நிழற்சண்டை தீவிரமாகி வருகிறது. தென் மாநிலங்கள் அனைத்திலும் கட்சிக்குள் கோஷ்டி சண்டையும் குத்துவெட்டும் எல்லைமீறிப் போயுள்ளதோடு, ஆந்திரா - கர்நாடகாவில் காங்கிரசு ஆட்சியே கலகலத்துப் போய் நிற்கிறது. பெருகிவரும் கோஷ்டி சண்டைகளும் பதவிப் போட்டிகளும் நாளை பகிரங்கப் போராக வெடிக்கவும் செய்யும். அது காங்கிரசின் 'நிலையான' ஆட்சிக் கனவைச் சுட்டெரிப்பதோடு, நாடாளுமன்ற அராஜகத்தை மேலும் தீவிரமாக்கவே செய்யும்.

● குமார்

படிப்பகம்

www.padippakam.com




● *தடாவைத் தகர்ப்போம், தமிழகத்தை மீட்போம்' என ம.க.இ.க.வின் மையத் துண்டறிக்கை வெளிவந்துள்ளதில் 'நம்மிடையே ஆயிரம் கருத்துவேறுபாடுகள் இருப்பினும் இந்தக் கொலைகாரச் சட்டத்தையும், அதனை ஏந்தி மிரட்டும் ஜெ. ஆட்சியையும் எதிர்த்துப் போராடுவதும் அனைவரின் கடமை' என அறைகூவி அழைத்தீர்கள். (அறைகூவல் யாருக்கோ?) ஆனால் 'தடா எதிர்ப்பு இயக்கம்' என தமிழ்நாட்டில் பல அமைப்புகள் சேர்ந்து இயக்கம் கண்டு வருவதை 'முதலாளிய அமைப்புகள்' என்ற முத்திரையோடவாவது அங்கீகரித்து நீங்கள் கூட தலைமை ஏற்றுக்கொள்ளலாமே! ஏன் இதை மறுக்கிறீர்? இதற்கான காரணங்களை எக் கோட்பாட்டின் வெளிச்சத்தில் பார்ப்பது?*

*— செல்வ வினாயகம், கோவை-15.*

★ ''கூட்டு நடவடிக்கைகள்'' பற்றிய எமது நிலைப்பாடுகளைத் தனிப்பிரசுரமாகவே வெளியிட்டிருக்கிறோம். அதில் கூறப்படும் கொள்கைகளையே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். அந்தக் கொள்கைகள் தவறானவை என்பதாக எவரிடமிருந்தும் விமர்சனங்கள் இல்லை. கோட்பாடு ரீதியில் அவை சரியானவை என்று ஏற்றுக் கொள்ளும் மாற்றுக் குழுக்கள் நடைமுறையில் அவற்றுக்கு மாறான எல்லாவகையிலான சந்தர்ப்பவாதக் கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்; இந்தப் போக்கிற்கு நாம் வளைந்து கொடுக்க மறுப்பதால் நமது அணுகுமுறை ''குழுங்குழுவாதம்'' என்று அவதூறு செய்கின்றனர்.

மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்காரியம் ஆகியவற்றை வெவ்வேறு அளவுகளில் ''இணைத்துக் கொண்டுள்ள'' அமைப்புகள் தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரத்துக்கும் மேலாக உள்ளன. இவை அனைத்துமே கிட்டத்தட்ட பெயர்ப்பலகை அமைப்புகள்தாம். ஒவ்வொன்றும் விரல்விட்டு எண்ணக்கூடிய நபர்களைக் கொண்டவைதாம். இவை ''மழைக்குத் தோன்றி மறையும்'' காளான்களைப் போல, கடந்த 15 ஆண்டுகளில் பல கூட்டமைப்புகளில் சேர்ந்து ''இயக்கம் கண்டு'' வருகின்றன. இந்தக் கூட்டமைப்புகளின் அனுபவங்களைக் காணாது நாமும் இவற்றோடு இணைய வேண்டும் என்று கோருவதும், மறுத்தால் அவதூறு செய்வதும் நடக்கிறது.

மேலும் கூட்டு நடவடிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஏற்படுவது. பெயர்ப்பலகை அமைப்புகளோடும், கூட்டு நடவடிக்கைக்கான நோக்கத்தில் உண்மையான அக்கறை இல்லாத அமைப்புகளோடும் இணைந்து எந்த நோக்கத்தையும் நிறைவேற்றிட முடியாது. இதன் காரணமாகத்தான் ''தடா எதிர்ப்பு இயக்கம்'' போன்ற கூட்டமைப்புகளில் நாம் சேரவில்லை. மற்றபடி அந்தக் கூட்டமைப்புகள் ''முதலாளித்துவ முத்திரை'' உள்ளவை, நமது தலைமையில் இல்லாதவை என்பதற்காக அல்ல. போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள், தி.மு.க., பா.ம.க. போன்ற மக்கள் திரள் தன்மையுடைய பல்வேறு கட்சிகளுடன் பொதுவான நோக்கம், முழக்கத்திற்காக கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அவை தமது தேர்தல் நோக்கத்திற்கு பயன்படும் அமைப்புகளுடன் மட்டுமே கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புகின்றன. அல்லது புரட்சிகர அமைப்புகளை தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் அனுகுகின்றன. பா.ம.க. பல பெயர்ப்பலகை அமைப்புகளுடன் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தனக்கு ஒரு புரட்சிகர, முற்போக்கு சாயம் பூசிக் கொள்ளவும் அதை தனது தேர்தல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவும் முயலுகிறது. ஆகவே இந்த அமைப்புகளுடன் இப்போதைக்கு கூட்டு நடவடிக்கை என்பது அவர்களால் சாத்தியமற்றதாக்கப்பட்டுள்ளது. ''தடாவை எதிர்ப்போம். தமிழகத்தை மீட்போம்'' என்கிற நமது அறைகூவல் மேற்படி பெயர்ப்பலகை அமைப்புகளுக்கு விடுக்கப்பட்டதும் அல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளிலும் கட்சி சாராமலும் பார்ப்பன - பாசிச ஜெயாவின் ஆட்சிக்கு எதிராக குமுறிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்டதுதான்.

● *''ஸ்டாலினுக்குப் பிறகு ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தை ஒரு அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் குருஷேவ் - பிரஷ்நேவ் கும்பல் கைப்பற்றியதும் அங்கு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஆட்சி நிறுவப்பட்டுவிட்டது''. என்று கூறியுள்ளீர்கள் (பு.ஜ. 6/18-20) அப்படியெனில் ஸ்டாலின் காலத்திலேயே கட்சித் தலைமையில் திரிபுவாதிகள் வந்துவிட்டனரா? கட்சித் தலைமையைத் திரிபுவாதிகள் கைப்பற்றியவுடன் கட்சி எப்படி திரிபுவாதத்தை ஏற்றுக் கொண்டது? கட்சியில் உள்ள மா.லெ. அணிகள் ஏன் கண்டிக்கவில்லை? குருஷேவ் கும்பல் எப்படி ஸ்டாலினிய புரட்சிகர கம்யூனிச கட்சியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது?*

*— சந்திரபாசு, அரங்கனூர்.*

★ ஸ்டாலின் காலத்தில் மட்டுமல்ல, லெனின் காலத்திலேயே திரிபுவாதப் போக்குகளும், திரிபுவாதிகளும் கம்யூனிசக் கட்சித் தலைமைக்குள் இடம் பெற்றிருந்தனர். டிராட்ஸ்கி, புகாரின், ஜினோவிவ் போன்றவர்கள் கட்சியின் மத்தியக் குழுவிலும் சோவியத் குடியரசில் அமைச்சர்களாகவும் இருந்தனர். 1917 அக்டோபர் புரட்சி நாட்களிலேயே, முதலாளித்துவ அச்சகங்களைப் பறிமுதல் செய்வதற்கு எதிராக கட்சி மற்றும் அரசில் இருந்து இத்தகையவர்கள் விலகியதும், இவர்களுக்கு எதிராக லெனினே பகிரங்கக் கண்டன அறிக்கை மூலம் ''இவர்கள் புரட்சிக்குத் துரோகமிழைத்து ஓடுகிறார்கள்'' என்று சாடிய பிறகு மக்கள் நிர்பந்தம் காரணமாக கட்சி மற்றும் அரசு முடிவுகளை ஏற்றனர்.

அவ்வளவு ஏன், மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் காலத்திலேயே, அவர்கள் கம்யூனிச சித்தாந்தத்தை உருவாக்கியபோதே, கம்யூனிச இயக்கம் தோன்றியபோதே போலிக் கம்யூனிஸ்டுகளும், திரிபுவாதிகளும் இருந்தனர்; அவர்கள் முதலாவது கம்யூனிச அகிலத்தின் தலைமையையே கைப்பற்றும் அளவுக்குப் பலமாக இருந்தனர் என்பதும் உண்மைதானே! மாவோ காலத்திலேயே லியோசௌசி, தெங்சியாவோ பிங், நால்வர் கும்பல் மற்றும் லின் பியாவோ ஆகிய திரிபுவாதிகள் கம்யூனிசக் கட்சியின் தலைமையின் இருக்கவில்லையா? மாவோவே கட்சியின் சிறுபான்மை ஆகிவிடும் அளவுக்கு திரிபுவாதிகள் பலம் பெற்றிருக்கவில்லையா? ''புரட்சி வெற்றி பெற்ற பிறகும் வர்க்கப் போராட்டம் நீடிக்கிறது. சோசலிச சமுதாயத்தில் எதிரி எங்கே இருக்கிறான். இதோ, இங்கே, கம்யூனிசக் கட்சிக்குள் இருக்கிறான். அவன்தான் கட்சிக்குள் மறைந்திருக்கும் முதலாளித்துவப் பாதையாளன். கலகம் செய்வது நமது உரிமை. தலைமையகத்தைத் தாக்கித் தகறுங்கள்'' என்று மாவோ அறைகூவல் விடவில்லையா?

> *கூட்டு நடவடிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஏற்படுவது. பெயர்ப்பலகை அமைப்புகளோடும், கூட்டு நடவடிக்கைக்கான நோக்கத்தில் உண்மையான அக்கறை இல்லாத அமைப்புகளோடும் இணைந்து எந்த நோக்கத்தையும் நிறைவேற்றிட முடியாது.*



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே, ஸ்டாலின் காலத்திலேயே கட்சித் தலைமையில் திரிபுவாதிகள் இருந்தது ஒன்றும் அதிசயமானதல்ல! சுத்தம் சுயமான, முற்றிலும் புரட்சிகரமானவர்களை மட்டுமே கொண்ட கம்யூனிசக் கட்சி என்று உலகில் எப்போதுமே இருந்ததில்லை. கம்யூனிசக் கட்சி என்றிருந்தாலே அதற்குள் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தைப் பிரதிபலிக்கும் புரட்சியாளர்கள், முதலாளித்துவ சித்தாந்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் திரிபுவாதிகள் ஆகிய இரண்டு சக்திகள் இருப்பது தவிர்க்க முடியாது. இவ்விரு சக்திகளுக்கு இடையிலான முரண்பாடும், அதன் விளைவாக இருவழிப் போராட்டங்களும் நிலவவே செய்யும். அந்த இரு வழிப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் பெரும்பான்மையாக இருந்து தலைமையைக் கைப்பற்றுவதில் வெற்றிபெறும்போது அது புரட்சிக் கட்சியாகவும், முதலாளித்துவ சித்தாந்தத்தைப் பிரதிபலிக்கும் திரிபுவாதிகள் பெரும்பான்மையாகியோ, அல்லது அதிரடி எதிர்ப்புரட்சி நடவடிக்கை மூலமோ தலைமையைக் கைப்பற்றும் போது அது திரிபுவாதக் கட்சியாகவும் இருக்கிறது. ஸ்டாலின் காலத்திய கம்யூனிசக் கட்சியை ''ஸ்டாலினிசக் கட்சி'' என்று கூறுவது சரியல்ல. ''ஸ்டாலினிசம்'' என்று எதுவும் இருந்ததில்லை. ஏகாதிபத்தியவாதிகளும், புதிய இடதுகளும், திரிபுவாதிகளும் ''லெனினியப் போல்சவிஷத்''துக்கு எதிராக உருவாக்கிய அவதூறுதான் இந்த ''ஸ்டாலினிசம்''. கட்சி மற்றும் அரசின் அதிகாரத்தை குருஷேவ் - பிரஷ்நேவ் கும்பல் கைப்பற்றியபோது மா-லெ அணிகள் எதிர்க்காமல் இல்லை. இந்த எதிர்ப்பை நசுக்கத்தான் ஆயிரக்கணக்கான மா-லெ புரட்சியாளர்களை குருஷேவ் - பிரஷ்நேவ் கும்பல் கைது செய்து, படுகொலையும் செய்தது. இப்படிச் செய்ததைப் பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் அறிக்கைகளும் ஆவணங்களும் கோர்பி காலத்தில் இருந்து ரஷ்யப் பத்திரிக்கைகளில் ஏராளமாய் வெளிவருகின்றன.

● *என்னைப் போன்ற இளைஞர்களுக்கு உலகில் உள்ள எல்லா கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர அமைப்புகளும் (சி.பி.ஐ., சி.பி.எம் உட்பட சில கருத்துவேறுபாடுகளை மறந்துவிட்டு) ஒன்றுபட்டு மக்களுக்காக போராட வேண்டாமா? போராட வேண்டிய அமைப்புகளே பல பிரிவுகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றிக் குறை சொல்கிறீர்களே. உங்களை எப்படி மக்கள் நம்புவார்கள். மக்களுக்கு நீங்கள் எப்படி உதவ முடியும். எனவே ஒன்றுபட்டு போராட தாங்கள் தயாரா? பிரிந்து செயல்படுவதால் ஆட்சியாளர்களுக்குக் கொண்டாட்டந்தானே!*

*— மல்லியங்கரை, செங்குட்டுவன்.*

*(இவர் உட்பட பல வாசகர்களும் இதே பொருளில் கேள்விகள் கேட்டுள்ளனர்.)*

★ பொதுவுடமை இயக்கத்தின் மீது கொண்டிருக்கும் நல்லெண்ணம், நம்பிக்கை, அபிமானம் ஆகியவற்றின் விளைவாக எழுவதுதான் இத்தகைய ''ஐக்கிய'' விருப்பம். அதோடு பொதுவுடமை இயக்கம் பிளவுபட்டிருப்பதால்தான் அது இந்நாட்டில் வெற்றிபெற முடியவில்லை என்பதாலும் மாற்று இயக்கங்களின் இழிநிலை கண்டு வெறுப்புற்றிருப்பதாலும் கூட இத்தகைய ''ஐக்கிய'' விருப்பம் எழுகிறது. பொதுவுடமை இயக்கத்தாலாவது இந்த நாட்டிற்கு விடிவு வராதா என்கிற ஆதங்கமும் கூட இதில் அடங்கியிருக்கிறது. ஆனால் பொதுவுடமை இயக்கத்தை நெருங்கிப் பார்த்தாலே இது சாத்தியமற்ற ''ஐக்கியம்'' என்பது புரிந்துவிடும்.

பொதுவுடமை சித்தாந்தத்தின் பெயரால் இப்போது நாட்டில் பல கட்சிகளும், குழுக்களும் இயங்குகின்றன. இவை அனைத்தும் அல்லது பெரும்பான்மையானவை ஒரே கட்சியாக இணைவது ஒருக்காலும் சாத்தியமில்லை. இவற்றின் நிலைப்பாடுகள், செயல்பாடுகளை வைத்து மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது, இந்தியக் கம்யூனிசக் கட்சி, ஐக்கிய இந்தியக் கம்யூனிச்க் க்ட்சி, இந்தியக் கம்யூனிச (மார்க்சிச) கட்சி, மார்க்சிச இந்தியக் கம்யூனிசக் கட்சி போன்றவை. இவை ஆளும் வர்க்கக் கூட்டணிக் கட்சிகள்; இவற்றைப் போலிக் கம்யூனிசக் கட்சிகள் என்று பொதுவாகக் குறிப்பிடுகிறோம். இரண்டாவது, வினோத் மிஸ்ரா தலைமையிலான குழு (இந்திய மக்கள் முன்னணி அமைத்துச் செயல்படுவது), மக்கள் யுத்தக் குழு (போல்ஷவிக் - சமரன் குழு). தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி (கேடயம் - மனஓசை கும்பல்), சந்திரபுல்லா - நாகிரெட்டி குழுக்கள், கேரள வேணு குழு (சி.ஆர்.சி) மேற்கு வங்க கனுசன்யால் - அசிம் குழுக்கள் போன்றவை. இவை தங்களை மார்க்சிய - லெனினியக் குழுக்கள் என்று கூறிக் கொள்கின்றன. ஆனால் இவை மார்க்சிய - லெனினிய இயக்க அடிப்படை நிலைப்பாடுகளில் இருந்து விலகிப் போய்விட்டவை; ஆகவே இவற்றைப் போலிப் புரட்சிக் குழுக்கள் என்கிறோம். மூன்றாவது, மக்கள் யுத்தக் குழுக்கள், மாவோயிச கம்யூனிச மையம்,மாநில அமைப்புக் கமிட்டி (தமிழ்நாடு), கட்சி ஐக்கியக் குழு போன்றவை. இவை இன்னமும் மார்க்சிய - லெனினிய அடிப்படை நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்பவை; ஆகவே இவற்றை புரட்சிக் குழுக்கள் என்கிறோம்.

இந்தக் கட்சிகள், குழுக்களில் முதல் இரண்டு பிரிவுகளாகிய போலிக் கம்யூனிசக் கட்சிகளுடனும், போலிப் புரட்சிக் குழுக்களுடனும் மார்க்சிய - லெனினியப் புரட்சிக் குழுக்கள் ஐக்கியப்பட முடியாது என்பதற்குத் தகுந்த காரணங்கள் உள்ளன. காங்கிரசு, ஜனதாதளம் தி.மு.க. - அ.தி.மு.க, தெலுங்கு தேசம் போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் மாறி மாறி அரசியல் கூட்டுச் சேர்வதன் மூலமாகவும், நாடாளுமன்ற - தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலமாகவும் அரசியல், சமூகப், பொருளாதார மாற்றங்களைச் சமாதானபூர்வமாகவே கொண்டு வந்துவிட முடியும் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் செயல்படுகிறார்கள். அசாம், பஞ்சாப், காஷ்மீர், பீகார், ஆந்திர உட்பட நாடுமுழுவதுமான அரசு பயங்கரவாத ஒடுக்குமுறைக்குத் துணைபோகிறார்கள். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து தேசிய

> *சமரசவாதக் கட்சிகள், குழுக்கள், தனிநபர்களைத் தனிமைப்படுத்தி அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதில் அச்சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து புரட்சிக்கு வென்றெடுக்க போலிப்புரட்சிக் குழுக்கள் முயலுகின்றன. தமது சொந்த முயற்சியில் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டும் நம்பிக்கையும் செயலும், புரட்சிகர சவடால் அடிக்கும் இந்தக் குழுக்களிடம் கிடையாது.*

ஒருமைப்பாடு கூச்சல்போடுவதில் காங்கிரசு - பாரதீய ஜனதாவுக்கும் இவர்களுக்கும் வேறுபாடே கிடையாது. இவர்களுடன் புர்ட்சிக் குழுக்கள் ஐக்கியப்பட முடியுமா?

போலிப் புரட்சிக் குழுக்கள், போலிக் கம்யூனிசக் கட்சிகளை பேசல் ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் கூட்டுச் சேருவதுமில்லை, சமாதானபூர்வமான மாற்றங்களில் நம்பிக்கை வைப்பதாகச் சொல்வில்லை என்பதும் உண்மைதான். இருந்தாலும் ஆளும் வர்க்கங்களுக்கு சமூக அடிப்படை, ஆதரவைத் திரட்டித் தரும் சமரசவாதக் கட்சிகள், குழுக்கள், நபர்களைத் தனிமைப்படுத்தி அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதில் அச்சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து புரட்சிக்கு வென்றெடுக்க முயலுகின்றன. தமது சொந்த முயற்சியில் புரட்சிக்கு மக்களைத் திரட்டும் நம்பிக்கையும் செயலும் இந்தக் குழுக்களிடம் கிடையாது. இந்தக் குழுக்கள் புரட்சிச் சவடால் அடித்தாலும் புரட்சியின் திட்டம், இலக்கு, எதிரிகள், நண்பர்கள், புரட்சிப் பாதை போன்றவற்றில் ஏதாவது சில வகைளில் போலிக் கம்யூனிச கட்சிகளுடன் உடன்படுகின்றன. மார்க்சிய - லெனினிய புரட்சிக் குழுக்களின் அடிப்படை நிலைப்பாடுகள் பலவற்றையும் நிராகரிக்கின்றன, எதிர்க்கின்றன. எந்தெந்த சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, யார்யாருக்கு எதிராக, எப்படியெப்படிப் போராடுவது என்பதில் வேறுபடும் அமைப்புகள் எப்படி ஐக்கியப்படும்?

புரட்சிக் குழுக்களிடையே அடிப்படை நிலைப்பாடுகளில் ஒற்றுமை இருப்பினும், புரட்சியை நடத்திச் செல்வதிலுள்ள குறிப்பான வழிமுறைகளில் வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்த வேறுபாடுகளைக் களையாமல் ஐக்கியப்படுவது மீண்டும் பிளவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்றே கடந்தகால அனுபவங்கள் காட்டுகின்றன. இருந்தபோதும் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவதில் ஊன்றி நிற்கும் வரை இக்குழுக்கள் ஐக்கியப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் பிரகாசமாகவே உள்ளன. ●

படிப்பகம்

www.padippakam.com

○ செர்பிய இனவெறியாட்டம் ○ போஸ்னியா சுடுகாடாகிறது

# குருதிச் சேற்றில் யூகோஸ்லாவியா

**டினா** – நான்கு வயதான குழந்தை அவள். அவளது தந்தையும் சகோதரர்களும் குண்டு வீச்சில் கொல்லப்பட்டனர். தாயோ காயங்களுடன் தப்பித்தார். முன்னாள் யூகோஸ்லாவியாவிலுள்ள போஸ்னிய குடியரசில் அவள் பிறந்து வளர்ந்த மோஸ்டர் கிராமமே குண்டுகளால் துளைக்கப்பட்டு நொறுங்கிக் கிடந்தது. உயிர் தப்பிய பலர் ஊரைவிட்டே ஓடிக் கொண்டிருந்தனர். பல நாட்கள் பட்டினிக்கும் பிறகு டினாவுடன் அவளது தாய் அருகிலுள்ள ஜாசி எனும் சிறுநகரத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் அடைக்கலம் புகுந்தார். இரு நாட்களுக்குப் பிறகு செஞ்சிலுவை சங்கத்தின் வாகனம் ஒன்று மருந்து மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றி வந்தது. தகவல் அறிந்து டினாவுடன் அவளது தாய் முண்டியடித்துக் கொண்டு ஓடினார். நூற்றுக்கணக்கானோர் வாகனத்தைச் சூழ்ந்திருந்தபோது திடீரென எங்கிருந்தோ ஒரு குண்டு வந்து விழுந்தது. தொடர்ந்து துப்பாக்கிச் சூடும் நடந்தது. இந்தத் தாக்குதலில் டினாவின் தாய் கொல்லப்பட்டார். தலையில் குண்டுக் காயம்பட்டு டினா மயங்கி விழுந்தாள். யாரோ அவளை மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தனர். ஒருவாரகாலம் உயிருக்குப் போராடிய பிறகு அவள் மாண்டுபோனாள்.

யூகோஸ்லாவியாவில் கடந்த மூன்று மாதங்களில் தீவிரமாகிவிட்ட உள்நாட்டுப் போரைப் பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற மேலைநாட்டு நிருபர் ஒருவர், டினாவைப் புகைப்படம் எடுத்த இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அவள் இறந்துவிட்டாள். அவளது துயரக் கதையை வேதனையுடன் வெளியிட்ட நிருபர், ''என் வாழ்நாளில் இப்படியொரு கோரமான யுத்தத்தைப் பார்த்ததேயில்லை; நாகரீக ஐரோப்பா காட்டுமிராண்டித்தனத்தில் நுழைந்துவிட்டது'' என்று குமுறினார்.

யூகோஸ்லாவியாவில் தொடரும் உள்நாட்டுப் போரின் காரணமாக, கடந்த 6 மாதங்களில் 12,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உள்நாட்டில் 20,000 பேரும், வெளிநாடுகளில் 45,000 பேரும் அகதிகளாக அல்லற்படுகின்றனர். பல பத்தாயிரக்கணக்கானோர் படுகாயமுற்று பட்டினியால் கொஞ்சம் கொஞ்சமாக மடிந்து வருகின்றனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடைபெறும் மாபெரும் மனிதகுல அழிவு என்று பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு அலறுகின்றன. பல பத்தாயிரக் கணக்கில் மக்கள் அகதிகளாகத் தப்பியோடுவது ஐரோப்பிய வரலாற்றில் இதுவே முதல் முறையாக நடக்கிறது என்று அதிர்ச்சியடைந்து கூறுகிறார் ஐ.நா. பொதுச் செயலர்.

● ● ●

ஐரோப்பா கண்டத்தில் தெற்கே ஹங்கேரி, ருமேனியா, அல்பேனியா ஆகிய நாடுகளை ஒட்டி இத்தாலியை அடுத்து அட்ரியாடிக் கடல் அருகே அமைந்துள்ள யூகோஸ்லாவியாவில் தொடரும் உள்நாட்டுப் பேருக்குக் காரணம் என்ன? ஏறத்தாழ ஆந்திர மாநிலத்தின் அளவுக்கு நிலப்பரப்பைக் கொண்ட யூகோஸ்லாவியாவின் மொத்த மக்கட் தொகை 2.5 கோடி. மொழி, மத, இன ரீதியாக இந்த மக்கள் பல பிரிவுகளாக உள்ளனர். செர்பியர்கள் 38% குரேஷியர்கள் 21% ஸ்லோவேனியர்கள் 8% மாசிடோனியர்கள் 6% மதச்சிறுபான்மையினரான முஸ்லிம்கள் 10% மற்றும் பல்வேறு இனத்தவர்களும் உள்ளனர். முஸ்லிம்களைத் தவிர மேற்கூறிய 4 பிரிவினரும் பொதுவாக, தெற்கு ஸ்லாவிய இனத்தினர் என்று அழைக்கப்பட்டாலும் வரலாற்று ரீதியாகவும் அரசியல், பண்பாட்டு ரீதியாகவும் இவர்களிடையே பல வேறுபாடுகள் உண்டு.

பால்கன் நாடுகள் என தனித்தனியே பிரிந்திருந்த இனரீதியான இந்நாடுகள் ஒன்றுபட்டு, 19-ம் நூற்றாண்டின் இறுதியில் செர்பிய மன்னன் அலெக்சாண்டரின் தலைமையில் துருக்கிய ஆதிக்கத்தை வீழ்த்தின. அலெக்சாண்டரின் ஆட்சியில் தெற்கு ஸ்லாவியர்களின் நாடு என பொருள்படும் யூகோஸ்லாவியா என்ற பெயர் இந்நாட்டுக்குச் சூட்டப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியின் நாஜிப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட யூகோஸ்லாவியாவை டிட்டோவின் தலைமையிலான தேசிய விடுதலைப்படை, ரஷியாவின் செஞ்சேனையின் உதவியுடன் மீட்டு விடுதலையைச் சாதித்தது. 1945 இறுதியில் பல்வேறு இனங்களைக் கொண்ட யூகோஸ்லாவிய மக்கள் குடியரசுகளின் கூட்டமைப்பு பிரகடனம் செய்யப்பட்டது. டிட்டோ அதன் அதிபரானார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ரஷியாவுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் மேலை ஏகாதிபத்திய நாடுகள் ஓரணியாக்வும், ரஷியா தலைமையில் சோசலிச நாடுகள் ஓரணியாகவும் நின்றபோது டிட்டோ தன்னை இரு முகாம்களுடனும் கூட்டு சேராத 'தனி சோசலிச' நாடாக அறிவித்துக் கொண்டார். ஸ்டாலினுடைய வெளிநாட்டுக் கொள்கையால்தான் உலகில் பதற்றநிலை ஏற்படுகிறதென்று குற்றம் சாட்டி அவதூறு செய்த அவர், மற்ற ஏழை நாடுகளை 'கூட்டுச் சேராமை' என்ற பெயரில் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமிலிருந்து திசைதிருப்பினார். கூட்டுச்சேரா இயக்கத்தின் நிறுவனரான டிட்டோவின் இந்தச் சேவைக்கு கைமாறாக அமெரிக்கா டாலர் உதவியை வாரி வழங்கியது. சோசலிசத்திற்கும் ஸ்டாலினுக்கும் எதிராக அமெரிக்கா தொடுத்த தாக்குதலில் டிட்டோவே தளபதியாக இருந்தார். போலிக் கம்யூனிசத்தை உருவாக்கி வளர்ப்பதில் அனைத்துவகை திரிபுவாதிகளுக்கும் குருநாதராக இருந்தார்.

டிட்டோவின் போலி சோசலிசம் அவர் வாழ்நாளிலேயே நொறுங்கி தோல்வியடைந்தது. அன்னியக் கடனும், பணவீக்கமும், வேலையின்மையும் பெருகியதோடு தேசிய இனங்களிடையே முரண்பாடுகளும் கலகங்களும் வெடித்தன. ருமேனியாவின் சௌசெஸ்கூவின் பாணியில் ராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு நாட்டை 'ஒற்றுமைப் படுத்த' முயன்ற டிட்டோ அதில் தோல்வி கண்டு 1980-ல் மரணமடைந்தார். அவருக்குப் பின் அவரது வாரிசுகள் யூகோஸ்லாவியாவின் பெரிய குடியரசான செர்பியாவை போலிக் கம்யூனிஸ்டுகளின் தளமாகவும், நாட்டின் பெரும்பான்மை ஆதிக்க தேசிய இனமாகவும் ராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு நிலைநாட்டினர். இதர தேசிய இனங்களின் பிராந்திய அதிகாரத்தைக்கூட பறித்து, தம்மிடமே குவித்துக் கொண்டு தேசிய இனக் கலகங்களை மிருகத்தனமாக ஒடுக்கினர்

1980-களின் இறுதியில் ரஷிய குடியரசுகளில் எழுந்த பிரிவினைக் கலகங்கள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலிக் கம்யூனிசம் வீழ்ச்சியுற்று முதலாளித்துவ அரசுகளின் உதயம் - ஆகிய இவ்விரு நிகழ்ச்சிப் போக்குகளின் தாக்கம் காரணமாக யூகோஸ்லாவியாவிலும் தேசிய இனக் கலகங்களும், கம்யூனிச எதிர்ப்புப் போராட்டங்களும் பெருகத் தொடங்கின. அதைத் தொடர்ந்து குரேஷியா, மாசிடோனியா, மாண்டேனீக்ரோ, செர்பியா, ஸ்லோவேனியா, போஸ்னியா ஆகிய ஆறு 'சோசலிசக்' குடியரசுகளையும் செர்பியாவுக்குள் அடங்கிய வோஜ்வோடினா, கொசாவோ ஆகிய தன்னாட்சிப் பிராந்தியங்களையும் கொண்ட யூகோஸ்லாவியா தனித்தனி நாடுகளாக

*யூகோஸ்லாவியாவில் தொடரும் உள்நாட்டுப் போரின் காரணமாக கடந்த 6 மாதங்களில் 12,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உள்நாட்டில் 20,000 பேரும், வெளிநாடுகளில் 45,000 பேரும் அகதிகளாக அல்லற்படுகின்றனர். ஆயிரக்கணக்கானோர் போரில் படுகாயமுற்று பட்டினியால் கொஞ்சம் கொஞ்சமாக மடிந்து வருகின்றனர்.*



படிப்பகம்

www.padippakam.com

உடைந்து சிதறும் நிலை ஏற்பட்டது.

இந்நெருக்கடிகளைக் கண்டு பீதியடைந்த போலிக் கம்யூனிஸ்டுகள், சீனாவின் டெங் பாணியில் தமது தலைமையைத் தக்க வைத்துக் கொண்டே, முதலாளித்துவ சீர்திருத்தங்களைத் திறந்துவிட்டனர். இதன்மூலம் எதிர்ப்புகளைச் சாந்தப்படுத்திவிடலாம் என்று போலிகள் கனவு கண்டதற்கு எதிரான நிலைமைதான் தோன்றியது. 1990-ல் நடைபெற்ற 'சுதந்திர'த் தேர்தலில் 4 குடியரசுகளில் போலிக் கம்யூனிஸ்டுகள் படுதோல்வி அடைந்தனர். செர்பியாவில் போலிகள் வெற்றி பெற்றாலும், முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் பெருகத் தொடங்கின. செர்பியாவிலுள்ள கொசாவோ பிராந்திய மக்கள் சுயாட்சி உரிமைகோரி கலகம் செய்தனர். பெருகிவரும் தேசிய இனக்கலகங்களைக் கண்டு மாண்டேனீக்ரோ குடியரசின் அதிபர் ராஜினாமா செய்துவிட்டு ஓடினார்.

இந்நிலையில், ரஷியாவின் பால்டிக் குடியரசுகளின் பாணியில் குரேஷியாவும், ஸ்லோவேனியாவும் யூகோஸ்லாவிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வதென தமது பாராளுமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றின. தனியே நாணயங்களை அச்சிடுவது, சொந்த ராணுவத்தைக் கட்டியமைப்பது என்பதாக விரைவிலேயே இக்குடியரசுகள் தனி நாடுகளாகப் பிரகடனம் செய்தன. நாட்டை ஒற்றுமைப் படுத்துவது என்ற பெயரில் யூகோஸ்லாவிய ராணுவம் குரேஷியா மீது பாய்ந்தது. குரேஷியாவில் வாழும் 6 லட்சம் செர்பியர்களைக் காப்பதாகக் கூறி செர்பிய இனவெறிக் கட்டவிழ்த்துவிட்டது.

இதே நேரத்தில் ஐரோப்பாவில் பாசிச மேல் நிலை வல்லரசாக வளர்ந்து வரும் ஜெர்மனி, யூகோஸ்லாவிய விவகாரத்தில் தலையிடத் தொடங்கியது. அதன் நிர்ப்பந்தம் காரணமாக ஐரோப்பிய சமூக நாடுகள் குரேஷியா, ஸ்லோவேனியாவின் பிரிவினையை ஆதரித்து 'சுதந்திர' நாடுகளாக அங்கீகரித்தன. ஜெர்மனியின் இந்தப் போக்கிற்கு காரணம் இல்லாமல் இல்லை. இரண்டாம் உலகப் போரின்போது குரேஷியர்களும், ஸ்லோவேனியர்களும் நாஜிப் படைகளுக்கு ஆதரவாக நின்றனர். செர்பியர்கள் நாஜிகளை எதிர்த்துப் போரிட்டனர். இதற்குப் பழிவாங்கும் பாசிச வெறி காரணமாகவே இக்குடியரசுகளின் சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரித்துள்ளது. இதோடு செர்பியர்களை எதிர்த்துப் போராட ஆயுத உதவிகளையும் செய்து வருகிறது.

குரேஷியா, ஸ்லோவேனியாவின் பிரிவினையைக் கண்டு நம்பிக்கை அடைந்து மற்றொரு சிறிய குடியரசான போஸ்னியாவும் தனிநாடாக சுதந்திரப் பிரகடனம் செய்தது. போஸ்னியாவில் குரேஷியர்களும், செர்பியர்களும், சிறுபான்மை முஸ்லிம் இனத்தவர்களும் சம அளவில் உள்ளனர். போஸ்னியாவும் பிரிந்து சென்றுவிட்டால் எஞ்சிய குடியரசுகளும் கைநழுவிப் போய் விடுமோ என்று பீதியடைந்த போலிக் கம்யூனிஸ்டுகள் ராணுவத்தை ஏவி அடக்கத் தொடங்கினர். போஸ்னிய மக்கள் உறுதியாக நின்று எதிர்த்தாக்குதல் நடத்தத் தொடங்கியதும், "நாட்டின் ஐக்கியத்தை"ப் பாதுகாக்க வல்லவர்கள் செர்பியர்கள்தான் என்று செர்பிய பேரினவாதத்தைத் தூண்டி இனவெறியையும் போர்வெறியையும் கட்டவிழ்த்துவிட்டனர். போஸ்னியாவில் செர்பியர்கள் வாழும் பகுதிகளை இணைத்து அகண்ட செர்பியாவாக மாற்றுவது, குரேஷியர்களையும் முஸ்லிம்களையும் இப்பகுதிகளிலிருந்து விரட்டுவது என்ற திட்டத்துடன் இனத்தூய்மைப்படுத்தும் நடவடிக்கை எனும் கொலை வெறியாட்டத்தைத் தீவிரப் படுத்தினர்.



செர்பிய இனவெறித் தாக்குதலுக்கு அஞ்சி, பிறந்த மண்ணைவிட்டு அகதிகளாக ஓடும் போஸ்னிய முஸ்லிம்கள்.

இந்த இனவெறித் தாக்குதலிலிருந்து போஸ்னியாவில் வாழும் குரேஷியர்களைக் காக்க, குரேஷியா தனது படைகளை அனுப்பி எதிர்த்தாக்குதல் நடத்துகிறது. அதேசமயம் நிராதரவான முஸ்லிம்களோ செர்பிய ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் ஆயிரக்கணக்கில் மடிந்து வருகின்றனர். அகதிகளாக அண்டை நாடுகளுக்குத் தப்பியோடி அல்லற்படுகின்றனர். ஒருபுறம் இனவெறிபிடித்த செர்பியர்களும் குரேஷியர்களும் மோதிக் கொள்கின்றனர். மறுபுறம் இருவரும் சேர்ந்து சிறுபான்மை முஸ்லிம்களை அழித் தொழிக்கின்றனர்.

போஸ்னியாவில் யூகோஸ்லாவிய ராணுவம் - அதாவது செர்பிய ராணுவம் நடத்திவரும் இனவெறியாட்டம் காட்டுமிராண்டித்தனத்தின் எல்லைக்கே சென்றுவிட்டது. முஸ்லிம்கள் வாழும் கிராமங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தி தீக்கிரையாக்குவது, முஸ்லிம் பெண்களைக் கற்பழித்து அவர்களை 'செர்பியர்களாக இனத்தூய்மைப்படுத்துவது', உணவுதானியங்களை அழிப்பது, குடிநீரில் விஷத்தைக் கலப்பது, எதிர்த்துப் போரிட்ட முஸ்லிம்களை சிறையிலடைத்து சித்திரவதை செய்து பட்டினி போட்டுக் கொல்லுவது என்பதாக செர்பிய ராணுவம் வெறியாட்டம் போடுகிறது. இவ்வளவுக்குப் பிறகும் ஐரோப்பிய 'நாகரீக' நாடுகள் இந்த நரவேட்டையைத் தடுத்து நிறுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ஆனால் ஐ.நா. அமைதிகாக்கும் படைகளின் மீதே தாக்குதல் நடத்துவது, நிவாரண உதவிகளைக்கூட செய்யவிடாமல் குண்டு வீசி தாக்குவது, பத்திரிகை நிருபர்களைச் சுட்டுக் கொல்வது என்பதாக செர்பிய ராணுவத்தின் அட்டூழியம் தீவிரமாகிக் கொண்டே போகிறது. யூகோஸ்லாவிய விவகாரம் குறித்து கடந்த ஆகஸ்ட் மாதத்தில் லண்டனில் நடந்த பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்துவிட்டது. இரத்த ஆறு ஓடும் போஸ்னியாவை குரேஷியர்களும் செர்பியர்களும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து பங்கிட்டுக் கொள்வது, சிறுபான்மை முஸ்லிம்களை நாடற்றவர்களாக விரட்டுவது அல்லது செர்பிய, குரேஷிய இனங்களின் கீழ் அடிமைப்படுத்துவது என்பதே ஏகாதிபத்தியங்களின் திட்டமாக உள்ளது. ஆனால் குரேஷியர்களுக்கு விட்டுக்கொடுக்க மறுத்து செர்பியா முரண்டு பிடிக்கிறது. செர்பியாவை மிரட்டிப் பணியவைத்து இத்திட்டத்தை ஏற்கவைக்கும் நோக்கத்திலேயே சமாதான பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. கடைசியில், பாலஸ்தீனியர்களைப் போல போஸ்னிய முஸ்லிம்கள் நாடற்றவர்களாக விரட்டப்படுவது நிச்சயமாகிவிட்டது.

போலிக் கம்யூனிச சர்வாதிகாரம் யூகோஸ்லாவியாவை தேசிய இனங்களின் சிறைக்கூடமாக்கியது. அதற்கு எதிரான 'சுதந்திர முதலாளித்துவமோ இனவெறியையும் காட்டுமிராண்டித்தனத்தையும் கட்டவிழ்த்துவிட்டு மனிதகுலப் பேரழிவையே சாதித்துள்ளது. தேசிய இனப் பிரச்சினையை போலிக் கம்யூனிசமோ அல்லது சுதந்திர முதலாளித்துவமோ ஒருக்காலும் தீர்க்க முடியாது என்பதை மீண்டுமொரு முறை உலகிற்கு உணர்த்திவிட்டு, யூகோஸ்லாவியா குருதிச் சேற்றில் புதைந்து கொண்டிருக்கிறது.

● *மனோகரன்*

படிப்பகம்

www.padippakam.com



## மருத்துவக் கல்லூரி மாணவர் போராட்ட

# படிப்பினை பெறுவே
# புதிய பாதை வகுப்பே

### அன்புள்ள ரத்னகுமாருக்கு

வணக்கங்கள். உனது கல்லூரி போராட்டம் பற்றி குறிப்பிட்டு கருத்து கேட்டிருந்தாய். தமிழக அரசு ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை சாராய உடையாருக்கு தாரைவார்த்தது மிகப்பெரிய அநியாயம் - மோசடி என்றும், என்னால் இயன்ற அளவு உங்களது போராட்டத்திற்கு ஆதரவு தருவதாகவும் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதன் பிறகு உங்கள் போராட்டத்திற்கு ஆதரது தெரிவித்து நானும் எனது நண்பர்கள் சிலரும் முயற்சியெடுத்து மாணவர்களைத் திரட்டி வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தியதையும் நீ அறிவாய்.

பின்னர் சுவருக்கு வெள்ளையடிக்கும் போராட்டம், "ஷூ பாலிஷ்" போடும் போராட்டம் மற்றும் வீதி நாடகங்கள், அமைச்சருடன்' பேச்சுவார்த்தை நடத்தியது தொடர்பாக அவ்வப்போது கடிதம் எழுதும் போது குறிப்பிட்டிருந்தாய். அதில் உன்னுடைய ஊக்கமான பங்களிப்பைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன். என்னால் உடனுக்குடன் பதில் எழுத முடியவில்லை. தற்போது அமைச்சருடன் 24 மணிநேர பேச்சுவார்த்தைக்குப்பின் உங்களது போராட்டம் முடித்துக் கொள்ளப்பட்ட செய்தியையும் பத்திரிகையில் படித்தேன். உங்களுடைய 44 நாட்களாக தொடர்ந்த போராட்டத்தின் தன்மை, முறைகள் மற்றும் போராட்டத்தால் விளைந்த பயன்கள் பற்றியெல்லாம் இங்கு நண்பர்களுடன் விவாதித்தேன். அதன் சாராம்சமான கருத்தை இங்கு தொகுத்தளிக்கிறேன். உன்னுடைய சக நண்பர்களுடன் விரிவாக விவாதத்திற்கு எடுத்துச் சென்று பதில் எழுதுவாய் என எதிர்பார்க்கிறேன்.

முதலாவதாக அரசு அதிகாரி இன்பசாகரன் என்பவர் மாணவர்களை அழைத்து மிரட்டியதோடு "அரசு கல்லூரியாக மாற்றினால் சுவற்றிற்கு வெள்ளையடிக்கக்கூட நாதியில்லாமல் கிடக்கும்" என்று ஆணவத்தோடு குறிப்பிட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அரசு மருத்துவமனை சுவரில் வெள்ளை அடிக்கும் போராட்டம் நடத்தினீர்கள். இது வரவேற்கத் தகுந்த ஒன்றும் நல்ல போராட்ட வடிவமும்கூட. ஆனால், 'மருத்துவர்கள் நாங்கள்: அரசின் நடைமுறையால் செருப்பு துடைக்கும் தொழிலா செய்ய வேண்டும்?' என்பதை குறிப்பதாகக் கூறி "ஷூ பாலிஷ்" போடும் போராட்டம் நடத்தினீர்களே , அது மாணவர்களிடையே மிகுந்த சர்ச்சைக்குள்ளாகியது. இப்போராட்டம் குறிப்பிட்ட தொழிலையும், சாதியையும் இழிவுபடுத்துவதும் - தாக்குவதுமாகும். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த அத்தொழில் புரிவோரின் பிள்ளைகளோ அவர்கள் பரம்பரையினரோ இன்று மாணவர்களாக உள்ளார்கள். இம்மாணவர்கள் உங்களின் இப்போராட்டத்தால் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள். செருப்பு துடைக்கும் போராட்டம் —இவையெல்லாம் மக்களில் ஒரு பிரிவினரை இழிவாகக் கருதி கீழ்நிலைப்படுத்தும், தாக்கும் போராட்டங்களே!

எத்தனையோ நூதன வடிவிலான போராட்டங்கள் உள்ளன; அவற்றை கையிலெடுக்கலாம். உதாரணத்திற்கு ஒரு நண்பன் குறிப்பிட்டது இது. சாராய உடையாரிடம் கல்லூரி சென்றதற்கு பொருத்தமாக, மருத்துவ உடையில் சாராயம் விற்கும் போராட்டம் நடத்தலாம்; வைத்தியம் பார்த்து நோயாளிக்கு மருந்துக்குப் பதிலாக சாராயம் அளித்து போராட்டம் நடத்தலாம் என்றான். இப்படி யோசித்திருக்கலாமல்லவா?

இரண்டாவதாக,சாகும்வரை உண்ணாவிரதம் போராட்டம் நடத்தி கவலைக்கிடமான நேரத்தில் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டீர்கள். இதுபோன்ற போராட்ட வடிவங்கள் பிரச்சினையை தீர்க்கவல்லதல்ல. உண்ணாமல் இருப்பதால், சாவதால் பாதிப்பு நமக்குத்தான். இப்போராட்டத்தால் ஆட்சியாளர்களுக்கு என்ன பாதிப்பு இருக்கிறது? உங்களுடைய உண்ணாவிரதப் போராட்டம் மக்களிடையே அனுதாபத்தை ஏற்படுத்தித்தரத்தான் உதவியது. அமைச்சர் முத்துச்சாமி உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை முடிக்க தவியாய் தவிக்க வைத்தது, உங்களுடைய பஸ்மறியல் போராட்டங்கள் தான். போராட்டத்தை இன்னும் தீவிரப்படுத்தியிருந்தீர்களானால் அதாவது ஆட்சியாளர்களுக்கும் சாராய உடையாருக்கும் நெருக்கடி தரும்வண்ணம் போராட்டம் எடுத்திருந்தால் தற்போது கிடைத்திருக்கும் முடிவு முன்கூட்டியே கிடைத்திருக்கலாம் அல்லது முழுவெற்றி கிட்டியிருக்கும். (முழு வெற்றி பற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்) சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும்பொழுது கடைசி கட்டத்தில் வந்தே கைதுசெய்து மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். யாராவது இறந்துவிட்டால் அதனாலும் போராட்டம் தீவிரமாகிவிடக்கூடாது என்கிற முன்னெச்சரிக்கையாகவே இதுகூட செய்கிறார்கள்.

ஆனால் பஸ் மறியல் - ரயில் மறியல் 'கெரோ' போராட்டங்கள் அறிவித்தால் முன்கூட்டியே பதறியடித்துக் கொண்டு வந்து கைது செய்கிறார்கள். அறிவிக்காமல் திடீரென மறியல் செய்தால் கைது செய்த பின் ஆத்திரமாகி தாக்குகிறார்கள்; சித்திரவதை செய்கிறார்கள். இதிலிருந்து (போராட்டத்தைப் பொருத்து) அவர்களின் அணுகுமுறையை நாம் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

மேலும் இங்கு ஒன்றை குறிப்பிட வேண்டும். அரசும், ஆளுங்கட்சியினரும் உங்களுடைய பேராட்டங்களை எப்படி அணுகினார்கள்? உங்களுடைய போராட்டத்தை ஒடுக்க முதலில் உங்களை விடுதிகளில் இருந்து வெளியேற்றினார்கள். கல்யாண மண்டபங்களில் தங்கி நீங்கள் போராடியபோது அ.தி.மு.க. ரௌடிகள் வந்து தாக்கினார்கள்; மிரட்டினார்கள். சாராய உடையாரின் ரௌடிகளாலும் தாக்கப்பட்டீர்கள். அரசு அதிகாரிகள் நேரடியாகவே பகிரங்கமாகவே மிரட்டினார்கள். உங்களுடைய வீதிநாடகப் பிரச்சாரத்தை முடக்கவும் பல்வேறு வகையான தாக்குதல்கள் நடந்தன. உங்களுக்கு ஆதரவாகப் போராட முன்வந்த பயிற்சி மருத்துவர்களையும் வேலை பறிக்கும் மிரட்டலைக் கொண்டு போராடாது பணியவைத்தது அரசு. இவற்றோடு தொடர்ச்சியாக உங்களை போலீசின் லத்திகளும் ஆபாச பேச்சும் தாக்கின. மாணவி



படிப்பகம்

www.padippakam.com

கள் போலீசாரால் ''விபச்சாரிகள்'' என ஏசப்பட்டார்கள்; சித்தரிக்கப்பட்டார்கள். சட்டவிரோதமாக மாணவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள்; சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஒருவருக்கு எலும்பு முறிந்தது. ஒருவருக்கு கண் பாதிக்கப்பட்டது. பலருக்கு ரத்தம் வழிந்தது; காயங்கள் ஏற்பட்டன.

இத்தகைய அடக்குமுறைகளை எதிர்கொள்ள தற்காப்பு முறைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். புதிய உத்திகளில் போராட வேண்டும். நமது போராட்டங்கள் சட்டத்திற்குட்பட்ட முன் அறிவிக்கப்பட்ட போராட்டங்களாக இல்லாமல் அரசை நிலைகுலைய வைக்கும் திடீர் போராட்டங்களாக இருக்கவேண்டும். இந்த கண்ணோட்டம் தயாரிப்பு இல்லாததால்தான் மாணவர் - பெற்றோர் சங்கம் அமைப்பாளரான ரவீந்தரதாஸ் உடையாரின் ரௌடிகளிடமிருந்தும் போலீசிடமிருந்தும் தன்னை பாதுகாத்துக்கொள்ள இறுதியில் தவிர்க்க முடியாமல் தலைமறைவாகிப் போனார்.

''அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரியையும் அரசு நடத்த வேண்டும் என்று ஏன் போராட வில்லை?'' என்று அமைச்சர் அரங்கநாயகம் போன்ற பலரால் பிரச்சாரம் செய்யப்பட்டதே,இது இந்துமத வெறியைத் தூண்டும், போராட்டத்திற்கு மதச் சாயம் பூசும் கருத்து. ''விருப்பப்படும் மாணவர்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கித் தரப்படும்'' என தமிழக அரசு அறிவித்ததே. இது ஆசைக்காட்டி போராட்டத்தை ஒடுக்கச் செய்யும் மோசடி வேலை. தன்னிடமுள்ள ஜால்ராக்களைக் கொண்டும், விலைபேசிய (சோரம்போன) மாணவர்களைக் கொண்டும் போராட்டத்திற்கு எதிராக அறிக்கைவிட வைத்தது; போராட்டத்தை பிசுபிசுக்கச் செய்த சதி. பேச்சுவார்த்தையின் போதும், மாணவர்களிடம் அணுகிய போதும் ''அமைச்சர் முத்துச்சாமிதான் உடும்பு பிடியாக இருக்கிறார்; முதல்வர் ஜெயலலிதா நல்லவர்; அவரை சந்தித்து பேசினால் பிரச்சினை தீர்ந்துவிடும்'' என்ற கருத்தை பரப்பிவிட்டார்களே,இதற்கு மாணவர்கள் சிலரும் அடிமையாகி ஜெயாவை சந்தித்துப் பேச கோரினார்களே. இவை போராட்டச் சக்திகளை சீர்குலைக்கும் - தார்மீக பலம் இழக்கச் செய்யும் வேலை. இதுவன்றி ரௌடிகளைக் கொண்டு தாக்கியும் போலீசைக் கொண்டு தாக்கியும் அவமானப் படுத்தியும் பிரச்சினையை இழுத்தடித்தும் போராடுபவர்களின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி தார்மீக பலமிழக்கச் செய்தார்கள்.

மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவையும் இவ்வகையிலேயே துண்டிக்க முயன்றார்கள். அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கட்சியினர் தூண்டிவிடுவதாகவும் குற்றஞ்சாட்டி ஆட்சியாளர்கள் அவதூறு பரப்பினர். இவற்றையெல்லாம் அவ்வப்போது முறியடித்து அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்து மக்கள் - சகல தரப்பினர் ஆதரவை திரட்டுவதற்கும், மாணவர்களை மேலும் ஊக்கமாக போராடச் செய்விப்பதற்கும் தகுந்த அரசியலறிவு - சித்தாந்த தெளிவு கொண்ட தலைமையின் கீழுள்ள மாணவர் அமைப்பு வேண்டும் அல்லவா?

மேலும் ஆட்சியாளர்களின் மக்கள் விரோத கொள்கை - நடவடிக்கைகளில் ஒன்றுதான் ராமச்சந்திரா கல்லூரியை தனியாருக்கு தாரைவார்த்தது என்றும், ஜெயலலிதாவின் பாசிசத் தாக்குதலின் ஒரு அங்கம்தான் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் என்றும் இணைத்துப் பார்க்கத் தவறிவிட்டீர்கள். உங்கள் போராட்டத்தை தனியாகப் பிரித்துப் பார்த்து அரசியல் பின்னணியற்ற முறையில் இருக்க எச்சரிக்கையுடன் செயல்பட்டீர்கள். உங்களுக்காக குரல்கொடுத்த அரசியல் கட்சிகள், அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு பரஸ்பர உறவு கொண்டிருக்க வேண்டும். ஏன், உங்களுக்காக போராடிய பிற துறை - கலைக்கல்லூரி, சட்டக் கல்லூரி - மாணவர்களுடன் கூட நீங்கள் தொடர்பு கொண்டு நல்லிணக்கம் கொள்ளாமல் விட்டதால்தான் அம்மாணவர்களின் போராட்டங்களும் தொடர்ச்சியின்றிப் போனது. உங்கள் போராட்டத்தின் விளைவாக ஜெயலலிதா ஆட்சிக்கு எதிரான அரசியல் கருத்துக்கள் - உணர்வுகள் பரவலாக எழுந்ததை உணர முடிந்தது. ஆனால் நீங்கள் அவற்றை உணர்ந்து செயல்படவில்லை என்றே கருதுகிறேன்.

அடுத்ததாக, உங்களுடைய நீண்ட போராட்டம் இறுதியில் என்ன தீர்வோடு முடிந்தது என்று யோசித்துப் பாருங்கள்! கொள்கையளவில் கல்லூரியை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்த ஆண்டிற்குள் கல்லூரியைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் என்று அமைச்சர் முத்துச்சாமி ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் கடந்த கால அனுபவத்தை எடுத்துப் பார்த்தால் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போராட்டத்தில் எல்லா ஆட்சியாளர்களும் கொள்கையளவில் கோரிக்கையை ஒத்துக் கொண்டுள்ளனர். ஒத்துக் கொண்டபடி நடைமுறைப்படுத்தியது மிகவும் அரிதே. நடைமுறையிலும் அளவு குறைவாகவோ கண்துடைப்புக்காகவோ நிறைவேற்றுவதுதான் நடக்கிறது. இன்னும் ஆசிரியர்கள் அதே கோரிக்கைகளை வைத்துப் போராடுவதைப் பார்க்கலாம். தற்காலிகமாக போராட்டத்தை நிறுத்த ஆட்சியாளர்கள் கடைபிடிக்கும் கடைசிகட்ட சம்மதம். ஒத்துக் கொண்டதை நிறைவேற்றாதபோது மீண்டும் ஒரு பெரிய போராட்டத்தை கட்டியெழுப்ப நமக்கு உள்ள சிரமத்தை புரிந்து கொண்டு போராடமாட்டார்கள் என்ற தைரியத்திலேயே இச்சம்மதத்திற்கும் இணங்குகிறார்கள். எனவே போராட்டம் முழுவெற்றியல்ல. அரசு, கல்லூரியை சட்டபூர்வமாக, நடைமுறைபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் போதே முழுவெற்றியடங்கியுள்ளது.

மேற்கண்ட கருத்துக்களை பரிசீலித்து உன் நண்பர்களுடன் விவாதித்து கடிதம் எழுது.

அன்புடன்
**கமலக்கண்ணன்**
**அரசு கலைக் கல்லூரி, மதுரை.**

## அதிகாரிகளின் சாதிவெறியாட்டம்!

தென்னாற்காடு மாவட்டம், கடலூர் நெல்லிக்குப்பம் மெயின் ரோட்டின் அருகில் அருண் சிமிண்ட் ஒர்க்ஸ் என்ற பெயரில் விவசாயத்திற்கு, தேவையான கிணற்று உறைகள், பைப்புகள், ஜாலிகள் தயாரித்து விற்கும் தொழிற்சாலை உள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக தமது தந்தையர் அனுபவித்து வந்த நிலத்தில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த பி.அருணாசலம் என்பவர் 20-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் குடும்பத்தினரை வேலைக்கமர்த்தி இத்தொழிலை நடத்தி வருகிறார். அருண் சிமிண்ட் ஒர்க்ஸ் அருகிலேயே இரு சிமிண்ட் கம்பெனி முதலாளிகள் புறம்போக்கு நிலத்தை அனுபவித்து வந்தும் அவர்கள் மேல்சாதிக்காரர்களாக இருப்பதால் அவர்களை விடுத்து அரசு அதிகாரிகள், தாழ்த்தப்பட்டவரான பி.அருணாசலத்தை மட்டும் இடத்தை காலி செய்யச் சொல்லி தொல்லைக் கொடுத்து வருகின்றனர்.

கடலூர் சார் ஆட்சியர் கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., மற்றும் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர் போலீசு துணையுடன் வந்து அருண் சிமிண்ட் ஒர்க்ஸ் பொருட்களை முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் சட்ட விரோதமான முறையில் நொறுக்கி ஒரு லட்சம் ரூபாயை நட்டமாக்கினர். பிறகு பி.அருணாசலம் நீதிமன்றத்தை அணுகி இடத்தை காலி பண்ணச் சொல்வதற்கு தடை உத்தரவு வாங்கினார். ஆனால், சாதிவெறியர்கள் உத்தரவை மதிக்காமல் தொடர்ந்து தொல்லைக் கொடுத்து வந்தனர். பி.அருணாசலத்தை சாதியைச் சொல்லி இழிவாகவும் வக்கிரமாகவும் பேசி மிரட்டினர். அண்மையில் 25-7-92 அன்று சார் ஆட்சியர் கிருஷ்ணன், வட்டாட்சியர் நாராயணன் தலைமையில் வருவாய்த் துறையினர் வந்து அருண் சிமிண்ட் ஒர்க்ஸ் பொருட்களை சேதப்படுத்தினர். தொழிலாளர்களைத் தாக்கிவிட்டு பொருட்களை அள்ளியும் சென்றனர். 40 ஆயிரம் ரூபாய் பொருட்கள் நாசமாயின. அதிகாரிகளின் அராஜகத்தையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் கண்டித்து 24-8-92 அன்று கடலூரில் அம்பேத்கார் அமைப்புகளின் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

இச் சம்பவம் அதிகார வர்க்கத்தின் சட்ட விரோத - மக்கள் விரோத நடவடிக்கைக்கும் சாதிவெறிக்கும் ஆணவத்திமிருக்கும் எடுத்துக்காட்டாய் உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழின் தொடர்ச்சி

# வங்கி-பங்குச் சந்தை மோசடி மறைந்துள்ள இரகசியங்கள்

*வங்கிகள் - நிதி நிறுவனங்கள் மட்டுமின்றி, அரசின் அனைத்து நிறுவனங்களும் நாட்டையும் மக்களையும் கொள்ளையடித்து வந்துள்ளதை தற்போதைய வங்கி - பங்குச் சந்தை மோசடி நிரூபித்துள்ளது.*

பங்குச் சந்தை - வங்கி மோசடிகளில் குற்றஞ்சாட்டிக் கைதானவர்களின் இப்போதைய வாதமே தாங்கள் தங்கள் நாட்டின் தொழில் - நிதி விதிமுறைகளுக்கு விரோதமாக எந்தக் குற்றமும் செய்யவில்லை; சட்டப்படியும் தங்களைத் தண்டிக்க முடியாது; ஏற்கனவே வழக்கத்தில் இருக்கும் தொழில் - நிதி - வங்கி நடைமுறை, மரபுகளுக்கு மாறாகத் தாங்கள் எதுவும் செய்யவில்லை என்பதுதான்.

இவர்கள் சிறையில் இருக்கும்போதும் ''ராஜ உபச்சாரத்தோடுதான் வாழ்கிறார்கள்; திமிரோடுதான் பேசுகிறார்கள்; எந்த வித தண்டனையும் இல்லாமல் தப்பிவிடுவோம் என்கிற தைரியத்தோடு இருக்கிறார்கள் என்று பிரபல நாளேடுகள் எழுதுகின்றன. இதற்கு முக்கியமான ஒரு காரணம், இந்தப் பங்குச் சந்தை - வங்கி மோசடியில் இவர்களின் கூட்டாளிகளாக பெரும் அரசு அதிகாரிகளும், முக்கிய அமைச்சர்களும் இருந்துள்ளனர். தங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் அவர்களது கைவரிசையையும் தொடர்புகளையும் கூட இழுத்து விட்டுவிடுவோம் என்கிற மிரட்டலே இதுவரை பிடிபட்டவர்களின் துருப்புச் சீட்டாக உள்ளது. இன்னொரு முக்கிய காரணம் இந்த நாட்டுப் பங்குச் சந்தை வங்கிகள் ஆகியவை அடங்கிய தொழில் - நிதி அமைப்பும், அவற்றின் விதிமுறைகளும், சட்ட திட்டங்களும் நடைமுறையும் கூட இந்தக் குற்றவாளிகளுக்குச் சாதகமாக உள்ளன.

பங்குச் சந்தை - வங்கி மோசடி விவகாரம் அம்பலமான ஆரம்ப நாட்களில், ''இது ஒரு சில தனிப்பட்ட நபர்களின் கிரிமினல் குற்றங்கள்தான். இதனால் வங்கி - நிதி அமைப்பு முழுவதும் தோல்வி கண்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. இந்திய நிதி - வங்கி அமைப்பு இன்னும் வலுவானதாக, பொருத்தமானதாக, சரியானதாகவே இருக்கிறது'' என்று நிதி அமைச்சரும், பிரதமரும் திரும்பத் திரும்பக் கூறினர்.

ஆனால் பங்குச் சந்தை - வங்கி மோசடிகளைத் தோண்டத் தோண்டக் கிளம்பிய ஊழல் நாற்றம் அதைப் பொய்ப்பித்துவிட்டது. அவர்களே, ''இது நமது நிதி - வங்கி அமைப்பு முழுவதும் தோல்வி கண்டு விட்டதைத்தான் குறிக்கிறது. வேறு பொருத்தமான அமைப்பு முறையை நிறுவியாக வேண்டும்'' என்று ஒப்புக் கொண்டனர்.

இப்போது அம்பலமாகிவரும் பங்குச் சந்தை - வங்கி மோசடிகள் பற்றிய செய்திகளோ, வங்கி - நிதி அமைப்பு மட்டுமல்ல, அரசின் அனைத்து நிறுவனங்களுமே நாட்டையும் மக்களையும் கொள்ளையடித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. இப்படிச் செய்வதல் ஒன்றும் தவறோ, குற்றமோ கிடையாது என்கிற தோரணையில் அதிகாரிகளும், மந்திரிகளும் நியாயப்படுத்தி வருகின்றனர். கொள்ளை லாபமடிப்பது முதலாளித்துவத்தின் பிறப்புரிமையாகிவிட்டதைப்போல மோசடிகள் - தில்லுமுல்லுகள், லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் இந்த அமைப்பில் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன.

### மோசடியின் முக்கியக் களம் பங்குச் சந்தைச் சூதாட்டம்

மத்தியப்புலனாய்வுக்கழகம்,சி.பி.ஐ.-யின் நான்கு இணை இயக்குநர்கள் தலைமையில் 200 அதிகாரிகள் மூன்று மாதங்களாகப் பங்குச் சந்தை - வங்கி மோசடிகள் பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள். இருந்தாலும் மலையைத் தோண்டி எலியைப் பிடித்த கதையாக ஒரு சில மோசடிப் பேர்வழிகள் தான் இதுவரை சிக்கியுள்ளனர். ஆனால் பத்திரிக்கைகள் மூலம் கசியும் செய்திகளோ பங்குச் சந்தை - வங்கி மோசடி விவகாரம் தோண்டத் தோண்ட முடிவற்ற குகையாகப் போய்க் கொண்டிருப்பதையே காட்டுகிறது.

பங்குச் சந்தை-வங்கி மோசடி விவகாரத்தின் மிக முககியமான அம்சமே பங்குச் சந்தை சூதாட்டத்தின் மூலம் சில மந்திரிமார்கள், வங்கி அதிகாரிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பங்குத் தரகர்களின் கூட்டணி லட்சக் கணக்கான கோடி ரூபாய் கொள்ளையடித்ததுதான்.

நடுத்தர, மேட்டுக்குடி வர்க்கத்தினர் தமது சேமிப்பு மற்றும் உபரித் தொகையைக் கொண்டு தாமே தொழில் நடத்தாத அதேசமயம் இலாபம் ஈட்ட முயலுவதுண்டு. முன்பு அவர்களில் பலர் வட்டி லேவா தேவி செய்து சம்பாதித்தனர். முதலாளித்துவ தொழில் - பொருளாதாரம் இப்போது அவர்களுக்கு வேறுசில வாய்ப்புகளைத் தருகிறது. முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களில் நிரந்தர வைப்பு நிதி பத்திரங்களை வாங்கினால் அதற்கேற்ப ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதம் தருவார்கள். தொழில் நிறுவனத்தின் நம்பகத் தன்மையைப் பொருத்து வட்டி விகிதம் கூடுதலாகவோ குறைவாயும்தான் வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்கள் செய்கின்றன.

## வங்கிகள், சேமிப்பு நிறுவனங்கள் மக்களை கொள்ளையிடுவதற்கான முதலாளித்துவ ஏகபோக அமைப்புகள்

வங்கிகள் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம், சிறு சேமிப்பு நிறுவனங்கள், தபால் நிலையச் சேமிப்பகங்கள் போன்றவற்றின் சாதாரண வாடிக்கையாளர்களுக்கு இந்த உண்மை தெரிவதில்லை. வாடிக்கையாளர்களின் நிதி மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பத்திரப்படுத்தி வைப்பதும், அவர்களின் வரவு - செலவுகளில் உதவுவதும், கொடுக்கல் - வாங்கல்களை எளிதாக்குவதும் இதுபோன்ற காரியங்களுக்காக ஒரு சிறு அளவு சேவைத் தொகை பெறுவதும் தான் இந்த நிறுவனங்களின் முக்கியப் பணி என்று அவர்கள் நம்புகின்றனர்.

வாடிக்கையாளர்களின் பணவிவகாரங்களில் உதவும் தரகர்களாகத் தான் ஆரம்பத்தில் இந்த நிதி நிறுவனங்கள் இருந்தன. ஆனால் அப்படிச் செய்யும் போதே நாட்டு மக்களின், வாடிக்கையாளர்களின் பண வருவாய்களை வசூலிக்கவும், இயக்கமற்ற நிலையிலும் சிதறியும் பலரிடம் உள்ள நிதியை ஒன்றுதிரட்டி இயக்கமுள்ளதாகவும் லாபம் தரக்கூடிய மூலதனமாக மாற்றுவதை

ஒரு வங்கியில் 2,000 வாடிக்கையாளர்கள் கணக்குகள் வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வங்கியில் அவர்கள் சேமிப்பு மற்றும் வரவுத் தொகையைப் போட்டு வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் அத்தொகை முழுவதையும் எடுத்துக் கொள்வதில்லை. மொத்த வாடிக்கையாளர்கள் போட்டுள்ள தொகைக்குமேல் அவர்கள் எடுத்துக் கொள்ளவும் முடியாது; அதாவது வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் வரவு வைத்துள்ள தொகைக்கு மேல் வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தப் போவதில்லை. எனவே எப்படியும் கணிசமான அளவு வாடிக்கையாளரது தொகை எப்போதும் அவற்றிடம் இருக்கும்.

அதே போலத்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் பிற சேமிப்பு அமைப்புகள்



படிப்பகம்

www.padippakam.com

கவோ கிடைக்கும். அதாவது அதிக நம்பகத் தன்மையுடைய தொழில் நிறுவனம், வட்டி, வைப்பு நிதி இரண்டையுமே திருப்பித் தரும் உத்திரவாதம் இருப்பதால் குறைவான வட்டி விகிதமே தரும். நம்பகத் தன்மை குறைவாக உள்ள தொழில் நிறுவனம் கூடுதலான வட்டி விகிதம் தரும்; ஆனால் ஏதாவது காரணத்தால் இத்தொழில் நிறுவனமே கவிழ்ந்து போய் வட்டியோடு வைப்பு நிதியும் பறிபோய்விடும் ஆபத்துள்ளது. எவ்வாறாயினும், இந்த முறையில் நிரந்த வைப்பு நிதியில் முதலீடு செய்வது ஆபத்து குறைவானது.

அதிக லாபமும் சம்பாதிக்கக் கூடிய ஆசையும், வாய்ப்பும் காட்டக்கூடிய இன்னொரு முறை உள்ளது. பல தொழில் நிறுவனங்களும் பங்குச் சந்தையில் வழக்கத்துக்கு விடும் பங்கு பத்திரங்களில், சரியானவற்றைக் கணித்து விலைக்கு வாங்கினால் அவற்றையே பிறகு உயர்ந்த விலைக்கு விற்று லாபம் ஈட்டலாம். ஆனால் கணிப்பு தவறாகிப் போனால் அதே பங்கு பத்திரங்களின் விலை வீழ்ச்சி அடைந்து நட்டமும் ஏற்படும் ஆபத்தும் உள்ளது. இது ஒருவகை சூதாட்டம் போன்றது. இந்தச் சூதாட்டத்தில் நிறைய லாபமடிக்கும் சூரப்புலிகளும் உண்டு; முதலையே பறிகொடுக்கும் "அப்பாவிகளும்" உண்டு. குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் நிர்வாகத் திறமை, தொழிலின் சாதக நிலைமை, பங்கு சந்தையின் போக்கு, நாட்டின் பொருளாதார நிலைமை ஆகிய பலவும் பங்குப் பத்திர மதிப்பின் ஏற்ற இறக்கத்தைத் தீர்மானிக்கின்றன.

இன்னொரு பங்குச் சந்தை சூதாட்டமும் உள்ளது. அது நேரடியாகவே சூதாட்டம் போலத்தான். குதிரைப் பந்தயத்தில் எந்தக் குதிரை வெற்றிபெறும் என்பதைக் குறித்து பந்தயம் கட்டுவதைப் போலவே பங்குச் சந்தையில் எதன் மதிப்பு ஏறும், இறங்கும் என்பது குறித்தும் பந்தயம் கட்டி சூதாடுவது. இந்தச் சூதாடிகள் நேரடியாகப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதில்லை. அதற்கு மாறாக பங்குச் சந்தையின் போக்குகள் குறித்து பந்தயம் கட்டி சூதாடுகின்றனர். இந்தச் சூதாட்டத்திலும் கொள்ளையடிப்பதும் உண்டு. போண்டியாவதும் உண்டு.




"பங்குச் சந்தையின் ஒரே ஆண்மகன் ஹர்ஷத்"; "கொஞ்ச காலம் பொறுத்திரு, அர்ஷத், நாங்கள் எல்லோரும் உன் பக்கம்" – ஹர்ஷத் மேத்தாவை வரவேற்று பம்பாயில் சுவரொட்டிகள்.

இவற்றில், லாபம் சம்பாதிப்பதற்காக பங்கு பத்திரங்களில் தமது சேமிப்புகளை முதலீடு செய்யும் நடுத்தர மேட்டுக்குடி வர்க்கத்தினரை ஆசை, பேராசை காட்டி கொள்ளையடித்ததுதான் இப்போதைய பங்குச் சந்தை - வங்கி மோசடி விவகாரத்தின் முக்கியமான அம்சமாகும்.

100 ரூபாய் பணம் கட்டினால் 5,000 ரூபாய் மதிப்புடைய சலவை இயந்திரம் கிடைக்கும்; 12,000 ரூபாய் மதிப்புடைய "கலர் டி.வி" கிடைக்கும்; 60,000 ரூபாய் மதிப்புடைய கார் கிடைக்கும் என்று ஆசை காட்டி சீட்டுப்பிடிக்கும் மோசடிச் சீட்டுக் கம்பெனிகள் பார்த்திருப்பீர்கள். ஏராளமான தொகையை வசூலித்துக் கொண்டு அந்தச் சீட்டுக்கம்பெனி அதிபர்கள் கம்பி நீட்டிவிடுவார்கள். அதைப்போல பல நிதிச் சேவை நிறுவனங்கள் புற்றீசல்களாக சமீப காலங்களில் தோன்றியிருக்கின்றன.

நல நிதி சங்கங்கள் (பெனிபிட் சொஸைட்டி), மூலதன முதலீட்டாளர்கள், நிதிச் சேவைகள் என்று பல பெயர்களில் அவை உள்ளன. பல்வேறு தொழில் நிறுவனங்களின் பங்குகளையும் வாங்கி - விற்கும் வேலையை இந்த நிதி நிறுவனங்கள் செய்கின்றன. இதை பல துறை நிர்வாக சேவை என்று அவை கூறிக்கொள்கின்றன. தனிப்பட்ட பங்குதாரர்கள் எவரும் நேரடியாக பங்கு பத்திரங்களை வாங்கவோ, விற்கவோ வேண்டியதில்லை. இந்த நிதி நிறுவனங்களிடம் தமது நிதியை ஒப்படைத்துவிட்டால் போதும்; அவர்களுக்காக அவர்களுடைய நிதியை இந்த நிறுவனங்களே லாபம் தரக்கூடிய தொழில் நிறுவனப் பங்கு பத்திரங்களில் முதலீடு செய்து ஒரு குறிப்பிட்ட அளவு ஈட்டுத்தொகையை வரவாகப் பெற்றுத் தரும். இந்த நிறுவனங்களே தமது பங்கு

ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வசூலிக்கும் தொகை முழுவதையும் வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய நிலைமை வராது. அதாவது ஒரு சமயத்தில் ரூ.100 கோடி அளவுக்கு நிதி வசூலிக்கிறார்கள் என்றால் 2 அல்லது 3 கோடி ரூபாய்தான் வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிவரும். ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ளவர்கள் ஒரே சமயத்தில் மாண்டு போவதோ, ஒரே சமயத்தில் "பாலிசி" முதிர்ச்சி அடைவதோ இல்லை. எனவே இந்த வகையிலும் வாடிக்கையாளரது நிதி இந்த நிறுவனங்களின் இருப்பில் எப்போதும் இருக்கும்.

இதுவும் அல்லாது, ஒரு வங்கியில் கோப்புக் காசோலையாகவோ, அஞ்சலகத்தில் பணவிடையாகவோ எடுத்து வேறொருவருக்கு நீங்கள் அனுப்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் பணமாகத் திருப்பிப்பெறும் வரை ஓரிரு நாட்களானாலும் அத்தொகை வங்கியிலோ, அஞ்சலகத்திலோதான் இருக்கிறது. இப்படி வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் பெறும் தொகை ஒரு சில நாட்கள் மட்டுமல்ல, ஒரு சில மணிநேரம் அவற்றிடம் இருந்தாலும் அவை லாபம் ஈட்டக் கூடிய மூலதனமாக மாற்றப்பட முடியும்.

அதோடு வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நேரடியாகவே கடன் மற்றும் பங்குப் பத்திரங்களை விற்கின்றன. "திருமகள் திருமணத் திட்டம்" "குழந்தைகள் கல்வி நிதித் திட்டம்" "முதியோர் ஓய்வுக் கால நலத்திட்டம்" என்று நம்பிக்கை ஊட்டியும் போனசு, வட்டி என்று ஆசை காட்டியும் பல்வேறு வைப்புநிதித் திட்டங்கள் மூலம் மூலதனம் திரட்டுகின்றன. நீண்ட கால வைப்பு நிதி சிறப்பு வைப்பு நிதி, தவணை முறை வசூல் முறை என பலவகைகளிலும் நிதி திரட்டப்படுகின்றன. அதாவது ஒரு குறிப்பிட்ட தொகையை வங்கியில் போட்டு வைத்தால் மாத வட்டி, முதிர்ச்சி அடையும்போது கூட்டுவட்டி தருகின்றன. மாத தவணையில் வசூலித்து முதிர்ச்சி அடையும் போது வட்டியுடன் தருகின்றன. இதற்கிடையே வங்கியில் உள்ள தொகை வங்கி அதிகார முதலாளிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும்.

இப்படிப் பலவகையில் திரட்டப்படும் நிதி அந்நிறுவனங்களின் சக்திவாய்ந்த மூலதன ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதையே வங்கி மூலதனம் என்கிறோம். இது மிகமிகப் பெரிய தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களோடு வங்கிகள் நெருக்கமாக ஐக்கியப்படுவதற்குக் காரணமாக அமைகிறது. ஏற்கனவே தொழில் மூலதனத்தின் பெரும்பகுதி அதைக் கட்டுப்படுத்தும் - பயன்படுத்தும் முதலாளிகளுக்குச் சொந்தமல்ல. பங்குகள் மூலம் திரட்டப்படும் மூலதனமே பெரும்பான்மையாகும். இந்தத் தொழில் மூலதனத்தோடு வங்கி மூலதனமும் இணையும்போது, தொழில் மற்றும்

படிப்பகம்

www.padippakam.com

களையும் புழக்கத்தில் விட்டு நேரடியாக நிதி மூலதனம் திரட்டவும் செய்கின்றன.

இந்திய அரசு வங்கி (ஸ்டேட் பேங் ஆஃப் இந்தியா) கனரா வங்கி, பரோடா வங்கி, ஆந்திரா வங்கி போன்ற 20 அரசுடமை வங்கிகளும் தனித்தனி நிதி மூலதன முதலீட்டுக் கிளை நிறுவனங்களைப் பெற்றுள்ளன. நாட்டின் மிகப் பெரும் தரகு அதிகார முதலாளிகளும் தமது தொழில் நிறுவனங்களின் துணை அமைப்புகளாக இத்தகைய நிதிச் சேவைப் பிரிவுகளை வைத்து இயக்குகின்றனர். இவை தவிர முன்னாள் அரசு மற்றும் வங்கி அதிகாரிகள் கூட்டுச் சேர்ந்து பல நிதி மூலதனச் சேவை நிறுவனங்களைத் துவக்கி நடத்துகிறார்கள். முன்னாள் இராணுவத் தளபதிகள், தரகு அதிகார முதலாளிகள், அரசு அதிகாரிகள் கூட்டுச் சேர்ந்து ஆயுத பேரத் தரகுக் கம்பெனிகள் நடத்திக் கொள்ளையடிப்பது போன்றவை இவை. இப்போது பங்குச் சந்தை - வங்கி மோசடியில் சிக்கியுள்ள ஃபேர்குரோத், குரோமோர் போன்ற நிதிச் சேவை அமைப்புகள் இத்தகையவைதாம்.

இந்த நிதி மூலதனச் சேவை நிறுவனங்கள், பங்குச் சந்தையில் ஒரு குறுகிய காலத்தில் மிகப்பெரும் அளவு கொள்ளையடிப்பதற்காக ஒரு உத்தியை வகுத்துச் செயல்பட்டன. திடீரென்று ஏராளமான அளவு நிதி மூலதனத்தைக் கொண்டு வந்து பங்குச் சந்தையில் கொட்டுவதன் மூலம் அதிக லாப ஈட்டுத் தொகை தரக்கூடிய பங்குகளை மட்டுமல்ல, நட்டத்தில் நடக்கும், நலிவுற்ற தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கூட செயற்கையான முறையில் கிடுகிடுவென உயரச்செய்தன. ஒரு பங்கின் ஆரம்ப மதிப்பு 10 ரூபாயில் இருந்து 200, 300 ரூபாயாக 'பங்குச் சந்தை மதிப்பு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; நிதி மூலதனச் சேவை நிறுவனங்களை நடத்தும் தரகர்கள் திடீரென்று மூலதனத்தைக் கொட்டி பங்குகளின் மதிப்பை 5,000, 6,000 ரூபாயாக சில வகைகளில் 15,000, 16,000 ரூபாயாக உயர்த்தினார்கள்.



எஸ்.வெங்கிடரமணன்

*பங்குத் தரகர்களும் அவர்களது கூட்டாளிகளும் கோடி கோடியாக கொள்ளையடிப்பதற்காக, பங்குகளின் விலையை ஆகாயத்துக்கு உயர்த்துவதற்கான நிதிமூலதனம் அரசு தொழில் கழகங்களிடமிருந்தே சூறையாடப்பட்டுள்ளது. வங்கி-அரசு அதிகாரிகள், அரசுத்துறை இயக்குனர்கள், மந்திரிகளுக்கும் இக்கொள்ளையில் பங்குண்டு.*

இதனால் சாதாரணப் பங்குதாரர்கள் திக்குமுக்காடிப் போனார்கள்; பேராசை அவர்களைத் தொற்றிக் கொண்டது. நேற்று 200 ரூபாயாக இருந்த ஒரு பங்கு இன்று 5,000 ரூபாயாகிவிட்டது; நாளை 20,000 ரூபாயாக உயரும்; எனவே கையில் இருக்கும் தொகையை எல்லாம் போட்டு இன்று பங்குகள் வாங்கினால் ஒரு குறுகிய காலத்திலேயே அவற்றின் மதிப்பு மலையென ஏறிவிடும்; விரைவிலேயே கோடீசுவரர்கள் ஆகிவிடலாம் என்கிற வெறி கொண்டனர்.

கையில் உள்ள பணத்தை மட்டும் அல்ல; வீடு, நிலம், நகை போன்ற சொத்துக்களை அடமானம் வைத்தும் விற்றும் பங்குச் சந்தையில் போட்டனர். மகள் திருமணம், மகன் கல்வி போன்றவற்றுக்காக காத்து வந்த தொகையைக் கூட, "அட, அடுத்த மாதம் பங்குகளை விற்றால் இன்னும் கூடுதலாகச் சம்பாதித்து விடலாம்" என்ற நம்பிக்கையில், கனவுகளில் கரைத்தனர். தனது சொந்த நிதியை மட்டுமல்ல, தமது தொழில்களில் உள்ள நடப்பு மூலதனத்தை, சக பங்காளியின் தொகையையும் கம்பெனிகள், அலுவலகங்களில் தமது பொறுப்பில் இருந்த தொகையைக் கூட பங்குச் சந்தையில் சூதாட துணிந்தவர்களும் உண்டு.

இவ்வாறு பல "அப்பாவி", "பேராசைக்கார" பங்குதாரர்களை பங்குச் சந்தைச் சூதாட்டத்திற்கு இழுத்துவந்து, பங்குகளின் விலையைக் கிடுகிடு என்று உயர்த்திவிட்டு திட்டமிட்டுத் தமது இருப்பில் உள்ள பங்குகளை விற்று ஏராளமாக இலாபமடித்தார்கள் பங்குச் சந்தைத் தரகர்களும் அவர்களின் கூட்டாளிகளும். பங்குகளின் விலை திடீரென்று வீழ்ந்ததால் இந்த விவரம் தெரியாத "அப்பாவி" "பேராசைக்கார" பங்குதாரர்கள் கோடிகோடியாகப் பறிகொடுத்தனர். இதுபோல அடுத்தடுத்துப் பலமுறை செய்து தொடர்ந்து பகற்கொள்ளையடித்தனர்.

இந்தப் பங்குச் சந்தை சூதாட்டத்தில் தரகர்களும் அவர்களது கூட்டாளிகளும் எவ்வளவு தொகை கொள்ளையடித்தனர் என்று யாரும் இதுவரை இறுதி முடிவுக்கு வரவில்லை. குறைந்தது மூன்று லட்சம் கோடி ரூபாய் இருக்கும் என்று பத்திரிக்கைகள், பொருளாதார நிபுணர்கள் கணிக்கின்றனர். இவ்வளவு தொகையையும் அந்நியச் செலாவணித் தடுப்புச் சட்டத்தை மீறி கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்குக் கடத்திக் கொண்டு போய்விட்டார்கள். வெளிநாட்டில் வாழும் இந்தியர் திட்டத்தின் கீழ் இந்தத் தொகையின் ஒரு பகுதியை மீண்டும் இங்கே கொண்டுவந்து முதலீடு செய்கிறார்கள். இந்தக் கிரிமினல் குற்றங்களை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிக்கும் வேலையை இந்த அரசு மேற்கொள்ளவே இல்லை. அதற்கு மாறாக பங்கு சந்தை வருமானத்துக்கு வரிக்குறைப்பு செய்துள்ளது; வெளி

வர்த்தக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் ஆதிக்கத்தை வங்கி அதிகார முதலாளிகள் பெறுகின்றனர். வங்கி அதிகார முதலாளிகள் தங்களது வங்கித் தொழில் தொடர்புகள், தொழில் முதலாளிகளது நடப்புக் கணக்குகள் மற்றும் பிற நிதி நடவடிக்கைகள் மூலமாக எல்லாத் தொழில் வர்த்தக நிறுவனங்களின் நிலைமைகளை சரியாகத் தெரிந்து கொள்ளமுடியும்; பிறகு அவைகளை அடக்கி நிர்வகிக்கவும், கடன்களைக் கட்டுப்படுத்தி அல்லது விரிவாக்கி, நிதி திரட்ட வசதி செய்து அல்லது அவைகளைத் தடை செய்து வங்கி அதிகார முதலாளிகள் தமது கட்டுப்பாட்டில் வைக்கமுடியும்; இதனால் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் விதியை முழுவதுமாக நிர்ணயிக்கவும், வருவாயை நிர்ணயிக்கவும், மூலதனத்தை அவற்றிடம் இருந்து பறிக்கவும் அல்லது அதை மிக விரைவாகவும் மிப்பெரிய அளவில் அதிகரிக்க அனுமதிக்கவும் முடியும்.

வங்கிகளின் இத்தகைய வளர்ச்சி காரணமாக வங்கி அதிகார முதலாளிகள் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் நிர்வாக வாரியங்களில் இயக்குநர்களாக இடம் பெறுகிறார்கள். வங்கி, தொழில், வர்த்தக நிறுவனங்களின் இந்தப் பிணைப்போடு அரசும் இணைவதால் பெரும் வங்கிகள், தொழில் - வர்த்தக நிறுவனங்களின் நிர்வாக வாரியங்களில் அரசுப் பிரதிநிதிகளாக அரசு அதிகாரிகளும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சிகளின் பிரமுகர்களும்கூட இடம் பெறுகின்றனர்.

வங்கி மூலதனமும், தொழில் மூலதனமும் இணைந்து அவற்றோடு அரசியல் செல்வாக்கும், ஏகபோக நிலையும் அடைந்து நிதிமூலதனமாக வளர்ந்து ஒரு சிறு கும்பலாகிய நிதி ஆட்சி குழுவின் ஆதிக்கம் நாடு முழுவதும் நிறுவப்படுகிறது. கூடவே வங்கிகள் "ஹோல்டிங்" முறையில் பல நிதி மூலதனக் கம்பெனிகளை நிறுவியும், கூட்டுப்பங்குக் கம்பெனிகளில் முதலீடு செய்தும், தாமே பங்குகளை வெளியிடும் அரசாங்கக் கடன்கள் மூலமாகவும் மேலும் மேலும் அதிகமான லாபங்களை ஈட்டுகின்றன. உண்மையில் இது ஒரு சிறு நிதி ஆட்சிக் கும்பல் சமுதாயம் முழுவதன் மீதும் தனது ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ளை இடுவதாக வளர்கிறது.

மேலை நாடுகளில் தனியார் ஏகபோக முதலாளிகள் இத்தகு நிதி ஆட்சிக் கம்பல்களாக வளர்ந்தனர். நமது நாட்டில் சோசலிசம் என்கிற பெயரில் இரண்டு தவணைகளில் 20 பெரும் வங்கிகளை அரசுடமை ஆக்கியதன் மூலம் அதிகார வர்க்க முதலாளிகளிடம் நிதி ஆதிக்கத்தை பாசிச இந்திரா கும்பல் ஒப்படைத்தது. சோசலிசச் சிற்பிகளாக சித்தரித்து பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் ஊட்டி வளர்த்த அந்த செல்லப் பிள்ளைகள்தாம் இன்றைய பங்குச் சந்தை வங்கி மோசடியின் நாயகர்களாக விளங்குகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

நாடுகளில் இருந்து வரும் மூலதனத்துக்கு மூலாதாரம் கணக்குக் கேட்பதில்லை என்று சலுகையும் கொடுத்துள்ளது.

### வகைவகையான மோசடிகள்
### ஆழங்காண முடியாத ஊழல்கள்
### எண்ணிலடங்காக் கையாடல்கள்

பங்குத் தரகர்களும் அவர்களது கூட்டாளிகளும் கோடி கோடியாகக் கொள்ளையடிப்பதற்காக, பங்குச் சந்தை சூதாட்டத்தில் கொண்டு வந்து கொட்டி, பங்குகளின் விலையை ஆகாயத்துக்கு உயர்த்துவதற்கான நிதிமூலதனம் எப்படி வந்தது என்பது அடுத்து நடந்த மிகப்பெரிய மோசடி. அரசுடைமை வங்கிகள் மற்றும் அரசுத் துறைத் தொழில்கழகங்களின் நிதியைத் தான் இதற்காக அவர்கள் சூறையாடினர். இதைச் செய்யும்போதே, வங்கிகள் குறிப்பாக அந்நிய வங்கிகள் மற்றும் அரசுத் துறை தொழில் நிறுவனங்களே பகற்கொள்ளை அடித்துள்ளன; அதிலும் ஒரு பெரும்பகுதி மந்திரிமார்கள், வங்கி அரசு அதிகாரிகள், அரசுத் துறை தொழில் நடத்தும் அதிகார வர்க்க முதலாளிகள் ஆகியோர்களோடு சேர்ந்து பங்குச் சந்தைத் தரகர்கள் கொள்ளையைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இது வங்கி மோசடிப் பகுதியாகும்.

இந்த வங்கி மோசடி எப்படி எல்லாம் நடந்தது என்கிற செய்தியே பிரமிப்பூட்டக் கூடியது. வங்கி மோசடி விவகாரம் அம்பலமானதும், இந்த மோசடியில் முக்கியக் குற்றவாளி நிறுவனமான இந்திய ரிசர்வ் வங்கி முதலாவதாக ஒரு விசாரணைக் கமிட்டி போட்டது. மோசடியில் பங்கிருப்பதாகக் கூறப்படும் இந்த வங்கியின் துணை இயக்குனர் ஜானகிராமன் தலைமையிலானது அக்கமிட்டி. இந்த ஜானகிராமன் கமிட்டியின் அறிக்கையின் படி 1991 ஏப்ரல் 1 முதல் 1992 மே 23 வரை 2,75,000 கோடி ரூபாய் வங்கிப் பணத்தை எடுத்து பங்குச் சந்தை சூதாட்டத்தில் போட்டுப் புரட்டியிருக்கிறார்கள். வங்கிப்பணத்தை எடுத்து பங்குச் சந்தைத் தரகர்களிடம் தருவதற்காக வங்கிகளின் புத்தகங்களில் ஏதாவது கணக்குக் காட்ட வேண்டாமா? இதற்காக வங்கி விதிமுறைகளையே கேடாகப் பயன்படுத்திப் பல தில்லுமுல்லுகள் செய்துள்ளனர்.

ஒரு வங்கி திவாலாகி அதன் வாடிக்கையாளர்கள் இழப்புகளுக்குள்ளாவதைத் தடுப்பதற்காக வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஒரு விதியைப் போட்டிருக்கிறது. அதன்படி ஒவ்வொரு வங்கியும் தனது இருப்பில் ஒரு குறிப்பிட்ட சதவீத அளவு ரொக்கம் வைத்திருக்க வேண்டும். இன்னொரு குறிப்பிட்ட சதவீத அளவை அரசாங்கப் பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்திருக்க வேண்டும். அவை முதலீடு செய்வதற்கு ஏற்ப பாதுகாப்புப் பத்திரங்கள் வங்கிகளுக்குத் தரப்படுகின்றன.

ஆனால் இந்த விதிமுறைக்கு மாறான நடைமுறை நீண்டகால வழக்கமாகவே இருந்திருக்கிறது. ஒரு வங்கியின் ரொக்கப் பண இருப்பு விகிதம் குறைவாக ஆகும்



**திட்டக் கமிஷன் உறுப்பினரும், தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய மோசடிப் பார்ப்பனருமான வி கிருஷ்ண மூர்த்தி கும்பலால் துவங்கப்பட்ட ஃபேர் குரோத் நிதிச் சேவை நிறுவனம் 700 கோடி ரூபாய்க்கு போலியான (போர்ஜரி) பங்கு பத்திரங்களை ஆந்திரா வங்கியிடம் காட்டி பணத்தைக் கையாடி, அதைப் பங்குச் சந்தை சூதாட்டத்திற்குப் பயன்படுத்தியுள்ளது.**

போது தரகர்களைப் பிடித்து மற்றொரு வங்கியிடம் ஒன்று அல்லது இரண்டு நாள் கெடுவுக்கு மற்றொரு வங்கியிடம் இருந்து குறுகியகாலக் கைமாற்றுக் கடன் வாங்கிக் கொள்ளும். இதற்காக இக்கடனை ஏற்பாடு செய்யும் தரகனுக்கு கமிசனும் கைமாற்றுக் கடன் தரும் வங்கிக்கு வட்டியும் செலுத்தப்படும். ஒரு நாளைக்கு 6,000 கோடி ரூபாய் வரை இப்படி வங்கிகளிடையே பணம் கைமாற்றுச் செய்வது நடக்கிறது.

அடுத்து, இதேபோல ரொக்கப்பண இருப்பு விகிதக் குறைவை ஈடு கட்டுவதற்காக ஒரு வங்கி தன்னிடம் உள்ள பாதுகாப்பு பத்திரங்களை மற்றொரு வங்கிக்கு விற்பதும் உண்டு. திரும்பப் பெறும் விலையையும்,தேதியையும் முன்னரே தீர்மானித்து ஒப்புக் கொண்டு விற்பதால், அவ்வாறு விற்கும் வங்கிக்கு நட்டம் ஏற்படும். இருந்தாலும் இதை ஏற்பாடு செய்யும் தரகனுக்கு கமிசனும், பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கும் வங்கிக்கு லாபமும் கொடுத்து இந்த விற்பனை நடக்கிறது. இது ஒரு வகையான அடகு வைப்பதுதான். இப்படி அடகு வைத்த பத்திரங்களைக் குறித்த தேதியில் திருப்பி மீட்க முடியவில்லையானால் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்து கொண்டு மறு அடகு வைப்பதும் உண்டு. அதாவது பாதுகாப்புப் பத்திரங்களை மீட்டு மீண்டும் அடகு வைப்பதாகப் பொருள். இதனால் இரண்டாம் முறையும் அந்த வங்கிக்கு நட்டம் ஏற்படும்.

வங்கிகளுக்கு இடையே நடக்கும் இப்படிப்பட்ட பரிவர்த்தனையை முக்கியமாகப் பயன்படுத்தி லட்சக்கணக்கான கோடி ரூபாய் வாங்கி பங்குச் சந்தையில் போட்டுப் புரட்டி கொள்ளை லாபம் அடித்துள்ளார்கள். இதிலும் பல மோசடிகள், முறைகேடுகள் நடந்துள்ளன.

வங்கிகளுக்கு இடையே பாதுகாப்புப் பத்திர பரிவர்த்தனை மூலம் நடக்கும் வர்த்தகத்தில் எண்ணிக்கையில் பெரும் சுமையாக இருக்கும் என்பதால் நேரடியாகப் பத்திரங்களை ஒரு வங்கியில் இருந்து இன்னொரு வங்கிக்கு எடுத்துக் கொண்டுபோய் ஒப்படைப்பது இல்லை. அதற்குப் பதிலாக வங்கியாளர் ரசீதுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது ஒரு வங்கி தான் விற்க முடிவு செய்துள்ள பாதுகாப்புப் பத்திரங்களுக்கு ஈடாக வங்கியாளர் ரசீதில் எழுதி ஒப்பமிட்டு, இன்னொரு வங்கிக்கு, அதுவும் தரகர் மூலம் கொடுக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளும் வங்கி, ரசீதில் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு பத்திரங்களுக்கு ஏற்ப ரொக்கமாகவோ, வங்கியாளர் காசோலையாகவோ முதலாவது வங்கிக்குச் செலுத்திவிடும். எல்லா வங்கிகளின் பாதுகாப்புப் பத்திரங்களின் இருப்புப் பற்றி ஒரு பொதுக் கணக்கு ஏடு இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ளது. புதிதாக பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கியுள்ள வங்கி அதை ரிசர்வ் வங்கிக்குத் தெரிவித்துவிடும். ரிசர்வ் வங்கி இந்தப் பரிவர்த்தனையைக் குறித்துக் கொள்வதோடு பாதுகாப்புப் பத்திரத்தை விற்கும் வங்கியிடம் போதுமான இருப்பு இருக்கிறதா என்பதைச் சோதித்தறிந்து கொள்ள வேண்டும். அதே சமயம் வங்கியாளர் ரசீது தந்து பணம் பெற்றுக் கொண்ட 90 நாட்களில் பாதுகாப்புப் பத்திரங்களை ஒப்படைத்துவிட வேண்டும்.

இந்திய அரசு வங்கி, தேசிய வீட்டு வங்கி, கராடு வங்கி, சௌராஷ்டிரா வங்கி, சின்டிகேட் வங்கி, கனரா வங்கி, பம்பாய் மாநகர கூட்டுறவு வங்கி போன்ற பல வங்கிகள் மேற்கண்டவாறு வங்கியாளர் ரசீது கொடுத்து பிற வங்கிகளிடம் குறிப்பாக வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து பணம் வாங்கியுள்ளன. இதனால் தரகர்களுக்கு கமிசனும், பிற வங்கிகளுக்கு லாபமும் ஈட்டித் தந்தன. இதைவிட இரண்டு முக்கிய வேலைகள் - மோசடிகள் செய்தன. அப்படி வங்கியாளர் ரசீது கொடுத்துப் பெற்ற தனக்குச் சொந்தமான பணத்துக்கான காசோலையை அதற்கு உரிமையற்ற பங்குச் சந்தைத் தரகர்களின் கணக்கில் போட்டு அவர்கள் பங்குச் சந்தை சூதாட்டத்தில் போட்டுப் புரட்டவும், கொள்ளையடிக்கவும் ஏற்பாடு செய்தன.

இப்படி நடந்த மோசடிக்குள் மோசடியும் ஒன்று உண்டு; அதாவது வங்கிகள் தமது இருப்பில் பாதுகாப்புப் பத்திரங்கள் இல்லாமலேயே வங்கியாளர் ரசீதுகள் கொடுத்தும், வங்கியாளர் ரசீதுகளின் பேரிலேயே மீண்டும் வங்கியாளர் ரசீது கொடுத்தும், தரகர்களின் சார்பாகத் தாமே வங்கியாளர் ரசீதுகள் கொடுத்தும் நிதி மூலதனம் திரட்டி பங்குச் சந்தைக்குத் திருப்பிவிடப்பட்டன. உதாரணமாக 59 கோடி மட்டுமே மொத்த சொத்துடைய கராடு வங்கி 700 கோடி ரூபாய்க்கு வங்கியாளர் ரசீது கொடுத்து ஏமாற்றியுள்ளது. 200 கோடி ரூபாய் மூலதனமே வைத்துத் துவங்கப்பட்ட தேசிய வீட்டு வங்கி அரசுத் மேத்தாவுக்காக 700

படிப்பகம்

www.padippakam.com

கோடி ரூபாய்க்கு வங்கியாளர் ரசீது கொடுத்துள்ளது. இதேபோல சௌராஷ்டிரா வங்கியும், பம்பாய் மாநகரக் கூட்டுறவு வங்கியும் மோசடிகள் செய்துள்ளன.

இரண்டாவதாக அதிக அளவில் மோசடிகள் நடந்தது, பாதுகாப்புப் பத்திரங்களை விற்பதற்கு பதில் குறிப்பிட்ட காலத்திற்கு அடகு வைப்பதும், அவற்றை மீட்க முடியாமல் போனால் மறு அடகு வைப்பதும் ஆகும். இப்படிச் செய்வதன் மூலம் பெறும் தொகையையும் அடகு, மறு அடகு வைக்கும் வங்கிகள் பெற்றுக் கொண்டு தனது வியாபாரத்துக்குப் பயன்படுத்தவில்லை. இவற்றையும் பங்குச் சந்தைத் தரகர்கள் கணக்கில் வரவு வைத்து அவர்கள் பங்குச் சந்தையில் சூதாடிவிட்டு திரும்பவும் வங்கிகளிடம் ஒப்படைப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இந்த வகையில் வங்கிகளிடையே அடகும், மறு அடகும் வைப்பதாக போலியான ஆவணங்கள் தயாரித்தும் மோசடிகள் நடந்துள்ளன. காரடு வங்கிக்கும் இங்கிலாந்தின் ஸ்டாண்டார்டு சார்ட்டட் வங்கிக்கும் இடையில் நடந்த இந்த மாதிரியான மோசடி ஒப்பந்தங்கள் மூலம் நரோத்தம் மற்றும் பூபேன் தலால் போன்ற தரகர்கள் ஆதாயம் அடைந்தனர். இந்திய அரசு வங்கிக்கும் பங்சாப் தேசிய வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் மூலம் அர்சத மேத்தா ஆதாயம் அடைந்தார்.

மூன்றாவதாக, பங்குச் சந்தையில் வாங்கியதாகக் கூறப்படும் போலி - ஃபோர்ஜரி - பங்குப் பத்திரங்களுக்கும் ரசீதுகளுக்கும் பணம் பட்டுவடா செய்வதன் மூலம் தரகர்களுக்குக் கோடிகோடியாகப் பணம் செலுத்தப்பட்டது. உதாரணமாக தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய மோசடிப் பார்ப்பனராகிய வி.கிருஷ்ணமூர்த்தி கும்பலால் துவங்கப்பட்ட ஃபேர் குரோத் நிதிச் சேவை நிறுவனம் 700 கோடி ரூபாய்க்கு போலியான - ஃபோர்ஜரி - பங்குப் பத்திரங்களை ஆந்திரா வங்கியிடம் காட்டி பணத்தைக் கையாடி, அதைப் பங்குச் சந்தையில் போட்டுள்ளது. அர்சத மேத்தாவின் மனைவி ஜோதி. இவர் பெயரில் உள்ளது ஜே.எச். மேத்தா என்ற கம்பெனி. இது 50 கோடி ரூபாய்க்கு இரண்டு ரசீதுகளை ஐக்கிய வர்த்தக வங்கியில் (யூகோ) காட்டியது. இந்த இரண்டு ரசீதுகளும் அவரது கணவன் அர்சத் மேத்தா பெயரில் உள்ள குரோமோர், மாஜ்டா தொழில் மற்றும் குத்தகைக் கம்பெனி ஆகிய இரு நிதி நிறுவனங்களிடம் பங்குகள் வாங்கியதாகக் காட்டின. உண்மையில் அப்படிப் பங்குகள் எதுவும் கிடையாது; போலி ரசீதுகள்; இருந்தாலும் யூகோ வங்கி அதை ஏற்றுக் கொண்டு 50 கோடி ரூபாயை அர்சத் மேத்தா மனைவிக்குக் கொடுத்துள்ளது.



பூபன் தலால்

**இந்தப் பங்குச் சந்தை சூதாட்டத்தில் தரகர்களும் அவர்களது கூட்டாளிகளும் குறைந்தது மூன்று லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு கொள்ளையடித்து இருக்கலாம் என்று பொருளாதார நிபுணர்கள் கணிக்கின்றனர்.**

இந்த மூன்று முறைகளோடு இன்னமும் நான்கு முறைகளில் பங்குச் சந்தைத் தரகர்கள் நிதி மோசடி செய்துள்ளனர். அவற்றில் ஒன்று, வங்கியின் ரொக்கப் பண இருப்பு விகிதத்துக்காகப் பயன்படும் குறுகிய காலக் கைமாற்றுக் கடன்வசதியைப் பயன்படுத்தி ஏராளமாக நிதியை எடுத்து பங்குச் சந்தையில் போட்டுப் புரட்டியுள்ளனர். இரண்டு, வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தங்களுக்குள் நடத்தும் ரசீதுக் கழிவுகளுக்கான பரிமாற்றத்தைத் தரகர்களின் கணக்கு மூலமாகச் செய்ததால் ஒரு சில நாட்கள் அவர்களின் இருப்பில் நிதி தங்கி பங்குச் சந்தை சூதாட்டத்திற்குப் பயன்பட்டது. மூன்று, தரகர்களுக்காகவே பத்திர அடகு, மறு அடகு வைத்து நிதி திரட்டிக் கொடுத்தனர். நான்கு, வங்கிகளின் நிதி மூலதனம் பற்றாது என்று அரசுக்குச் சொந்தமான பல்வேறு தொழில் நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்களின் உபரி நிதியை வங்கிகளில் பங்குச் சந்தையில் முதலீடு செய்யும்படி தூண்டி அவற்றையும் கையாடல் செய்தனர்.

இதுவரை நாம் பார்த்தவை பங்குச் சந்தை மற்றும் வங்கிகள் மூலமாக நடந்த மோசடிகளும், கொள்ளையும்தான். இதே அளவுக்கு முக்கியமானவை அரசுக்குச் சொந்தமான தொழில் - வர்த்தகக் கழகங்கள், வாரியங்களின் நிதி எவ்வாறு சூறையாடப்பட்டது; இந்த நிறுவனங்களைத் தனியுடைமையாக்குவது என்கிற சீர்திருத்தத்தின் மூலமாக இவற்றின் பங்குகள் எப்படிக் கள்ளத்தனமாக சுருட்டிக் கொள்ளப்பட்டன; இந்த மோசடி, கொள்ளையில் வந்த லாபத்தின் பெரும்பகுதி வெளிநாடுகளுக்கு எந்த வகையில் கடத்திச் செல்லப்பட்டன; இந்த மோசடி, கொள்ளையில் வங்கி - அரசு அதிகாரிகள், பங்குச் சந்தைத் தரகர்களோடு சேர்ந்து ஆதாயம் அடைந்த மந்திரிமார்கள் யார் யார்; இந்த விவரங்களோடு இது எப்படித் திட்டமிட்டு நாட்டையும் மக்களையும் ஒரு சிறு பார்ப்பன - பனியா துரோகக் கும்பல் கொள்ளையடித்தது - இப்போது தனது கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்க முயலுகிறது என்கிற விவரங்களை அடுத்த இதழில் காணபோம்.

## போலிச் சுதந்திரத்தை நிரூபித்த போலீசு!

திருப்பத்தூரில் 'புதிய கலாச்சாரம்' வாசகர் வட்டத்தினர் 15-8-92 அன்று போலி சுதந்திரத்தைத் திரைகிழிக்கும் வண்ணம் முழக்கங்களடங்கிய சுவரொட்டிகளை ஒட்டினர். அப்பொழுது 'கியூ' பிரிவு போலீசு ஒரு தோழரை இழுத்துச் சென்று தனியாக வைத்து மிரட்டியது, நைச்சியமாகவும் பேசி பார்த்தது. தோழர் உறுதியுடன் பதில்கொடுக்கவே பிறகு வேறுவழியின்றி அருகிலுள்ள டவுன் போலீசு நிலையத்தில் ஒப்படைத்தது. டவுன் போலீசு நிலையத்திற்கு வந்திருந்த டி.எஸ்.பி, ''உன்னை ஒழித்துக் கட்டிவிடுவேன்'' என்றெல்லாம் காட்டுக் கத்தல் கத்திவிட்டு, ''கைரேகை போட்டோ எடுத்துக் கொண்டு உள்ளே தள்ளு'' என்று கூறிவிட்டு சென்றார். தோழர் கைரேகை தரமுடியாது என மறுத்துவிட்டார். தோழரை 'போட்டோ' எடுத்துக் கொண்டு பொய்வழக்குப் போட்டு திருப்பத்தூர் சப்ஜெயிலில் போட்டனர். பின்னர் தோழர் ஜாமீனில் வெளியே வந்தார். போஸ்டரைக் கண்டு பீதியடைந்த போலீசின் அத்துமீறலை அம்பலப்படுத்தித் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

போலிச்சுதந்திரத்தை அம்பலப்படுத்தி உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி 5 இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த திட்டமிட்டது. ஆகஸ்டு 15-ல் உசிலம்பட்டி, 17-ல் ஆரியப்பட்டி, 20-ல் முண்டுவேலம்பட்டியிலும் பொதுக்கூட்டம் நடந்தது. ஆகஸ்டு 18-ல் உச்சப்பட்டி, 19-ல் மேட்டுப்பட்டியில் போலீசு அனுமதி மறுப்பால் கூட்டம் நடைபெறவில்லை. வி.வி.மு தோழர்கள் குருசாமி, சிவகாமு, கோவிந்தன் மற்றும் ம.க.இ.க. தோழர் கதிரவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நரசிம்மராவின் புதிய பொருளாதார திட்டம், டங்கல் திட்டம் மூலம் நாடு மறு அடகு வைக்கப்படுவதையும் இதனால் விவசாயிகளுக்கு வரும் பாதிப்புகளையும் விளக்கிப் பேசினர். ஜெயாவின் பார்ப்பன - பாசிசத் தன்மையையும் அம்பலப்படுத்திப் பேசினர். உள்ளூர் பிரச்சினைகளையும் பேசி சரியான கருத்தை வைத்து மக்களிடம் வரவேற்பைப் பெற்றனர். பொதுக்கூட்டங்களில் உசிலை வட்டாரக் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மேலும் போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி போடி, தேவாரம் பகுதிகளில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதால் வி.வி.மு. பிரச்சாரத்தை தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக எடுத்துச் சென்றது. தேவாரம், பண்ணைபுரம், கோம்பை ஆகிய ஊர்களிலும் போடியில் 6 இடங்களிலும் உசிலை வட்டாரக் குழுவினரின் கலைநிகழ்ச்சியோடு தெருமுனைக் கூட்டங்கள் நடந்தன. மக்கள் சிறந்த வரவேற்பளித்ததோடு மனமுவந்து நிதியுதவி செய்தும் ஆதரித்தனர்

www.padippakam.com

# நாற்காலி சுகத்தில் போலிகள் நரக வேதனையில் மக்கள்

*14 ஆண்டுகாலம் நாற்காலியில் நீடித்ததைத் தவிர மே.வங்க 'இடது' முன்னணி ஆட்சியில் சாதனை என்று குறிப்பிடும்படியாக எதுவுமே இல்லை. ஊழலும் ஒடுக்குமுறையும் பெருகிவிட்டதோடு, பிழைப்புவாதிகள் - கிரிமினல்களின் கூடாரமாக 'மார்க்சிஸ்ட்' கட்சி சீரழிந்துவிட்டது.*

மேற்கு வங்கத்தில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள 'இடதுசாரி' கூட்டணி தனது 15-வது ஆண்டில் அடியெடுத்து வைத்து 'சாதனை' புரிந்திருக்கிறது. மே.வங்க கூட்டணி அரசின் முதல்வரான ஜோதிபாசு இந்திய நாட்டிலேயே மிக நீண்ட காலம் முதல்வராகப் பணியாற்றியவர் என்று பெருமையுடன் பாராட்டப்படுகிறார். காங்கிரசுக்கு எதிராக 'இடதுசாரி' ஆட்சியை தொடர்ந்து 4-வது முறையாக மே.வங்கத்தில் நிலைநாட்டியுள்ள அவரது அரசியல் சாணக்கியத்தனத்தை முதலாளித்துவக் கட்சிகளே வியந்து பாராட்டுகின்றன. மாநிலத்தில் மட்டுமின்றி, பல்வேறு தேசியப் பிரச்சினைகளில் டெல்லி ஆட்சியாளர்கள் ஜோதிபாசுவிடம் கருத்துக் கேட்குமளவுக்கு அவர் தேசியத் தலைவராக உயர்ந்துள்ளார் என்றும், 'இடதுசாரி' கூட்டணி இந்திய அரசியலில் ஒரு சக்தியாக நீடிப்பதற்கு அவரே முக்கிய காரணம் என்றும் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

தமிழக ப்ா.சிச முதல்வரான ஜெயா கூட ஜோதிபாசுவிடம் ''தொடர்ந்து 14 ஆண்டுகள் பதவியில் நீடிக்கும் உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?'' என்று கேட்குமளவுக்கு அவர் திறமை வாய்ந்த முதல்வர் என்று 'மார்க்சிஸ்டு' கட்சி அணிகள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். பாசு தலைமையிலான 'இடதுசாரி' அரசின் சாதனைகளைக் காட்டி ''வங்கத்தைப் பார்'' என்று பிரச்சாரம் செய்து பூரித்துப் போகின்றனர். 14 ஆண்டுகால ஆட்சியில் போலிக் கம்யூனிஸ்டுகள் அப்படி என்னதான் சாதனை புரிந்துள்ளனர்?

14 ஆண்டுகாலம் நாற்காலியில் நீடித்ததைத் தவிர, மே.வங்க 'இடது' முன்னணி ஆட்சியில் சாதனை என்று குறிப்பிடும்படியாக எதுவுமே இல்லை. ஊழலும் ஒடுக்குமுறையும் பெருகிவிட்டதோடு கூட்டணி ஆட்சியில் முக்கிய அங்கம் வகிக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சி பிழைப்புவாதிகள் - கிரிமினல்களின் கூடாரமாகிவிட்டது. எளிமையை உபதேசிக்கும் தலைவர்களோ ஆடம்பர - உல்லாச சுகபோகங்களில் மூழ்கித் திளைக்கின்றனர்.

### ஊழலில் சாதனை

ஊழலற்ற ஆட்சியைத் தருவதாக வாக்களித்த 'இடது'களின் ஆட்சியில் வங்காள விளக்கு ஊழல் ஐந்தாண்டுகளுக்கு முன்பு சந்தி சிரித்தது. 'வங்கத்து சிங்கம்' ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு இந்த ஊழலில் சிக்கியிருந்தார். முதல்வரே ஊழலில் மூழ்கித் திளைத்த பிறகு மாநில நிர்வாகத்தைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? மந்திரிகள், அதிகாரிகள் - போலீசு - வர்த்தக சூதாடிகளின் கள்ளக்கூட்டு உறுதிப்பட்டு ஊழல் சர்வமயமாகியது. பெகரலா எனுமிடத்தில் கடுகு எண்ணெயில் ரேஷன் கடைக்காரர்கள் கலப்படம் செய்ததில் நூற்றுக்கணக்கானோர் கை, கால்கள் முடமாகிப் போனார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் வேலைக்கு ரூ.20,000; கடைநிலை அரசு ஊழியர் வேலைக்கு ரூ.15,000 என லஞ்சப் பட்டியல் போடுமளவுக்கு ஊழல் புழுத்து நாறுவதாக கல்கத்தா நாளேடுகள் பரிகசிக்கின்றன.

பாசுவின் அண்மைக்கால ஊழல்களில் மிகவும் பிரசித்தமானது சால்ட் லேக் ஊழல். கல்கத்தா அருகிலுள்ள சால்ட் லேக் பகுதியிலுள்ள சேரிவாழ் மக்களைத் துரத்திவிட்டு, அப்புறம்போக்கு நிலத்தை அரசு கையகப்படுத்தி மேட்டுக்குடி குடியிருப்புப் பகுதியாக மாற்றியது. அதிகார வர்க்கத்தினரும், போலீசு உயரதிகாரிகளும் 'மார்க்சிஸ்டு' மந்திரிகளும் விதிமுறைகளை மீறி தமது பினாமிகள் பெயரில் இங்கு அற்ப விலைக்கு நிலத்தை வாங்கிக் குவித்தனர். குறிப்பாக, பாசுவின் அந்தரங்கச் செயலாளரான ஜாய்கிருஷ்ணகோஷ் தனது பெயரிலும் தனது உறவினர்கள் பெயரிலும் முறைகேடாக நிலத்தை வாங்கிக் குவித்தார். எதிர்க்கட்சிகள் இதை அம்பலப்படுத்தத் தொடங்கியதும், பாசு என்ன சொன்னார் தெரியுமா? ''இது என்ன பெரிய ஊழலா?''

ஊழலுக்கு புதிய வியாக்கியானம் அளிக்கத் துவங்கிவிட்ட பிறகு பாசுவின் யோக்கியதை எப்படி இருக்கும்? அரசு நிதியைக் கேடாகப் பயன்படுத்துவதிலும், ஆடம்பர உல்லாசத்தில் மூழ்கிப் போவதிலும் அவர் ஜோதியாகக் கலந்தார். ஆட்சிக்கு வந்த 15 ஆண்டுகளில் 22 முறை வெளிநாடுகளுக்குப் பயணம் சென்றார் ஜோதிபாசு. மேலை நாடுகளில் வாழும் இந்தியர்களை மே.வங்கத்தில் முதலீடு செய்யுமாறு கோருவதற்காக அவர் பயணம் சென்றதாகக் கூறப்பட்டது. அவருடன் அரசு உயரதிகாரிகள் மட்டுமின்றி அவரது மனைவி, மகன் மருமகள் பேரக்குழந்தைகள் மற்றும் ஒரு மருத்துவரும் சுற்றுலா சென்றனர்

ஆனாலும் எதிர்பார்த்த அளவுக்கு அன்னிய முதலீடு கிடைக்கவில்லை. இருப்பினும் தனது மகன் தொடங்கவுள்ள நட்சத்திர ஓட்டல் மற்றும் கூட்டுத் தொழில் நிறுவனங்களுக்காக இந்தப் பயணங்களை பாசு சாதகமாக்கிக் கொண்டார். அரசு நிதியைக் கேடாகப் பயன்படுத்திய குற்றத்திற்காக பாசு பதவி விலக வேண்டுமென்றும், பயணச் செலவுத் தொகையை அரசுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் கல்கத்தா குடிமக்கள் கழகத்தினர் வழக்கு தொடுக்குமளவுக்கு பாசுவின் ஊழல் சந்தி சிரிக்கிறது.

### வீதியில் தொழிலாளர்கள் வறுமையில் விவசாயிகள்

உழைக்கும் மக்களின் நலன் காக்கும் ஆட்சியை - சிவப்புப் புரட்சியைச் சாதித்துள்ளதாக மார்தட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் தொடர்ச்சியாக ஆலை மூடலும் ஆட்குறைப்பும் நடந்து இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். போலிகளின் ஆட்சியில் 163 பெரிய ஆலைகளும் 22,733 சிறுதொழில் நிறுவனங்களும் மூடப்பட்டன. 1983-லிருந்து ஆலை மூடல் காரணமாக பிழைக்க வழியின்றி இன்று வரை 902 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் 151 பேர் மட்டும் வங்காள காகித ஆலையைச் சேர்ந்தவர்கள்!

இடது முன்னணி அரசின் கூற்றுப்படியே, 1977-ல் 'இடதுசாரிகள்' ஆட்சிக்கு வந்தபோது 14.04 லட்சம் பேர் வேலையின்மையில் தவித்தனர். இன்று அது 50.37 லட்சம் பேராக அதிகரித்துள்ளது. இதுவும் கூட நகர்ப்புற வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளோரின் எண்ணிக்கைதான். இன்னும் கிராமப்புற வேலையின்மையையும் சேர்த்தால் இதன் அளவு இருமடங்காகிவிடும்.

இதர மாநிலங்களை ஒப்பிடும்போது நிலச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே மாநிலம் மே.வங்கம்தான் என்று 'இடது'கள் சாதனையாகக் குறிப்பிடுகின்றனர். குத்தகை விவசாயிகளுக்கு நிலப்பட்டா கிடைத்ததைத் தவிர வேறொன்றையும் இது சாதிக்கவில்லை. குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்வதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல் போலிகள் கொண்டுவந்த இந்தச் சீர்திருத்தம் கடைசியில் விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்யாமல் தோல்வியில் முடிந்தது. கிராமப்புற விவசாயிகள் பற்றிய தேசியக் கமிஷனின் சமீபத்திய அறிக்கையே இதை நிரூபித்துக் காட்டுகிறது. இதன்படி, மே.வங்கத்திலுள்ள கூலி விவசாயப் பெண்களில் 50%-க்கு மேலானோரிடம் இரண்டு சேலைகள் கூட இல்லை. 75% கூலி விவசாயிகளிடம் ஒரு வேட்டி அல்லது லுங்கி மட்டுமே உள்ளது 40% கூலிவிவசாயக் குழந்தைகள் கோவணம் கட்டியோ அல்லது முழு அம்மணமாகவோ உள்ளனர். இதுதவிர மொத்த விவசாயிகளில் 60% பேர் ஏழ்மையிலும் அரைப்பட்டினி நிலையிலும் உள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது. இவ்வளவுக்

படிப்பகம்

www.padippakam.com

குப் பிறகும் கடந்த 10 ஆண்டுகளாக வங்கத்தில் 'மார்க்சிஸ்டு'களின் விவசாய சங்கங்கள் போராடியதாக வரலாறில்லை. மாறாக கிராமப்புற பஞ்சாயத்துகளில் பதவிக்கான போராட்டம்தான் அங்கே நடந்துள்ளது.

### கிரிமினல்களின் ராஜ்ஜியம்

1977-ல் ஜோதிபாசு முதல்வராகப் பதவியேற்றபோது ''உடனடியாக அதிசயத்தைச் சாதிக்க முடியாது; இருப்பினும் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தூய்மையான நிர்வாகத்தை அளிக்கவும் நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்'' என்றார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மட்டுமல்ல, தூய்மையான நிர்வாகத்தைக் கூட போலிகளால் தர முடியவில்லை. மாநிலமெங்கும் கிரிமினல் குண்டர்களின் அட்டகாசங்களும் கொலைகளும் தலைவிரித்தாடுவதோடு, 'மார்க்சிஸ்ட்' கட்சியே கிரிமினல்களின் புகலிடமாகிவிட்டது.




ஈராண்டுகளுக்கு முன்பு பண்டலா என்னும் இடத்தில் சுகாதாரத்துறை பெண் ஊழியர்கள், குண்டர்களால் கற்பழிக்கப்பட்டதற்கு இன்று வரை விசாரணை நடத்தப்படாததை எதிர்த்து பெண்கள் ஆர்ப்பாட்டம்.

21 வட்டங்களைக் கொண்ட சிறிய மாவட்டமான நாதியா மாவட்டத்தில் மட்டும் 1977-லிருந்து 1991-க்குள் 200-க்கும் மேற்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்களும் காங்கிரசுக் கட்சியினரும் 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் கல்கத்தா நகரில் காங்கிரசுத் தலைவியும் இன்றைய மத்திய மந்திரியுமான மம்தா பானர்ஜி, 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் பட்டப்பகலில் மிருகத்தனமாக கொலைவெறியோடு தாக்கப்பட்டார்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் ஊழல் கொள்ளையை அம்பலப்படுத்திய காரணத்திற்காக ''உத்தர் வங்க சம்பத்'' என்ற நாளேட்டின் மீது ஆத்திரமடைந்த 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் அச்சகத்தைத் தாக்கி திபகார் மண்டல் என்ற ஊழியரை 1988-ல் கொன்றொழித்தனர். அரசியல் செல்வாக்கையும் மக்கள் ஆதரவையும் படிப்படியாக இழக்கத் தொடங்கிவிட்ட பிறகு போலிக் கம்யூனிஸ்டுகள் தமது தேர்தல் வெற்றியைச் சாதிக்க இப்போது குண்டர் பலத்தையே அதிகம் சார்ந்துள்ளனர். 1989-ல் நடந்த கல்கத்தா நகராட்சித் தேர்தலின்போது 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் - வன்முறையில் இறங்கி கள்ள ஓட்டுப் போட்டதை நாடே கைகொட்டிச் சிரித்தது. அண்மையில் பாலிகஞ்ச் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் நடத்திய தில்லுமுல்லு, வன்முறை காரணமாக 44 வாக்குச் சாவடிகளில் மறுதேர்தல் வைக்கப்பட்டது.

என்றைக்கு கிரிமினல் பேர்வழிகள் 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் அடைக்கலம் புகுந்தார்களோ, அப்போதிலிருந்தே பெண்கள் மீதான பாலியல் வன்முறையும் கொலைகளும் வங்கத்தில் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. 1987-ல் 226 ஆக இருந்த கற்பழிப்புக் கொலைகள் 1991-ல் 452 ஆக 100% அதிகரித்துள்ளது. 1987-ல் 55 ஆக இருந்த வரதட்சிணை கொலைகள் 1991-ல் 534 ஆக உயர்ந்துள்ளது. விபச்சாரத்திற்காக பெண்களைக் கடத்திய சம்பவங்கள் 1987-ல் 243 ஆக இருந்தது. 1991-ல் அது 534 ஆகத் தீவிரமடைந்துள்ளது. ஈராண்டுகளுக்கு முன்பு பண்டாலா எனுமிடத்தில் ஒரு கிரிமினல் கும்பல் 7 பெண்களைக் கற்பழித்தோடு, அவர்களை நிர்வாண ஊர்வலம் நடத்தி அட்டூழியம் புரிந்தது. இக்கோரச் சம்பவத்தில் 'மார்க்சிஸ்டு' கட்சி அணிகளே சம்பந்தப்பட்டிருந்தனர்.

### அடக்குமுறையில் புதிய 'சாதனை'

சட்டவிரோத கிரிமினல் கும்பலின் அட்டூழியம் பெருகிவிட்டதைப் போலவே, சட்டபூர்வ கிரிமினல் கும்பலான போலீசின் அட்டூழியமும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் கொடிகட்டிப் பறக்கிறது. காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்தப்படியாக போலீசுக் கொடுமை உச்சத்தில் உள்ள மாநிலமாக மே.வங்கம் முன்னேறிவிட்டது என்று குற்றம் சாட்டுகிறது மக்கள் ஜனநாயக உரிமைக் கழகம் (APDR). சர்வதேச பொது மன்னிப்புக் கழகம் (Amnesty) மனித உரிமைகளை நசுக்கும் மாநிலங்களில் ஒன்றாக மே.வங்கத்தைக் கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

1977 தேர்தலின்போது அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வதாகக் கூறி போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தனர். ஆனால் 22 நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் விசாரணையின்றி தொடர்ந்து சிறையிலடைக்கப்பட்டனர். மனித உரிமைக்கான அமைப்புகள் தொடர்ந்து அவர்களது விடுதலைக்காகப் போராடிய போதிலும், நக்சல்பாரிகளை கிரிமினல் குற்றவாளிகளாகச் சித்தரித்து போலிகள் விடுதலை செய்ய மறுத்தனர். தனிமைக் கொட்டடிகளில் அவர்கள் வதைபடுவதை சர்வதேசப் பொது மன்னிப்புக் கழகம் அம்பலப்படுத்தி, மே.வங்க அரசு மீது குற்றம் சாட்டிய பின்னரே 1991-ல் நக்சல்பாரி புரட்சியாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மே.வங்கத்தில் தலைவிரித்தாடும் மனித உரிமை மீறல், போலீசுக் கொடுமைகளை எதிர்த்து பலமுறை மக்கள் போராடிய பின்னர் 1977-லிருந்து இன்றுவரை 15 விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டது. இவற்றில் 4 விவகாரங்களில் மட்டுமே விசாரணை முடிந்துள்ளது. இந்த 4 விசாரணைகளில், லால்பஜார் போலீசு நிலையத்தில் நடந்த இத்ரீஸ் மியான் என்ற கைதியின் கொலை பற்றிய விசாரணை மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு 7 போலீசார் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். வேடிக்கை என்னவென்றால் இந்த 7 போலீசாரும் அடுத்தவாரமே வேலையில் அமர்த்தப்பட்டனர். இதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் 'தூய்மையான' நிர்வாகத்தின் சாதனை!

கிரிமினல் போலீசார் மீது நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல; போலீசு கும்பலின் அட்டூழியங்களை அங்கீகரித்து அதற்குப் பெருந்தீனி போட்டு ஊட்டி வளர்க்குமளவுக்கு போலிகள் முன்னேறிவிட்டார்கள். கடந்த பட்ஜெட்டில் போலீசுத் துறைக்கு மட்டும் 6.67% - அதாவது 342 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மே.வங்கத்தைவிட பெரிய மாநிலமான மகாராஷ்டிராவில் 4.82% தொகைதான் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. மே.வங்கத்தின் போலீசுப் படையில் ஆயுதப் போலீசாரின் விகிதம் 27.7% ஆக அதிகரித்துள்ளது. ஆனால் பயங்கரவாதப் பிடியில் சிக்கியுள்ள பஞ்சாபில் இந்த விகிதம் 19%தான். மக்கள் நலனுக்கான ஆட்சி தருவதாகக் கூறிய போலிக் கம்யூனிஸ்டுகள் கடைசியில் மக்கள் விரோத ஒடுக்குமுறை எந்திரமான போலீசை ஊட்டி வளர்ப்பதில்தான் புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.

### போலிக் கம்யூனிஸ்டுகளின் நீலிக் கண்ணீர்

முன்பெல்லாம் மே.வங்க ஆட்சியைப்

படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகளின் கூட்டாளி; பாட்டாளிக்குப் பகையாளி: ஐந்து நட்சத்திர ஓட்டலில் தனது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடி, முதலாளிகளுடன் சேர்ந்து விருந்துண்டு களிக்கும் 'மார்க்சிஸ்ட்' முதல்வர் ஜோதிபாசு.

பற்றி விமர்சித்தால் ''கம்யூனிச ஆட்சியைக் கவிழ்க்க முதலாளித்துவ கைக்கூலிகள் செய்யும் அவதூறுப் பிரச்சாரமே இது'' என்று போலிகள் தமது அணிகளையும் மக்களையும் ஏய்த்துவந்தனர். ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகளின் 14 ஆண்டுகால ஆட்சியில், இந்த ஆட்சிக்கும் இதர முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகளின் ஆட்சிகளுக்கும் வித்தியாசம் ஏதுமில்லை என்று நிருபணமாகிவிட்ட பிறகு, அதன் தலைவர்களே இந்த உண்மையை இப்போது ஒப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

மேற்கு வங்க 'இடது' முன்னணியின் தலைவரான சைலன்தாஸ் குப்தா, ''குறிப்பிடும்படியாக நாம் எதையும் சாதிக்கவில்லை. நிர்வாகத்தில் ஊழலும், சுயநலனும் பெருகிவிட்டது'' என்று புலம்புகிறார். கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் வலது கம்யூனிஸ்ட் பிரமுகராக சுவதீன் குகா, ''உருப்படியாக நாம் ஒன்றையும் சாதிக்கவில்லை. அதேசமயம் ஊழலும், புகழ்நாட்டமும், ரௌடித்தனமும்தான் பெருகியுள்ளது'' என்று குறைபட்டுக் கொள்கிறார். 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகார்பூர்வ நாளேடான ''ஜனசக்தி''யின் ஆசிரியர் அனில் பிஸ்வாஸ், ''தலைவர்களைச் சுற்றி பிழைப்புவாதிகள்தான் சூழ்ந்துள்ளனர். தலைவர்களோ ஆடம்பரத்திலும் அதிகார போதையிலும் மிதக்கின்றனர். கட்சி அணிகள் அதிகரித்துள்ள போதிலும் அவர்களிடம் கம்யூனிச உணர்வு வளரவில்லை. இப்படியே போனால் ஆட்சியையும் கட்சியையும் பறிகொடுக்கத்தான் நேரிடும்'' என்று பீதியடைந்து எச்சரிக்கிறார். ''ஆட்சியில் ஊழலும் சிவப்பு நாடாத்தனமும் பெருகிவிட்டது. இந்த கசப்பான உண்மையை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று அண்மையில் மித்னாபூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் முதல்வர் ஜோதிபாசுவே குறைபட்டுக் கொண்டுள்ளார்.

'இடது'களது ஆட்சியின் 14 ஆண்டு நிறைவை ஒட்டி, அதன் சாதனைகளைத் தொகுத்து வருமாறு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகாரபூர்வ வங்க நாளேடான ''ஜனசக்தி'' தனது நிருபர்களைக் கிராமப்புறங்களுக்கு அனுப்பியது. அவர்கள் தொகுத்தளித்த பேட்டிகள் - ஆய்வுகளின்படி, பெரும்பான்மையான மக்கள் 'இடதுசாரி' ஆட்சியின் மீது வெறுப்பும் அதிருப்தியும் கொண்டுள்ளனர். நிலச்சீர்திருத்தம் செல்லாக்காசாகிவிட்டது. குண்டர்களின் அட்டூழியம் பெருகிவிட்டது. இதுதவிர மக்கள் தமது பேட்டிகளில் ரேஷன்கடை ஊழல், சாலை மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமை, மருத்துவமனை சீர்கேடு, விலைவாசி உயர்வு முதலானவற்றைக் கடுமையாகச் சாடியுள்ளனர். வேறுவழியின்றி இவற்றில் ஒருசிலவற்றை மட்டும் வெளியிட்டுள்ள ''ஜனசக்தி'' நாளேடு, நீண்ட தலையங்கம் தீட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு 'மார்க்சிஸ்டு' தலைவர்களை எச்சரித்துள்ளது.

பெருகிவரும் அதிருப்தியைக் கண்டு பீதியடைந்துள்ள மார்க்சிஸ்டுகள்', தமது ஓட்டாண்டித்தனத்தை மறைக்க ஒரு புதிய உத்தியைக் கையாளுகின்றனர். நடந்து விட்ட தவறுகளுக்கு சுயவிமர்சனம் ஏற்பதாகவும், புதிய அரசு இயக்கக் கமிட்டியை நிறுவி நிர்வாகத்தை முறைப்படுத்துவதாகவும், உழைக்கும் மக்கள் இதற்கு ஒத்துழைக்குமாறும் நீலிக்கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால் இந்த மாய்மாலத்தைக் கண்டு ஏமாறுவதற்கு மக்கள் முட்டாள்கள் அல்ல. ஏனெனில் 1984-ல் இதேபோல் சுயவிமர்சனம் செய்து கொண்ட போலிகள், 5 பேர் கொண்ட கமிட்டியை நிறுவி அரசு நிர்வாகத்தை முறைப்படுத்துவதாக வாக்களித்தனர். அதன்படி அரசு இயக்கக் கமிட்டியும் அமைக்கப்பட்டது. ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக இந்தக் கமிட்டி ஒருமுறைகூட கூடவில்லை

**மே.வங்கத்தில் 50.37 லட்சம் பேருக்கு வேலையில்லை. வாழ்விழந்த 902 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டனர். கடந்த 5 ஆண்டுகளில் கற்பழிப்புக் கொலைகள் 100% அதிகரித்துவிட்டது.**

### பூஜையறையில் புரட்சி நாற்காலி சுகத்தில் போலிகள்

நாற்காலி சுகம் காண்பதே புரட்சி என்றாகிவிட்ட பிறகு, மே.வங்க 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள்ளே அரசாங்கப் பதவிகளைக் கைப்பற்றுவதற்கான கோஷ்டி சண்டை புழுத்து நாறுகிறது. அசைக்க முடியாத தலைமையாக வர்ணிக்கப்பட்ட ஜோதிபாசுவுக்கு எதிராக மந்திரிகளே கலகக்கொடி தூக்குமளவுக்கு கட்சியே கலகலத்துப் போயுள்ளது. போலிகளின் அரசியல் சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தினால் மே.வங்கத்தில் இப்போது இந்துவெறி பாரதீய ஜனதா வேர்விடத் துவங்கிவிட்டது. ''ஆனந்த மார்கி''கள் மீண்டும் மண்டை ஓட்டுடன் கூத்தாடத் தொடங்கிவிட்டனர். மத்திய அரசு மே.வங்கத்துக்கு உரிய அளவு நிதி ஒதுக்கவில்லை என்று அடிக்கடி கடையடைப்பு போராட்டம் நடத்தும் போலிகள், அச்சுறுத்தும் அபாயமாக வளர்ந்துவரும் இந்துவெறி பாசிசத்தை எதிர்த்து இதுவரை ஒருமுறைகூட கடையடைப்பு போராட்டத்தை நடத்த முன்வரவில்லை.

மே.வங்கத்தில் இடது முன்னணி ஆட்சி சீரழிந்து போனதற்கு போலிக் கம்யூனிஸ்டுகளின் சீரழிந்த திரிபுவாத சித்தாந்தமே பிரதான காரணம். ஏற்கனவே ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் திரிபுவாதிகளின் போலிக் கம்யூனிசத்திற்கு கல்லறை கட்டப்பட்டுவிட்ட நிலையில், ஓட்டுத் துணியைக் கொண்டு தமது அம்மணத்தை மறைக்க இங்குள்ள போலிகள் முயற்சிக்கின்றனர். ஆளும் வர்க்க பாசிசக் கட்சிகளுடன் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்வதன் மூலம் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள அலைகின்றனர். இதுவரை காங்கிரசு எதிர்ப்பு நாடகமாடிய போலிகள் இப்போது மே.வங்கத்தின் அ.தி.மு.க.வாக மாறியதோடு, டாட்டா - பிர்லா மற்றும் அன்னிய முதலாளிகளின் நம்பகமான கூட்டாளிகளாகவும் மாறிவிட்டனர். இத்தகைய அயோக்கியத்தனங்களை அம்மணமாக ரஷியாவில் செய்தமைக்காக போலிக் கம்யூனிஸ்டுகளின் முன்னாள் தலைவரான கோர்பச்சேவுக்கு நோபல் பரிசளித்து முதலாளித்துவவாதிகள் கௌரவித்தனர் கோர்பச்சேவ் வழியில் 14 ஆண்டுகளாக விசுவாசமாக சேவை செய்துவரும் போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுவுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது!

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா ஆட்சியை அகற்றிட அணிதிரள்வோம்!

-பிரச்சார இயக்கம்

தமிழகத்தை பிடித்த பீடையின் பேயாட்சியில் மக்கள் அடைந்த வேதனைகள் எண்ணற்றவை. அடக்குமுறைகளிலும், ஊதாரி செலவுகளிலும், ஊழல்களிலும் ஜெயலலிதா நிகழ்த்திய சாதனைகளும் எண்ணற்றவை. இத்தகைய சாதனைகளையும் வேதனைகளையும் விளக்கி புரட்சிகர அமைப்புகள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

## புரட்சியாளர்களுக்கு சிறையும் போராட்ட களமாகும்!

பென்னாகரம், விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 7 தோழர்கள் தெருமுனைப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த பொழுது 28-7-92 அன்று கைது செய்யப்பட்டு பொய்வழக்கு போடப்பட்டனர். தோழர்களை தருமபுரி கிளைச்சிறைக்கு அழைத்துச் சென்றது. தோழர்கள் கோஷமிட்டு வந்ததைக் கண்ட சிறையதிகாரி ''உள்ளே வந்தால் போராடுவார்கள்; தொல்லை தருவார்கள்'' என்று கூறி மறுக்கவே போலீசு, தோழர்களை சேலம் மத்திய சிறைக்கு கொண்டு சென்று அடைத்தனர்.

சேலம் மத்திய சிறையில் உணவு சரியான அளவு வழங்கப்படாததைக் கண்டு ஆத்திரமுற்ற தோழர்கள், உணவை சாப்பிட மறுத்து எதிர்ப்பு தெரிவித்தனர். உணவு பட்டியல் அளவை காண்பிக்கும்படியும், அதன்படி அனைத்து கைதிகளுக்கும் உணவு வழங்கும்படியும் கோரிப் போராடினர். கைதிகளும் தோழர்களுக்கு ஆதரவளித்ததைக் கண்டு பீதியுற்ற சிறை நிர்வாகம், தோழர்களை கைதிகளிடமிருந்து பிரித்து தனிச் சிறையில் அடைத்தது. அங்கும் தண்ணீர் வசதி, சுகாதாரம் கோரி போராடினர். அடிமை முறையில் கைதிகளை உட்காரவைத்து கணக்கு எடுப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்தனர். இச் செயல் சிறை நிர்வாகத்திற்கு அச்சத்தையும், கைதிகளுக்கு உரிமையைப் போராடிப் பெறவேண்டும் என்ற துணிவையும் கொடுத்தது.

சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்ட தோழர்கள் ஜாமீனில் வெளிவந்தனர். போலீசை அம்பலப்படுத்தியும் 'ஜெ' ஆட்சியை அம்பலப்படுத்தியும் தொடர்ந்து மக்களிடையே பிரச்சாரம் செய்தனர். தோழர்கள் கைது செய்யப்பட்ட அதே பென்னாகரம் பேருந்து நிலையம் அருகில் 10-8-92 அன்று பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. வி.வி.மு. தோழர்கள் வெங்கடேசன் தலைமையில், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணித் தோழர் செல்வராஜ் சிறப்புரையாற்றினார்.

## ஆர்.எஸ்.எஸ். - போலீசு - அ.தி.மு.க. கும்பலின் கூட்டுத் தாக்குதல்!

இராமேசுவரத்தில் 30-7-92 அன்று புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சார்பாக நடந்த பொதுக்கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி வெறிக் கும்பல், போலீசு மற்றும் அ.தி.மு.க. கும்பல் கூட்டாக சேர்ந்து திட்டமிட்ட ரீதியில் தாக்குதல் தொடுத்தன. கூட்டத்தில் கலாட்டா செய்து தாக்கிய இந்துவெறிக் குண்டர்களை கைது செய்யாமல் அவர்களுடன் சேர்ந்து கூடியிருந்த கூட்டத்தினரை தடியடி நடத்தி போலீசு கலைத்தது. இறுதியில் பு.மா.இ.மு. மற்றும் ம.க.இ.க. தோழர்களையே கைது செய்தது. போலீசே அ.தி.மு.க. ரெளடிகளை அழைத்து புகார் எழுதி வாங்கி தோழர்கள் மீது பொய் வழக்குகளும் போட்டுள்ளது.

இராமேசுவரத்தில் பு.மா.இ.மு.-வின் வளர்ச்சிக் கண்டு ஆத்திரமுற்றுள்ள இந்துமதவெறிக் கும்பல் கடந்த சில மாதங்களாகவே பல்வேறு இடையூறுகளை, மிரட்டல்களைக் கையாண்டு வந்தன. இந்து மதவெறிக்கெதிராக சுவரெழுத்து எழுதிய தோழர்களை தாக்கவும் முயன்றது இந்துவெறிக் கும்பல். மொட்டை கடிதங்கள் மூலம் புலிகளுக்கும் பு.மா.இ.மு.-வுக்கும் தொடர்பு இருப்பதாக எழுதி உளவு போலீசின் அடக்குமுறையை தூண்டினர். இத்தகைய அவதூறுகளும் அடக்குமுறைகளும் மீறி பு.மா.இ.மு.-வின் வளர்ச்சி கண்டு பீதியடைந்த இந்துவெறிக் கும்பலும் அ.தி.மு.க. ரெளடிகளும் போலீசு துணையுடன் நடத்திய வெறியாட்டமே 30-7-92 அன்று நடந்தது.

பொதுக்கூட்டத்தில் சோடாபாட்டில், கல், தடி கொண்டு மேடையை தாக்கினர். விளக்குகள், ஒலி-ஒளி சாதனங்கள் முதலியவற்றை உடைத்தும் கலைக்குழுத் தோழர்களின் உடைகள், இசைக் கருவிகளை திருடிச் சென்றும் உள்ளனர். பகுதி பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் கிரிதரன் மற்றும் தோழர் சுந்தர் ஆகியோருடைய வீடுகளில் புகுந்தும் பொருட்களை உடைத்து வெறியாட்டம் போட்டது அக்கும்பல். இச் சம்பவத்தில் தலையில் பலத்த காயமுற்ற ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். காயமுற்ற நிலையிலும் பத்துக்கும் மேற்பட்ட போலீசார் சூழ்ந்து கொண்டு தாக்கினர். கூட்டத்தில் கலவரம் மூண்டபோது பகுதிவாழ் மக்கள் அஞ்சி ஒதுங்கி ஓடிவிடவில்லை. இந்து மதவெறிக் கும்பலுக்கு தக்க பாடம்புகட்ட வெகுண்டெழுந்தனர். போலீசின் செய்கையைக் கண்டும் எதிர்த்தனர். எனினும் லத்திகளும், துப்பாக்கி கட்டைகளும் கொண்டு போலீசு மக்களைக் கலைத்து விரட்டியது.

இந்துவெறியர்கள் - அ.தி.மு.க. ரெளடிகளுக்கு போலீசு பக்கபலமாக நின்று தனது மக்கள் விரோதத் தன்மையை இனங்காட்டிக் கொண்டதையும், கூட்டம் கூடும் உரிமை - பேச்சுரிமை - ஜனநாயக உரிமை என்பதெல்லாம் உண்மையில் யாருக்கு உள்ளதென்பதையும் அம்பலப்படுத்தி பு.மா.இ.மு. பகுதியில் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது. சமூக விரோதிகளும், எதிரிகளும், போலீசும் ஆயுத பாணியாக, பயங்கரவாதத்தைக் கையிலெடுத்து வரும்போது நீதிக்கான மக்கள் போராட்டங்களும் அதன் உயர்ந்த கட்டத்தை எட்டும். எதிரிகளுக்கு தக்க பாடம் புகட்டும் நாளும் வெகு தொலைவில் இல்லை.

## படம் பிடிக்க வந்து ஓட்டம் பிடித்த போலீசு

பார்ப்பன - பாசிச ஜெயா ஆட்சியின் வேதனை, சாதனைகளை விளக்கியும் ''ஆகஸ்டு 15'' போலிச் சுதந்திரத்தினை அம்பலப்படுத்தியும் 15-8-92 அன்று பள்ளிப்பாளையத்தில் தோழர் தர்மராஜ் தலைமையில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பொதுக்கூட்டத்திற்குரிய போலீசு அனுமதி பல்வேறு இழுத்தடிப்புகள், மிரட்டல்களுக்குப் பின்னே கிடைத்தது.

கூட்டத்திற்கு முன்கூட்டியே 3 எஸ்.ஐ. தலைமையில் போலீசு பட்டாளம் வந்து பீதியூட்டியது. எழுதிக் கொடுத்ததை மீறிப் பேசினால் கூட்டம் தடைபடும் என்றும் மிரட்டினார்கள். கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஒருவன் கேமிராவோடு உள் நுழைந்ததை ஒரு தோழர் தடுத்து யார் என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே அத்தோழரை படம் பிடித்தான். உடன் தோழர் கேமிராவைப் பறித்துக் கொண்டு அதிலுள்ள 'பிலிம்' சுருளை எடுத்துத்தரும்படி கேட்டதற்கு அதில் கலெக்டர் ஆபீஸ் நிகழ்ச்சி படங்கள் உள்ளதாகக்கூறித் தர மறுத்தான். போலீசும் கூடி நின்றுகொண்டு எடுத்துத்தர மறுத்தனர். இறுதியில் தோழர்கள் கடைசியில் எடுத்த படச்சுருளை அழித்துவிட்டே 'கேமிராவை' கொடுத்தனர்.

சிறிது நேரத்தில் மீண்டும் சிறப்பு பிரிவு போலீசோடு 'கேமிரா' போலீசும் வந்து ''சுதந்திரம், ஜனநாயகம் என்றெல்லாம் பேசுகிறீர்களே, பத்திரிக்கைகாரரை ஏன் போட்டோ எடுக்க அனுமதிக்கவில்லை'' என்று கேட்டனர். பத்திரிக்கையாளருக்குரிய அடையாள அட்டை கேட்டு வாதாடவே, ''சரி, போலீசுதான் நாங்க; இப்ப என்ன; படம் எடுப்போம்'' என்று மிரட்டினர். சிறப்புரையாற்றிக்




படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த தோழர் சீனிவாசன் (ம.க.இ.க.) "போலீசு, பொதுக் கூட்டத்தில் பேசுகிறவர்களை படம் பிடிக்க எந்த சட்டத்தில் அனுமதி உள்ளது; சட்டமிருந்தால் அதன் நகலை காட்டுங்கள்; அல்லது போலீசு உத்தரவு என்றால் எழுதிக் கொடுத்துவிட்டு வேண்டுமா னால் வீடியோ கேசட்டே கூட எடுத்துக் கொள்ளுங்கள்; நாங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம்" என்று எச்சரித்தார். இதன் பின்னும் கேமிராவை தூக்கிக் கொண்டு குட்டிபோட்ட பூனை போல மாடிகளின் மீது ஏறி நோட்டமிட்டும், மிரட்டிக் கொண்டுமிருந்தனர். தோழர்கள் மீண்டும் எச்சரிக்கவே "இல்லை; எடுக்கவில்லை" என்று கூறிச் சென்றனர். போலிச் சுதந்திரத்தை திரைகிழித்தும், பார்ப் பன - பாசிச ஜெயா ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டியதன் அவசியத்தையும் விளக்கி நீண்டநேரம் தோழர் சிறப்புரையாற்றி னார். இறுதி வரையிலும் 400-க்கும் மேற்பட்டவர்கள் திரண்டிருந்து கேட்டு ஆதரவளித்தனர்.

## ம.க.இ.க.வினரை தாக்கிய ஜெயாவின் ரௌடிக்கும்பல்

**திருச்சியில்** 'ஜெ' ஆட்சியின் ஓராண்டு வேதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் பரவலாக நடத்தப்பட்டது. 24-7-92 அன்று திருச்சி ராமகிருஷ்னா திரையரங்கு அருகிலும், 14-8-92 அன்று திருவரம்பூர் அண்ணாசீரணி அரங்கிலும், 15-8-92 அன்று திருச்சி கிராப்பட்டியிலும், 20-8-92 அன்று திருச்சி விக்டோரியா சாலையி



லும் (குறத்தெரு), 27-8-92 அன்று திருச்சி விமானநிலையம் காமராஜ் நகரிலும், 28-8-92 அன்று காட்டூர் கடைவீதியிலும் ம.க. இ.க. பொதுக்கூட்டம் நடத்தியது. தோழர்கள் தமிழ்மணி, காளியப் பன் மற்றும் ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் தோழர் முருகானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூடுதலாக அண்ணாமலை நகர் கற்பழிப்பு - படுகொலை, போலி சுதந்திரம், காங்கிரசு - ஹர்சத் மேத்தா ஊழல் பற்றியும் சிறப்புரையாற்றினார்கள். பொதுக்கூட்டங் களில் 500-லிருந்து 1000 பேர் வரை கூடி ஆதரவளித்தனர். புரட்சி கர கலை நிகழ்ச்சியும் கலைக்குழுத் தோழர்களால் நடத்தப்பட்டன. கிராப்பட்டி கூட்டத்தில் எடமலைப்பட்டிப் புதூர் எஸ்.ஐ. வந்து பலவாறாக தோழர்களை மிரட்டிப் பார்த்தார். பலனளிக்காததால் மைக்செட்காரரை மிரட்டி ஒலிபெருக்கியை 10 மணிக்கு மேல் போடவிடாமல் செய்தார். எனினும் ஒலிபெருக்கி இல்லாமல் 11 மணிவரை மக்கள் ஆதரவுடன் கூட்டம் நடந்தது.

27-8-92 அன்று விமானநிலையம் அருகே நடந்த கூட்டத்தில் அ.தி.மு.க கும்பல் தொடர்ந்து சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. தோழர்கள் பார்ப்பன ஆட்சி என்று அம்பலப்படுத்திய போது ரவுடிகள் சாதியைப்பற்றி பேசாதே என கூச்சல் போட்டனர். பிறகு கலவரத்திலும் இறங்கினர். சரமாரியாக கற்களால் தாக்கினர். ஒரு கருங்கல் பேசிக்கொண்டிருந்த தோழர் முருகானந்தம் மண் டையை உடைத்தது. ரத்தம் கொட்டி தோழரின் சட்டை முழுதும் நனைந்தது. சைக்கிள் செயின், கட்டான், வீச்சறுவாள், சோடாபாட் டில் முதலிய ஆயுதங்களுடனும் தாக்கினர். அந்தப் பகுதி அ.தி. மு.க. வட்டச் செயலாளர் துரைசாமி, அங்குசாமி மற்றும் அ.தி.மு.க. ரவுடிகள் பலரும் சேர்ந்து தோழர்களை கடுமையாகத் தாக்கினர். "ஏண்டா கூட்டமா போடுற" என்று தோழர் முத்துவை அடித்து உயிர் நிலையை தாக்கினர். தோழர் ராஜா உட்பட சில தோழர்க ளுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. மேடையை அடித்து நொறுக்கினர். ஒலி-ஒளி பொருட்களைச் சூறையாடவும் செய்தனர். வெளியீடுக ளும் தோழர்களின் பொருட்களும் சேதப்படுத்தப்பட்டது. தோழர் முத்து வைத்திருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இவற்றை யெல்லாம் போலீசு வேடிக்கைப் பார்த்து நின்றது.

தாக்கிவிட்டு அ.தி.மு.க. கும்பல் ஓடியபிறகு பகுதிமக்கள் சுமார் 40 பேர் நமக்கு ஆதரவாக போலீசு நிலையம் வரை பாது காப்பு கொடுத்து உடன் வந்தனர். போலீசிடம் புகார் கொடுக்கப்பட் டது. இக்கலவரத்தால் கூட்டம் பாதியிலேயே நின்றுபோனது. இத் தாக்குதல் திடீரென்று நடந்ததல்ல. முன்கூட்டியே திட்டமிட்டு அது வும் அரசியல் ரீதியாக சந்திக்க திராணியற்ற அ.தி.மு.க. கும்பலின் மேல்மட்ட தலைமையின் கட்டளைப்படித்தான் நடந்துள்ளது.

28-8-92 காட்டூர் பொதுக்கூட்டத்திற்கு முன்கூட்டியே அரிய மங்கலம் போலீசு நிலையத்தில் மனு கொடுக்கப்பட்டது. கடைசி நேரத்தில் கூட்டம் தடைசெய்யப்பட்டதாக தெரிவிக்கவே என்ன காரணம் என கேட்க தோழர் முத்து தோழர் முருகானந்தம் இருவ ரும் போலீசு நிலையம் சென்றபோது அவர்களைக் கைது செய்த னர். காட்டூர் பகுதியில் கூட்டம் பார்க்க வந்த பொதுமக்களை விரட்டி யடித்து ம.க.இ.க. தோழர்கள் ஜான், வாசு ஆகியோரை கைது செய்தனர். காரணம் கேட்டதற்கு செப். 1-ந் தேதி (தி.மு.க.) மறிய லையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்வதா கக் கூறினர். கூட்டம் பார்க்க வந்தவர்கள், உதவி செய்தவர்கள் அனைவரையும் கைது செய்ய முயன்றதைக் கண்டு தோழர்கள் கண்டனக் குரல் எழுப்பியதும் அம்முயற்சியை கைவிட்டனர். தோழர்கள் கைதாகி அழைத்துச் செல்லுகையில் போலீசையும் ஆட் சியையும் அம்பலப்படுத்தி முழக்கமிட்டனர். மேலும் தோழர் தமிழ் மணியை உளவுப் போலீசு நிர்பந்திக்கவே கைது செய்ய முயன்றது, போலீசு. மனைவி, குழந்தையுடன் இருந்த தோழர் தனியாக வரமுடி யாது குடும்பத்துடன்தான் வருவேன் என்று உடன் சென்றார். போலீசு நிலையத்திலும் தோழரை தனியாக பிரிக்க முயன்று தோழர் சம்மதிக்காததால் வேறுவழியின்றி குடும்பத்துடன் தோழர் தமிழ்ம ணியை மட்டும் விடுதலை செய்தனர். மற்ற 4 தோழர்களின் கைதை கண்டித்து சுவரொட்டி ஒட்டப்பட்டது.

**கோவையில்** 19-8-92 முதல் 26-8-92 வரை இடைபட்ட நாட்களில் 5 பொதுக்கூட்டங்கள் நடத்த ம.க.இ.க. திட்டமிட்டு அனுமதி கோரியது. போலீசு அனைத்திற்கும் அனுமதி மறுத்துள் ளது. 'ஜெ' ஆட்சியின் ஓராண்டு வேதனையை விளக்கி கடந்த மாதம் தெருமுனைப் பிரச்சாரத்தின் போது தோழர்கள் கைது செய் யப்பட்டு வெகுநாள் சிறையில் பிணை மறுக்கப்பட்டு இருந்தனர். பிறகு வெளி வந்தபின் பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி கோரிய தற்கும் அடாவடித்தனமாக அனுமதி மறுக்கப்பட்டது. தற்போது தோழர்களை மீண்டும் காரணமின்றி போலீசு கைது செய்துள்ளது. **கோவையில்** தொடர்ச்சியாக இவ்வாறு போலீசின் அடக்குமுறை நீடிக்கிறது.

இதுவன்றி 'ஜெ'யின் ஓராண்டு ஆட்சியின் வேதனையை விளக்கி 10-8-92 அன்று தஞ்சை கரந்தையில் ம.க.இ.க. சார்பாக நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றி னார். 13-8-92 அன்று திருச்சி - கீழப்பழுவூரில் வி.வி.மு. சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முத்து, முருகானந்தம் ஆகி யோர் உரையாற்றினர். புரட்சிகர கலைநிகழ்ச்சியும் திரளான மக்கள் ஆதரவில் நடந்தது.

**சென்னிமலை** வட்டாரத்தில் வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து 2-8-92 அன்று 8 இடங்களில் தெருமு னைப் பிரச்சாரம் மேற்கொண்டன.

**மதுரை** - ஜெய்ஹிந்த் புரத்தில் பு.மா.இ.மு.-வின் பொதுக்கூட் டம் 1-8-92 அன்று நடந்தது. ஒருவார காலமாக தோழர்களை அலையவிட்டு இழுத்தடித்து கூட்ட நாள் அன்று போலீசு அனுமதிய ளித்தது. 800-க்கும் மேற்பட்டவர்கள் கூடியும் மனமுவந்து நிதியுதவியளித்தும் ஆதரவளித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

# “ஒடுக்குமுறை அரசு எந்திரத்தை முதலில் அகற்ற வேண்டும்”

## -ஒரு நீதிபதியின் ஆவேசம்

பஞ்சாபில் நடக்கும் அரசு பயங்கரவாதமனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடி வருபவர் உயர் நீதி மன்ற முன்னாள் நீதிபதி அஜித் சிங் பெயின்ஸ். கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் இவரும் பயங்கரவாதத் ‘‘தடா’’ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விலங்கிட்டுக் கொடுமைப்படுத்தப் பட்டார். நமது நாட்டில் மட்டுமல்ல, உலக அளவில் எழுந்த கண்டனக் குரல் - நிர்பந்தம் காரணமாக இவர் சமீபத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார். ‘‘சண்டே அப்சர்வர்’’ ஏட்டுக்கு இவர் அளித்துள்ள பேட்டியை இங்கே வெளியிடுகிறோம். இவரது அரசியல் கருத்துக்களில் ‘‘புதிய ஜனநாயக’’த்துக்கு உடன்பாடு இல்லை; ஆனால் மனித உரிமை மீறல்கள், அரசு பயங்கரவாதம் குறித்த இவரது கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை. ஜனநாயக விழிப்புணர்வு தரத்தக்கவை.

**கேள்வி:** *நீதிபதி பெயின்ஸ் அவர்களே, ‘‘தடா’’வின்கீழ் நான்கரை மாதங்கள் சிறையில் இருந்தபிறகு நீங்கள் ஏன் ஜாமீனில் விடப்பட்டீர்கள்? ‘‘தடா’’ கைதியைப் பிணையில் விடுவது விதிவிலக்கானதா?*

**பதில்:** என்னை ஜாமீனில் விடுவித்ததில் ஒன்றும் விதிவிலக்கு இல்லை. ‘‘தடா’’வின் கீழ்வரும் குற்றம் எதையும் செய்யவில்லை என்றோ, ‘‘தடா’’வின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் மேலும் எந்தக் குற்றமும் செய்ய மாட்டார் என்றோ சிறப்பு நீதி மன்றம் கருதும்பட்சத்தில் அது ‘‘தடா கைதிகளை ஜாமீனில் விடுவதும் உண்டு. என்னை எதுவும் கேட்கவில்லை. நீதி மன்றத்துக்கு நான் வருவதற்கு முன்பே அவர்கள் என்னைச் ஜாமீனில் விடுவதற்கான உத்திரவைத் தயாரித்து விட்டார்கள். ஒருவேளை உச்சநீதிமன்றம் அவர்களுக்கு ஆணையிட்டிருக்க வேண்டும். எனது ஜாமீன் கோரிக்கையை அரசாங்கம் நிராகரிக்காது என்று உச்சநீதிமன்றத்தில் அரசுத் தலைமை வழக்கறிஞர் ஆக்ஸ்டு 15-ல் தெரிவித்தார்.

**கேள்வி:** *உங்கள் விடுதலைக்கு முதலமைச்சர் பியந்த் சிங் காட்டிய எதிர்ப்பைப் பார்க்கும்போது, அரசாங்கம் உங்கள் விடுதலையை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கு கணிசமான அளவு நிர்பந்தம் தேவையாக இருந்திருக்கும். மனச்சாட்சியின் கைதி என்று உங்களை சர்வதேசப் பொதுமன்னிப்புக் கழகம் தீர்மானித்தது, உங்கள் விடுதலைக்கான காரணமாக இருந்ததா?*

**பதில்:** என்னைக் கைது செய்ததால் அரசாங்கத்துக்கு லாபம் ஒன்றுமில்லை. உண்மையில் இந்தக் கைதால் அது தர்மசங்கடத்துக்குள்ளானது. இது உலகமுழுவதும் உள்ள நியாய சிந்தனை உள்ள மனிதர்களால் கண்டிக்கப்பட்டது. சர்வதேசப் பொதுமன்னிப்புக் கழகம் ஒரு முக்கியப் பங்காற்றி இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். கடிதங்கள் வந்து குவிந்தன. இது நான் தனிநபர் என்கிற பிரச்சினையல்ல; ஆனால் இது மனிதக் கண்ணியம் பற்றிய பிரச்சினை.

**கேள்வி:** *கைது செய்யப்பட்டது உங்களுக்கு ஆச்சரியமானதாக இருந்ததா?*

**பதில்:** நான் ஒருபோதும் இதை எதிர்பார்க்கவில்லை. நான் மனித உரிமைகளுக்கான ஒரு செயல்வீரன்; எந்தவொரு அரசியல் கட்சியின் உறுப்பினருமல்ல. ஆறு பந்திக் (சீக்கியக்) கமிட்டிகளிலும் உறுப்பினர் அல்ல. அனந்தப்பூர் சாகிப்பின் ஹொல்லா மொல்லா கூட்டத்திற்கு நான் போயிருந்தேன்; மாநிலச் செயலாளர் என்னைப் பேசும்படி அழைத்தபோது நான் பார்வையாளரிடையே இருந்தேன். நான் மனித உரிமைகள் பற்றிப் பேசினேன்; ‘‘தடா’’ வழக்கு ஜோடிப்பதற்கு காரணமான முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைப்போல ஆறு பாந்திக் கமிட்டிகளின் எந்தவொரு கூட்டத்திலும் எப்போதும் நான் கலந்து கொள்ளவே இல்லை.

**கேள்வி:** *என்ன காரணத்தினால் நீங்கள் கைது செய்யப்பட்டதாக நினைக்கிறீர்கள்? உங்களிடம் பியந்த் சிங் கொண்டுள்ள பகைதான் காரணமா?*

**பதில்:** நான் பஞ்சாப் - அரியானா உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தபோது ஒரு கிரிமில் வழக்கில் பிரதிவாதியின் சாட்சியாக என்முன்னே அவர் வந்தார். அவர் சாட்சியத்தை நான் மற்றும் நீதிபதி திவானா இருவருமே நம்பவில்லை. (அதனால்) அவர் எனக்கு எதிராக தவறான எண்ணத்தில் இருக்கிறார் என்று அவரது அடுத்தடுத்த நடவடிக்கைகள் காட்டின.

என்னைக் கைது செய்த முறை; சட்டவிரோதமானதென்று அவர்களிடம் நான் தெரிவித்தபோதும் கூட எனக்கு விலங்கிட்ட முறை; மணிக்கணக்கில் என்னை வெயிலில் அவர்கள் நிறுத்தி வைத்தமுறை; பிறகு மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்ட ஒரு பையனைக் காட்டி என்னை மிரட்டிய முறை..... இவை என்னை அவமதிக்கும் நோக்கத்தோடுதான் செய்யப்பட்டவை என்று இப்போது நான் பார்க்கிறேன். என்னையும் கூடக் கைது செய்ய முடியும் என்பது மாநில மக்களை மிரட்டவும் மேலும் அதைரியப்படுத்தவுமே செய்யப்பட்டது.

**கேள்வி:** *மிரண்டுபோனதாக உணர்கிறீர்களா?*

**பதில்:** இல்லை. மிரண்டுபோனதாகவோ, அதைரியம் அடைந்ததாகவோ நான் உணரவில்லை. மனித உரிமைகளுக்காக மரணமடைய நான் தயாராகத்தான் இருக்கிறேன். மனித உரிமைகள் என்கிற லட்சியத்துக்குப் போராட நான் சண்டிகருக்குத் திரும்பப் போகிறேன்.

**கேள்வி:** *மற்றபிற மனித உரிமைக் குழுக்களைப் போலவே, பஞ்சாப் மனித உரிமைகள் அமைப்பும் சாமானியக் குடிமக்களது மனித உரிமைகளை மீறும் தீவிரவாதிகளை ஆதரிப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** இது தவறான கருத்துப் பிரச்சாரம். சட்டத்தின் ஆட்சியை அமைதி வழியில் மீட்டமைப்பதுதான் பஞ்சாப் மனித உரிமைகள் அமைப்பின் நோக்கம். இதற்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. பஸ் மற்றும் ரயில் பயணிகள் கொல்லப்படுவதை நாங்கள் கண்டித்துள்ளோம். கொலை செய்வது மோசமானது; ஆனால் போலீசு நிலையக் கொட்டடிக் கொலைகள் படுமோசமானது என்று நாங்கள் சொல்கிறோம். ஒரு தனிமனிதன் இன்னொரு தனிநபரைக் கொன்றால் அவன் ஒரு குற்றமிழக்கிறான்; இந்தியத் தண்டனை மற்றும் கிரிமினல் தண்டனைச் சட்டங்களின்படி அவன்மீது வழக்கு நடத்த வேண்டும். சந்தேகத்துக்குரிய எவரையும் போலீசு கைது செய்யவும் விசாரிக்கவும் முடியும். ஆனால் அவர்கள் சிறைக் காவலின்போது சித்திரவதை செய்யவும் கொல்லவும் முடியாது என்று சட்டம் சொல்லுகிறது. அரசு சட்டத்தை மீறும்போது மனித உரிமை மீறல் என்பது வருகிறது.

**கேள்வி:** *ஆனால் தீவிரவாதிகளின் இம்மாதிரியான மனித உரிமை மீறல்களை விசாரிப்பது குறித்து என்ன சொல்கிறீர்கள்? மனித உரிமை அமைப்புகள் நடுநிலையாய் இருப்பதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றனவே!*

**பதில்:** அவை நடுநிலையாக இருக்கமுடியாது. அரசாங்க இயந்திரம்தான் சட்டம்-ஒழுங்குக்குப் பொறுப்பானது; அதை பயங்கரவாதிகளுடன் ஒப்பிட முடியாது. அவர்கள் குற்றம் புரிந்தால் கைது செய், விசாரணை வழக்கு நடத்து. ஆனால் சட்டத்தை உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ளாதீர்கள். மனித உரிமை அமைப்புகள், அல்ல; போலீசுதான் தீவிரவாதிகள் புரியும் குற்றங்களை விசாரிக்கவேண்டும். அரசு புரியும் கொடூர அக்கிரமங்களைச் சுட்டிக்காட்டுவது

படிப்பகம்

www.padippakam.com

தான் எங்கள் வேலையாக எதிர்பார்க்கப்படுகிறது.

**கேள்வி:** *வன்முறைப்பற்றி உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** நான் வன்முறைக்கு எதிரானவன். அது ஒருபோதும் நல்லது செய்யாது; சாமானிய மனிதனுக்குப் பெரும் துயரத்தை விளைவிக்கும். தீவிரவாதிகளின் வன்முறையினால் எதையுமே சாதிக்கமுடியாது. அரசு வன்முறையும் மக்களை ஒழித்துவிட முடியாது.

**கேள்வி:** *ஆயுதம் தூக்குவதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?*

**பதில்:** அரசு பயங்கரவாதம் எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்பது நிரூபணமாகி விட்டது. பெரும்பான்மையான இளைஞர்கள் நீல நட்சத்திர நடவடிக்கைக்கு (பொற்கோவில் மீதான 1984 இராணுவ அதிரடித் தாக்குதல் நடவடிக்கை) பிறகுதான் வன்முறைக்குப் போனார்கள். பொற்கோவில் வளாகத்துக்குள் அவர்களது உறவினர்கள் பலரும் கொல்லப்பட்டபோது அவர்கள் அதிர்ச்சிகளுக்குள்ளானார்கள்.

**கேள்வி:** *சில சந்தர்ப்பங்களில் வன்முறை நியாயமானது என்று நீங்கள் சொல்கிறீர்கள்?*

**பதில்:** இல்லை. ஆனால் நீதி மறுக்கப்படும்போது பழிவாங்குவதற்கு மக்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள் - பட்டாலா சிறப்பு குப்பிரண்டெண்ட் கோவிந்த்ராம் விவகாரத்தைப் போல. அவர் புரிந்த கொடூர அக்கிரமங்களுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் ராஜினாமா செய்தார்கள்; ஆனால் அரசாங்கம் செவிசாய்க்கவே இல்லை. பிறகு கோவிந்த் ராமின் ஒரே மகன் கொல்லப்பட்டான். (அப்புறம் கோவிந்த் ராமும் பழிவாங்கப்பட்டான்) ஆனால் ஒரு பேருந்தில் அப்பாவி பயணிகளை கொல்வதோ, போலீசின் உறவினர்களைக் கொல்வதோ, போலீசும் திருப்பித் தாக்குவதோ நியாயமானது அல்ல.



'தடா'வின கீழ் கைதாகியிருந்த, ஓய்வு பெற்ற பஞ்சாப் உயர்நீதிமன்ற நீதிபதி அஜித்சிங் பெயின்ஸ்.

**கேள்வி:** *தீவிரவாதிகள் பயந்தோடிக் கொண்டிருப்பதால் பஞ்சாப் நிலைமையில் ஒரு தீர்மானகரமான மாற்றம் ஏற்பட்டிருப்பதாக பத்திரிக்கைகள் எழுதுகின்றன. இந்தக் கணிப்பில் நீங்கள் உடன்படுகிறீர்களா?*

**பதில்:** போலீசும் பஞ்சாப் முதல்மந்திரியும் பத்திரிக்கைகளைத் தவறாக வழிநடத்துகின்றனர். ஒவ்வொருநாளும் ஒரு சில தீவிரவாதிகளைக் கொல்லவதாலும், பெரிய ஆரவாரம் செய்து மற்றவர்கள் சரணடைந்ததாக செய்தி வெளியிடுவதாலும் நிலைமை மாறி விடாது.

அரசியல் முன்முயற்சி எடுக்காதவரை சீக்கியர்களின் மனப்பாங்கு தனிமைப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். பஞ்சாப் முதல் மந்திரி கூறிக் கொள்வதைப்போல பிரச்சினை, சட்டம்-ஒழுங்கு அல்ல; அப்படி இருந்தால் நீல நட்சத்திர நடவடிக்கைக்குப் பிறகோ, காட்டுரோஜா நடவடிக்கைக்குப் பிறகோ அது தீர்ந்திருக்க வேண்டும்.

**கேள்வி:** *அரசியல் முன்முயற்சி பற்றிப் பேசுகிறீர்கள். அதன் பொருள் என்ன?*

**பதில்:** முதலில் ஒடுக்குமுறை அரசு இயந்திரத்தை அகற்றிவிட்டு சட்டத்தின் ஆட்சியை மீட்டமைக்க வேண்டும். யாருமே பாதுகாப்பாக இல்லை. ஒரு அப்பாவியைக் கொல்வது 1000 பேரைப் பாதிக்கிறது. இந்த ஆண்டுக்கான விருதுப்பட்டியலைப் பார்த்தீர்களேயானால், கிரிமினல் குற்றத்துக்காக வழக்கு விசாரணைக்குட்பட வேண்டிய போலீசுக்காரர்களுக்கு வீரசாகச விருது தரப்பட்டிருக்கிறது. சிவில் நிர்வாகத்தின் மேலாண்மை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## பெண்கள் ஆர்ப்பாட்டம் அரசு பணிந்தது!

திருச்சி - தென்னூர் சவேரியார் கோவில் தெருவிற்கு குடிநீர், சாக்கடை, கழிப்பிட வசதி கோரி 'விலைவாசி எதிர்ப்பு பெண்கள் போராட்டக் குழு'த் தலைமையில் பகுதிப் பெண்கள் திரண்டு 27-7-92 அன்று கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சகோதரி வாணி தலைமையில் சகோதரி சுதந்திரா பகுதி நிலைமையை விளக்கிப் பேசிக் கொண்டிருக்கும் போது பெண்காவலர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடாது என தடுத்தனர். அனுமதி பெற்றுதான் நடத்துகிறோம் என்று கூறிவிட்டு தொடர்ந்து முழக்கமிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். சட்டப்படி இந்த இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்றும் டி.எஸ்.பி. வரும் வரை ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்றும் கலைந்து போங்கள்; இல்லையெனில் கைதுசெய்வோம் என்றெல்லாம் பலவாறாக வந்த மிரட்டலுக்கு அஞ்சிவிடாமல் பெண்கள் எதிர்த்து வாதிட்டனர். பிறகு சகோதரி வாணியை கலெக்டர் உதவியாளர் அழைத்து பேசினார். ஆர்ப்பாட்டம் நடத்த வேறு இடம் ஏற்பாடு செய்து தருவதாகக் கூறினார். ஆர்ப்பாட்டம் முடியும் தருவாயில் இருந்தாலும் இவ்விடத்தில் திரண்டிருந்த பொதுமக்களின் நிலையையும் கணக்கிட்டு 'ஆர்ப்பாட்டத்தை பெண்கள் முடித்துக் கொண்டனர். திங்கட்கிழமையாதலால் மனுக்கொடுக்க வந்திருந்த நூற்றுக்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டனர். மனுகொடுப்பதால் பயனில்லை; வீதியில் இறங்கிப் போராடினால்தான் விடிவு கிடைக்கும் என அவர்களுக்கு இப்போராட்டம் உணர்த்தியது.

ஆர்ப்பாட்டத்தின் பலனாய் மறுநாளே பகுதியில் சாக்கடை கட்டப்பட்டது. 4 நாட்களாக தண்ணீர் வராததால் மீண்டும் பகுதிப் பெண்கள் திரண்டு சென்று தலைமை பொறியாளரிடம் முறையிட்ட பின் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

## கரசேவை குண்டர்களுக்கு எதிராக இயக்கம்

திருச்சியில் 20-7-92 அன்று ம.க.இ.க., பு.மா.இ.மு., ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்து மதவெறிக்கு எதிராக ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் நடத்தின. அயோத்தியில் பா.ஜ.க., வி.இ.ப. - ஆர்.எஸ்.எஸ். மதவெறிக் கும்பல் நடத்திய 'கரசேவை'யைக் கண்டித்தும் துணைபோன காங்கிரசை தோலுரித்தும், மதவெறிக்கு பலியாகாமல் உழைக்கும் மக்கள் ஒன்று திரளும்படி அறைகூவியும் முழக்கமிட்டனர். 75 பேர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு பார்வையாளர்கள் பலரும் வழியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவ்வியக்கம் சுமார் 10 ஆயிரம் பேரிடம் பிரச்சாரத்தை எடுத்துச் சென்று நல்ல வரவேற்பைப் பெற்றது.

## *உடையாரிடம் சோரம்போன 'ஜெ' ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்*

*மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் 29-8-92 அன்று புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை உடையாருக்கு தாரைவார்த்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். தோழர் ரவி தலைமையில் தோழர் கதிரவன் (ம.க.இ.க.) ஆர்ப்பாட்டத்தில் உரை நிகழ்த்தினார். ஜெயாவின் ஊழல் ஆட்சியை மாணவர் - மக்கள் விரோத போக்கையும் அம்பலப்படுத்தினர். கல்லூரி தனியாருக்கு செல்வதால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என விளக்கிப் பேசினர்.*

*மேலும் இப்பிரச்சினை தொடர்பாக மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சுவரொட்டி பிரசுரங்கள் வாயிலாக மதுரை, திருச்சி, சென்னையில் இயக்கம் எடுக்கப்பட்டது.*

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arocot Road, Madras - 600 024. Editor: R.SHANMUGARAJ


www.padippakam.com



குறவர்கள் நாடோடிகள் தான்; ஆனால் நாட்டு குடிமக்கள்! நாடோடி வாழ்க்கையாய் இருந்தாலும் முன்பெல்லாம் வயிற்றுப்பாட்டுக்கு அவ்வளவு பிரச்சினையில்லை. ஊசி, பாசி - முயல்கறி, கொக்கு கறி விற்பது மட்டுமல்ல அறுவடை காலத்தில் விவசாயக் கூலிகளாகவும், நகர்ப்புறத்தில் அன்றாடக் கூலிகளாகவும் இருந்து காலந்தள்ளினார்கள். ஆனால், இன்று? விவசாயிக்கோ போகமில்லை. தொழிலாளிக்கோ வேலைநீக்கம். புதிய தலைமுறைக்கோ வேலையின்மை. வறுமையின் பிடியில் மக்களின் வாழ்க்கைத்தரம் நாளும் குறைகிறது. பட்டினிச் சாவுகள் பெருகுகின்றன. இந்நிலையில் நாடோடிகளின் வாழ்வோ கேள்விக்குறி! பிச்சையெடுப்பதே பிரதானமாகிவிட்டது. பற்றாக்குறைக்கு குப்பை கூளங்களை நாடுகிறார்கள்! இக்குறத்தியும் குழந்தையும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தூக்கியெறிந்த சிகரெட் துண்டையும், மதுப்புட்டியையும் எடுத்துச் சுவைக்கிறார்கள். இன்று இவர்களது பசிக்கு கிடைத்தது இதுதானோ!?

இது வருகிற ஜனவரி மாதம் நடக்கவிருக்கும் பத்தாவது ஜவகர்லால் தங்கக் கோப்பை கால்பந்தாட்ட போட்டிக்காக சென்னையில் கட்டப்படும் விளையாட்டரங்கம். ஒன்றல்ல இரண்டல்ல 30 கோடி ரூபாய் செலவில் உருவாக்குகிறது தமிழக அரசு. முழுக்க முழுக்க மேலைநாட்டு பாணியில் சகல நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்படுகிறது. இந்தியாவிலேயே புதிய - நவீன தொழில் நுட்பத்தால் சர்வதேச தரத்திற்கேற்ப உருவாகும் விளையாட்டரங்கம் இதுதானாம்! ஏழுநாடுகள் பங்கு பெறும் இப்போட்டிக்கு வெளிநாட்டவர் வருவதால் அவர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணமே இவ்வாறு தயாராகிறதாம்! இங்குள்ள ஒளி வடிவமைப்பைப் பார்த்தாலே வெளிநாட்டவர் மூக்கில் விரல் வைப்பார்களாம்!

# இதுதான் இன்றைய இந்தியா



மக்களோ நாடோடிகளாகிறார்கள். நாடோடிகளோ வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். ஆமாம், கும்பி கூழுக்கு அழுகிறான்; கொண்டைக்கு பூவைத்து ரசிக்கிறார்கள் ஆட்சியாளர்கள்! குறவர்களின் - நாடோடிகளின் வாழ்க்கையை முன்னேற்ற வக்கில்லாதவர்கள்; விளையாட்டுத் துறையில் திறமையாளர்களை உருவாக்கவும் திறமையானவர்களுக்கு வாய்ப்பளிக்கவும் துப்பில்லாதவர்கள்; இந்த கோலாகல விழாவின் மூலமாகவும் நவீன அரங்கத்தின் மூலமாகவும் என்ன சாதித்து விடப்போகிறார்கள்? இந்திய மக்களின் இருண்ட வாழ்க்கையை மூடி மறைத்துவிடப் பார்க்கிறார்கள். ஆக்கங்கெட்ட இந்த ஆளும்கும்பலை இன்னுமா பொறுத்துக் கொள்ள வேண்டும்?

படிப்பகம்